படைப்பு

ஊற்று-6 | நதி-5 | செப்டம்பர் - 2023 | திங்களிதழ்
ISSN : 2582-4015

# தகவு

கலை இலக்கிய மின்னிதழ்

www.padaippu.com



## படைப்பு சங்கமம் 2023

படைப்பு
# தகவு
கலை இலக்கிய மின்னிதழ்

ஊற்று-6 | நதி-5 | செப்டம்பர் 2023

நிறுவனர் & நிர்வாக ஆசிரியர் :
**ஜின்னா அஸ்மி**

ஆசிரியர் :
**ஆசியாதாரா**

நிர்வாகக் குழு :
**சகா(சலீம் கான்)**
**ஜெ. ராஜா ஜெயகரன்**

தலைமை நிருபர் :
**வலங்கைமான் நூர்தீன்**

நிருபர்கள் குழு :
**முனைவர் கோ.நித்தியா**
**க.சோ.திருமாவளவன்**
**கலிங்கப்பட்டி க.கருப்பசாமி**

முதன்மை வடிவமைப்பாளர் :
**கமல் காளிதாஸ்**

வடிவமைப்பு :
**ப.முகம்மது புலவர் மீரான்**

ஓவியக் கலைஞர்கள் :
**அழ.ரஜினிகாந்தன்**
**அன்பழகன்**

படைப்புகள் மற்றும்
கருத்துக்களை அனுப்ப வேண்டிய
மின்னஞ்சல் முகவரி :
padaippugal@padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
அரசு பதிவெண் : 521/2018
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்
கடலூர், தமிழ்நாடு - 607002.
admin@padaippu.com
9489375575

நேர்காணல்கள் மற்றும் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவரவர் கருத்துக்களே. கதை மற்றும் கவிதைகளின் கருத்துக்கள் கற்பனையே. படைப்பு தகவு மின்னிதழின் கருத்துக்கள் அல்ல.

## உள்ளே...


- **தலையங்கம்** -பக். 04
- **கலை இலக்கியக் கொண்டாட்டம் படைப்பு சங்கமம் 2023**
  - சுசித்ரா மாறன் -பக். 05
- **படைப்பு எட்டாம் ஆண்டு விழா அனுபவங்கள்**
  - கவிஜி -பக். 20
- **சுஜாதாவின் கிண்டலும் கிளாஸிஸமும்**
  - அமிர்தம் சூர்யா -பக். 30
- **வானமே வியந்து வானவில்லில் புன்னகைக்கிறது**
  - வலங்கைமான் நூர்தீன் -பக். 43
- **சொற்களால் நிகழும் கொலை**
  - கவிஜி -பக். 60

## சிறுகதைகள்


- **குப்பன்ன பாத்துக்குவான்**
  – சத்தியராஜ் குப்புசாமி –பக். 35

- **சிறுகோட்டுப் பெரும்பழம்**
  – ஆண்டன்பெனி –பக். 48

- **பொன்வண்டு காலம்**
  – நித்வி –பக். 54


## கவிதைகள்


- **மூசா** –பக். 46
- **கோவை நா.கி.பிரசாத்** –பக். 46
- **க.ராஜகுமாரன்** –பக். 46
- **மு.முபாரக்** –பக். 46
- **மகேஷ் சிபி** –பக். 47
- **யாழ் தண்விகா** –பக். 47
- **ஜெயாபுதீன்** –பக். 47

# தலையங்கம்

**வணக்கம்.**

படைப்பு ‘தகவு’ அறுபத்திஐந்தாவது இதழ் உங்கள் கண்முன் பரந்து விரிந்திருக்கிறது.

ஒரு கொண்டாட்டமான மனநிலையோடு இந்த இதழ் வெளிவந்திருக்கிறது.

படைப்புக் குழுமம் ஒரு பெருவிழாவைப் பெரும்பொறுப்புடன் நடத்தி முடித்திருக்கிறது. விழாக் கொண்டாட்டங்கள் என்பன எப்போதும் மகிழ்ச்சியை முன்னிறுத்த மட்டுமல்ல.. அவை அடையாளங்கள். சமூகத்தின் புதுப்பித்தல்கள். இருப்பை நிலைநிறுத்துவன. இணையத்தில் இயங்கும் பல குழுக்களுக்கு நடுவில்தான் படைப்பும் இயங்கிவருகிறது. ஆனால் அதன் தனித்துவமிக்க செயல்பாடுகள் பல படைப்பாளர்களை நம் தளம் நோக்கி கவர்ந்துவிடுவதுடன் நல்ல பல படைப்புகளையும் வெளிக்கொணர வைக்கின்றன. இதழ் வெளியீடு, பதிப்பகம், விருது வழங்கல் என இலக்கியச் செயல்பாடுகளுடன் சமூகச் செயல்பாடுகளையும் தன் தோள்களில் சுமந்து இனிதாய்ப் பயணிக்கிறது படைப்புக் குழுமம். தன்னுடன் இணைந்து பல்லாயிரக்கணக்கானோர் படைப்புவழி பயணிக்கின்றனர் என்பதைப் பொறுப்புடன் உணர்ந்து செயலாற்றிவருகிறது. தரமான படைப்புகளை அடையாளங் காட்டி ஊக்கப்படுத்தும் செயல்பாட்டின் தொடர்ச்சியாக இந்த வருடப் பரிசளிப்பு விழாவும் நூல் வெளியீடும் அமைந்தன. தமிழை அடுத்த தளத்திற்குக் கொண்டு செல்லும் படைப்பாளர்களின் சங்கமமாக மட்டுமல்லாமல், விருந்தினர்களுக்குப் படைப்புக் குடும்ப விழாவாய்த் தோன்றிவிட்ட வண்ணம் படைப்புக் குழும விழா மிகச் சிறப்பாய் நடந்துள்ளது.

விழா குறித்த தொகுப்புக் கட்டுரையும் அனுபவக் கட்டுரையும் இதழில் வெளியாகியுள்ளன.

அம்மையார் ஹைறூன்பீவி நினைவு சிறுகதைப் பரிசுப்போட்டியில் சிறப்புப் பரிசு பெற்றிருக்கிற சிறுகதைகள் ‘குப்பன்ன பாத்துக்குவான்’, மற்றும் ‘பொன்வண்டு காலம்’ இவ்விதழில் வெளியாகியுள்ளன. சாதி மையமிட்ட ஒரு சமூகத்தில் சாதி தாண்டித் திருமணம் செய்து வெளியூரில் வாழ்ந்துவரும் ஒருவனை எது தன் ஊர் நோக்கி இழுக்கிறது என்பதுதான் ‘குப்பன்ன பாத்துக்குவான்’ கதைக்கரு. வன்மையாகக் கண்டிக்க வேண்டிய வேறுபாடுகளை மென்மையாக உணர்த்திவிடுகிறது கதை. ஆற்றில் மண் அள்ளி வாழ்வோர், மாடு கண்ட நோய், அந்நோயைக் கிராமத்தார் அணுகும் முறை, விளையாட்டுப் பிள்ளைகள், உதவாத மாட்டின் இறுதி நிலை என நல்ல ஒரு கிராமத்துக் கதையாக உருவாகியிருக்கிறது ‘பொன்வண்டு காலம்’ சிறுகதை.

கேலி கிண்டல்களால் நிகழும் கொலை பற்றிய திரைப்படப் பார்வையாய் உருப்பெற்றிருக்கும் உலக சினிமா, கிளாசிஸம் பற்றி எளிமையாய்ப் புரியவைக்கும் அமிர்தம் சூர்யாவின் கட்டுரை, புத்தனின் புனைபெயர் ஆந்தை நூல் குறித்த விமர்சனம், பேரன்பிற்காய் ஏங்கும் பெண் குறித்துப் பேசும் வெயிலோடு விளையாடி பகுதி என இவ்விதழின் பகுதிகள் அமைந்துள்ளன.

கவிதைகள், கட்டுரைகள், தொடர்கள், அனுபவங்கள் என நிறைந்திருக்கும் இந்த மாதத் தகவின் அனைத்துப் பகுதிகளையும் வாசியுங்கள்.. விவாதியுங்கள்.. பகிருங்கள்.

நன்றி.

ஆசிரியர். ■

சுசித்ரா மாரன்

# கலை இலக்கியக் கொண்டாட்டம்

## படைப்பு சங்கமம் 2023



இலக்கியக் கூட்டமோ.. நூல் வெளியீடோ.. ஒளி குறைந்த அரங்கம், தரையோடு மேடை, அதிகபட்சம் முப்பது பேர் என்பது எழுதப்படாத விதியாக இருந்ததெல்லாம் ஒரு காலம். குளிரூட்டப்பட்ட பிரம்மாண்ட அரங்கம், மிகப்பெரிய இலக்கிய ஆளுமைகள், முப்பதுக்கும் மேற்பட்ட நூல்கள் வெளியீடு, ஐந்நூறுக்கும் மேலான பார்வையாளர்கள், படைப்பாளிகள் எனத் திணறியது தி.நகர் பி.ட்டி.தியாகராயர் அரங்கம்.




படைப்பாளிகளைப் படுத்தியெடுக்க வேண்டாம் என வெப்பத்தை ஆதவன் குறைத்தனுப்பிய செப்டம்பர் 30 சனிக்கிழமை காலை 10.30க்குத் தமிழ்த்தாய் வாழ்த்துடன் படைப்பு சங்கமம் 2023, எட்டாவது ஆண்டு விழா தொடங்கியது.

செப்புகிற சொல்லும் ஒலிக்கின்ற இசையும் பறை என்ற சொற்பொருத்தம் இசையாக அளபெடுத்தது அரங்கில். மாற்று ஊடக அமைப்பினரின் இப்பறையிசைக்கு வந்திருந்த அனைவரின் உடலும் உள்ளமும் இயைந்தசைந்ததைக் காணமுடிந்தது.

படைப்பு குழும நிறுவனர் ஜின்னா அஸ்மி அனைவரையும் உள்ளார்ந்த மகிழ்வுடன் வரவேற்றார்.

முதல் அமர்வில் கலைவிமர்சகர் இந்திரன் மேடைக்கு அழைக்கப்பட்டார். உடன் ஹைக்கூவில் தனி முத்திரை பதித்த மு.முருகேஷ், திரைப்பட இயக்குநர் படைப்பாளர் பிருந்தா சாரதி, மலையாள எழுத்தாளர் ஷாஃபி செறுமாவிலாயி, எழுத்தாளர் அமிர்தம் சூர்யா, மருத்துவர் சுதாமன் ஆகியோர் மேடையை அலங்கரித்தனர். மேடை வரிசையின் இரு ஓரங்களிலும் காப்பாகக் கருப்பு உடையில் வந்தமர்ந்த கவியாளுமைகள் யவனிகா ஸ்ரீராமும் தேன்மொழிதாஸும் மேடையை மேலும் சிறப்பாக்கினர்.

நூல் வெளியீடு, மடை திறக்கும் மௌனம் என்ற முதல் நூலுடன் தொடங்கியது. அடுத்தடுத்து ஐந்து நூல்கள் வெளியிடப்பட்டன. நூல் வெளியீட்டினிடையே வாழ்நாள் சாதனையாளர் விருது பெறுகிற எழுத்தாளர் பொன்னீலன் அரங்கிற்குள் வருகை தர... அரங்கமே எழுந்து நின்று கரவொலி எழுப்பி மூத்த படைப்பாளியை மனம் நிறைய வரவேற்றது. மேடையிலமர்ந்த அவர் அன்றலர்ந்த மலரின் குளிர்ச்சியோடும் மழலையின் மகிழ்ச்சியோடும் நூல் வெளியிடும்

படைப்பாளிகளை ஆசிர்வதித்தார். அவரது உற்சாகம் அனைவரையும் தொற்றிக்கொண்டது.

சிறந்த ஓவியத்திற்கான சித்திரக்கலை விருது வழங்கப்படுவது பற்றிச் சிலாகித்துப் பேசிய கலைவிமர்சகர் இந்திரன் அவர்கள் ஓவியத்தை நான்காம் தமிழென அழைத்தார். சிறந்த வாசகருக்கான விருது வழங்கப்படுவது குறித்து ஆச்சர்யமடைந்தார்.

தொடர்ந்த நூல்வெளியீடுகளுக்குப் பின்னர் பேச வந்த திரைப்பட இயக்குனர், உரையாடல் ஆசிரியர், எழுத்தாளர் எனப் பன்முகம் கொண்ட பிருந்தா சாரதி அவர்கள் படைப்பாளிகளுக்குக் களம் அமைத்துத் தரும் படைப்பு குழுமச் செயல்பாடுகள் பற்றி விரிவாகப் பேசினார்.

**“உனக்குள் என்னையும்**

**எனக்குள் உன்னையும்**

**சுவரோவியங்களாகத் தீட்டிக்கொள்வதில்**

**ஜெயிக்கப்போவது யார்..?”**

என்ற இந்திரனின் கவிதையைப் பற்றி யோசித்துக்கொண்டே தேநீர் பருகி அரங்கம் மீள அறிவுறுத்தினார் தொகுப்பாளர்.

இடைவேளைக்குப் பிறகு தொடர்ந்த நூல் வெளியீடுகளில்... நூல் மற்றும் நூலாசிரியர் பற்றி சுசித்ரா மற்றும் செல்வகுமார் குரலிலும் பொருத்தமான படத்தொகுப்பிலும் ஒளிபரப்பான காணொளிகளில் மேடைக்கு வர மறந்து மெய்மறந்திருந்தனர் படைப்பாளிகள். இந்தச் சூழலில் பேச வந்த எழுத்தாளர் அமிர்தம் சூர்யா, பொன்னீலனுக்கும் தனக்குமான உரையாடல்களை சுவாரசியமாக எடுத்துரைத்தார்.

மாண்புமிகு மகளிர் பேச்சுப்போட்டி, கவிக்கோ பிறந்தநாள் பரிசுப் போட்டியின் வெற்றியாளர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. பால சாகித்திய புரஷ்கார் விருதுபெற்ற மு.முருகேஷ் அவர்களின் நூலான ‘கவிதைக்குள் கலந்திருக்கும் கதை’ என்ற நூல் வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து பேசிய முருகேஷ், செயற்கை நுண்ணறிவின் காலமாக உள்ள தற்காலம் ஓவியர்களின் இடத்தைப் பிடித்துக்கொண்டதைப் போலக் கவிஞர்களின் இடத்தையும் பிடித்துக்கொள்ளாமலிருக்க புதிய வளமான மொழிநடையைக் கவிஞர்கள் கைக்கொள்ள வேண்டும், என வலியுறுத்தினார்.

செவிக்குணவு தர விடப்பட்ட இடைவேளை மதிய உணவுக்காகவுமானது. “செந்நெல் மாற்றிய சோறு, தயிரொடு மிளகின் சாறு உள்ளிட்ட யாவும் உன்னை வளர்ப்பன தமிழா! ஆனால் உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே!” என்ற பாரதிதாசன் வரிகளை அசைபோட்டபடியே விரைந்து முடிந்தது மதிய உணவு இடைவேளை.

இரண்டாம் அமர்வில் எழுத்தாளர் சு.தமிழ்ச்செல்வி, எழுத்தாளர் கரிகாலன் உள்ளிட்ட படைப்பாளர்கள் மேடையில் வீற்றிருக்க நூல் வெளியீடுகள் தொடர்ந்தன. மலையாள எழுத்தாளர் ஷாஃபி செறுமாவிலாயி மலையாள இலக்கியத்தில் தமிழ் இலக்கிய மொழிபெயர்ப்பின் தேவை குறித்துப் பேசினார்.

அம்மையார் ஹைநூன்பீவி நினைவு சிறுகதைப்போட்டி வெற்றியாளர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. தொடர்புடைய மக்களுடன் வாழ்ந்து அவர்களது வாழ்வியலைக் கீதாரி, அளம் போன்ற நாவல்கள் ஆகப் படைத்திட்ட அனுபவத்தை எடுத்துரைத்தார் எழுத்தாளர் சு.தமிழ்ச்செல்வி.

இலக்கியம் தரும் வாழ்வியல் மாற்றங்கள் குறித்துத் தன் உரையில் குறிப்பிட்டார் திரைத்துறை நாடகவியலாளர் பேரா. மு.இராமசாமி அவர்கள்.

உண்ட களைப்பில் உறங்காதிருக்க மாற்று ஊடக அமைப்பினரின் ஒயிலாட்டம் அரங்கதிர நடைபெற்றது.




**"அடுத்தமுறை சந்திப்பின்போது**
**ஒரு குவளை தேநீர் அருந்தலாம் என்ற**
**என் வாக்கினையும்**
**உன்னுடனே எடுத்துச் சென்றுவிடுகிறாய்**
**அதன்பிறகெல்லாம்**
**தேநீர் கோப்பையின்**
**முதல் மிடறில் உன்னைத்தான்**
**அருந்துகிறேன்**
**ஒவ்வொரு முறையும்"**

*ஆண்டன் பெனி அவர்களின் கவிதையைச் சுவைத்தபடியே கடந்தது தேநீர் இடைவேளை.*

*மூன்றாம் அமர்வு படைப்பு சங்கமத்தின் மிக முக்கிய நிகழ்வுகள் அரங்கேறும் அமர்வென்பதால் அரங்கு நிறைந்த கூட்டம். இருக்கைகள் நிரம்பி வழிந்தன.*

*சிறைத்துறை DIG திரு.முருகேசன், சீனு ராமசாமி, ஜோ.மல்லூரி, ஈரோடு மகேஷ், தமிழன் பிரசன்னா என அனைவரின் முன்னிலையில் ஐயா பொன்னீலன் அவர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. தனக்கெழுத ஊக்கமளித்த தனது தாயை உருக்கமுடன் நினைவுகூர்ந்தவர் தன் பேத்தி தன் நூலை உலகப்பறவையாக்கியதைக் கூறி மகிழ்ந்தார்.*

*தேன்மொழிதாஸ், யவனிகா ஸ்ரீராம் ஆகியோர் இலக்கியச் சுடர் விருது பெற்றனர். அவர்களைப் பற்றிய காணொளிகள் விஜய் தொலைக்காட்சி கோபி நாயர் குரலில் வசீகரித்தன.*

*பூவிதழ் உமேஷ், நந்தன் ஆகியோரின் நூல்கள் விருது பெற்றன. ராம்தங்கம், திருச்செந்தாழை ஆகியோருக்கும் விருதளித்து மகிழ்ந்தது படைப்பு.*

*ஜோ.மல்லூரி அவர்களின் கட்டற்ற தமிழுரைக்குக் கைத்தட்டல் அடங்கவேயில்லை. சமூகத்திற்கு எழுத்தாளர்களின் பங்களிப்பு மற்றும் தன் வாழ்வில் வாசிப்பு ஏற்படுத்திய தாக்கம் குறித்து ஈரோடு மகேஷ் தனக்கேயுரிய நகைச்சுவையோடு சுவாரசிய உரையாற்றினார்.*

கலைகளையும் கண்களாகப் போற்றும் படைப்பு, இயல் இசை நாடக விருதினை மு.இராமசாமி அவர்களுக்கும், கலை பண்பாட்டு விருதை இயக்குனர் சீனு இராமசாமி அவர்களுக்கும், ஓவியப் பணிக்கான சித்திரக்கலை விருதைத் திண்டுக்கல் தமிழ்ப்பித்தனுக்கும் வழங்கி மகிழ்ந்தது. விருது பெற்று உரை நிகழ்த்திய சீனு இராமசாமி பிறநாடுகளில் எழுத்தாளர்களுக்கு வழங்கப்படும் முக்கியத்துவத்தை நம் நிலையோடு ஒப்பிட்டுப் பேசினார்.

இலக்கியம் தாண்டியும் சமூகத்திற்குத் தன் பங்களிப்பை வழங்கி வரும் படைப்பு குழுமம், தனக்குக் கிடைத்த நிதியுதவியை மடைமாற்றித் தன் கிராமத்திற்கு நூற்றுக்கும் மேற்பட்ட கழிவறைகளைக் கட்டித்தர வைத்த மாணவி ஜெயலட்சுமிக்கு மாண்புமிகு மகளிர் விருது வழங்கி மகிழ்ந்தது. பசுமை விருது, சிறந்த சூழலியலாளர் விருது ஆகியவையும் வழங்கப்பட்டன.

சிறந்த பதிப்பக விருது சிக்ஸத் சென்ஸ் பப்ளிகேஷனுக்கும் சிறந்த இலக்கிய அமைப்புக்கான விருது தாழ்வாரம் இலக்கிய அமைப்புக்கும் வழங்கப்பட்டது.

நிகழ்விடையே பேசிய தமிழன் பிரசன்னா, எழுத்தாளரின் ஒற்றை வரி கூட வாசகனின் மனதில் மிகப்பெரிய நேர்மறையான மாற்றத்தை உண்டாக்க வல்லது என்பதைத் தன் வாழ்வியல் உதாரணங்களோடு பேசி நெகிழவைத்தார்.

படைப்பு குழும நிறுவனர் ஜின்னா அஸ்மி, செயலாளர் ராஜா மற்றும் பொருளாளர் சலீம் கான் ஆகியோர் சிறைத்துறை நூலகத்திற்குக் கொடையாக ஐம்பதாயிரம் ரூபாய் மதிப்புள்ள நூல்களை வழங்கியது நிகழ்வின் முத்தாய்ப்பாக அமைந்தது.

நூல்களைப் பெற்றுக்கொண்ட






சிறைத்துறை DIG முருகேசன் சிறைக்கைதிகள் மனமாற்றத்தில் நூல்கள் பெரும்பங்கு வகிப்பதைக் குறிப்பிட்டுப் படைப்பின் பணியை வெகுவாகப் பாராட்டினார். பார்வையாளர்களும் நூல்களைக் கொடையாக வழங்கலாம் என்று அறிவிக்கப்பட்டதையடுத்து ஏராளமானோர் தங்கள் நூல்களை அளித்தனர்.

படைப்பின் மாதாந்திரப் பரிசுபெறத் தேர்வானவர்கள், தொடர் பங்களிப்பாளர்கள் என அனைவருக்கும் பதக்கங்கள், சான்றிதழ்கள், நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன.

கவிஞர் சுசித்ரா மாறன், குரல் கலைஞர் ரூபஸ் ஆண்டனி, திரைக்கலைஞர் ரேகா ஆகியோர் சிறப்பான நேரமேலாண்மையுடன் தொய்வின்றித் தொகுத்து வழங்கினர்.






சங்கமம் – 2023


டைப்பு சங்கமம் – 2023

# இலக்கிய விருது


படைப்பு சங்கமம் - 2023
செப்டம்பர் 30, சர். பிட்டி. தியாகராயர் கலையரங்கம்


படைப்பு சங்கமம் - 2023
செப்டம்பர் 30, சர். பிட்டி. தியாகராயர் கலையரங்கம்


செப்டம்பர் 30, சர். பிட்டி. தியாகராயர் கலையரங்கம்
கல்லறை

# இலக்கிய விருது


படைப்பு சங்கமம் - 2023
செப்டம்பர் 30, சர். பிட்டி. தியாகராயர் கலையரங்கம்


படைப்பு சங்கமம் - 2023
செப்டம்பர் 30, சர். பிட்டி. தியாகராயர் கலையரங்கம்


படைப்பு சங்கமம் - 2023
செப்டம்பர் 30, சர். பிட்டி. தியாகராயர் கலையரங்கம்

# இலக்கிய விருது



படைப்பு சங்கமம் - 2023
செப்டம்பர் 30, சர். பிட்டி. தியாகராயர் கலையரங்கம்




செப்டம்பர் 30, சர். பிட்டி. தியாகராயர் கலையரங்கம்
பறக்கும் வெண்குதிரை




செப்டம்பர் 30, சர். பிட்டி. தியாகராயர் கலையரங்கம்

## சிறப்பு விருது


செப்டம்பர் 30, சர். பிட்டி. தியாகராயர் கலையரங்கம்


படைப்பு சங்கமம் - 2023
செப்டம்பர் 30, சர். பிட்டி. தியாகராயர் கலையரங்கம்


செப்டம்பர் 30, சர். பிட்டி. தியாகராயர் கலையரங்கம்

# சிறப்பு விருது








## சிறப்பு விருது









# சிறப்பு விருது


















*மொத்தத்தில் ஒரு கோலாகலத் திருவிழாவாகவே நிறைவடைந்தது படைப்பு சங்கமம் 2023.*

*கூடியிருந்த தமிழ் நெஞ்சங்கள்*

**“நிகழ்கையில் சாரல்**

**நினைக்க நினைக்கத்தான் மழை”** *என்ற கலாப்ரியாவின் கவிதையை நிகழ்வோடு ஒப்பிட்டபடி விடைபெற்றிருக்கக்கூடும்.*

கவிஜி



# படைப்பு எட்டாம் ஆண்டு விழா அனுபவங்கள்

பெரிய வட்டத்தில் சிறு புள்ளியாக இருப்பதைவிட சின்ன வட்டத்தில் வட்டமாகவே இருக்கலாம்.

இந்தத் துக்கமான உலகத்தில் யார் இவர்கள்... இப்படி சந்தோஷத்தை அள்ளித் தெளிக்கிறார்கள் என்றுதான் அருகில் இருந்தோர் பார்த்தார்கள். ரயில் பயணங்களில் ராத்திரி நிலவன்கள் நாங்கள். முதலில் முறைத்துப் பார்ப்போர் பிறகு கொஞ்சம் நெருங்கிப் பார்ப்பர். பிறகு மெல்லிய புன்னகையில்... பிறகு எங்களோடு சேர்ந்துகொள்வர். வாழ்க்கை அத்தனை சுலபம். நாம்தாம் உலகத்தைத் தலை மேல் போட்டுக்கொண்டு மூஞ்சியை உர்ரென்றே வைத்துக்கொண்டிருக்கிறோம்.

அப்படியாக சென்னைப் பயணம் இனிதே தொடங்கியது. அது 29 வெள்ளி இரவு.

வெள்ளி இரவுக்கு நாங்கள்தான் சிறகு. கூட ரயிலின் டபக் டபக் ஆட்டம்... சிக்கு சிக்கு கூத்து... டமார் டமார் சிரிப்பு. தண்டவாளம் எல்லா இடத்திலும் முத்தமிடுமா என்ன.. மொத்தி எடுக்கவும்தான் செய்யும். காதல் அப்படித்தானே ரயிலே என்றேன். ஆமாம் மயிலே என்ற ரயிலுக்கும் தூக்கம் இல்லை. எனக்கும் தூக்கமில்லை. தூக்கமில்லை வழக்கம்தான். துக்கமில்லை என்பது “படைப்பு” கொடுத்த கரம்.

கமல்... தம்பி காதலாரா... கூட நான். மூன்று திசைகளும் சென்னை என்ற விசைக்கு இழுபட... பேசிப் பேசி இசைந்தோம்.

தம்பி விக்கி எங்களோடு வந்தாலும்... அவனுக்குப் பக்கத்துப் பெட்டி. அண்ணே அண்ணே என்று அவன் சொல்லும் அழகே தனி. நீண்ட நெடு நாளைக்குப் பிறகு சிரிக்கும் கண்களைத் தம்பி விக்கியிடம் கண்டேன். திருப்பூரில் அன்பன் விவெ... குடும்பத்தோடு ரயிலேற, குட்டிப்பையன் வெற்றிமாறன் கண்களில் குதூகலம். ரயிலையே அவன்தான் ஓட்டுவது போன்ற பெருமிதம். துளியூண்டு நட்சத்திரம் அவன். தூக்க விடவே இல்லை. அப்பா பையன். அடுத்த நாள் கொஞ்சம் பழகிவிட்டான்.

ஜன்னல் வழியே நாலைந்து முறை பறந்து இரவை அசைத்து தொடுவானம் தொட்டு, சிறுமலை... பொட்டல் வெளி... மேட்டாங்காடு... மேகத் தூது என... இரவுக்கும் எனக்கும் வழக்கம் போல ஏகப் பொருத்தம். சென்னைக்கும் கோவைக்குமான தூரம் குறைந்துவிட்டது. சட்சட்டென விடிந்துவிட... படபடவெனச் சென்ட்ரல். “வாடா குல்லாக்காரா... பாத்து ஒரு வருஷம் ஆச்சு” என்று முனகியது. காற்றில் முத்தமிட்டுக் காதில் ஒரு திருகு. கழுத்தில் சாய்ந்துவிடத் தத்தளிக்கும் அதிகாலைத் தூக்கம். கண்களை அகலத் திறந்து இதயத்தைச் சமன்படுத்தினேன்.

இந்த முறை நிகழ்வு அரங்கத்துக்கு அருகே அறை பார்த்திருந்தான் தம்பி. அடடா என்று ஆட்டோ அள்ளிக்கொண்டு சென்றுவிட்டது. ஒவ்வொரு முறையும் வேக வேகமாய் நேரம் போதாமல் தடுமாறுவோம். இந்த முறை நேரத்தைச் சரியாகத் திட்டமிட்டோம். மெல்லக் குளித்து மெல்லுடை தரித்துப் படி இறங்கினால்... பவளம் போல இட்லி. கூடவே பருவம் போல நம்ம வடை. என்ன, இந்த செல்ப் சர்வீஸ்தான் ஒரு முடை. தம்பிகள் இருக்கத் தவிப்பு ஏன். வாங்கிக் கொடுத்துவிட்டார்கள்.

இரண்டு டியர்களும் முன்பே நண்பர்களோடு நாட்டியத்தில் இருக்க... (இரண்டு ரஞ்சித்களும்... இதயத்துக்கு இலகுவானவர்கள்) அரங்கத்தை நெருங்குகையில் கூட்டம் ஆகிவிட்டோம்.

அன்றைய நாளின் வரம் மட்டுமல்ல... காலத்துக்குமான வரம் ஒன்று கிடைத்தது. நான் அரங்க வாசலில் நுழையும் அதே நேரம்... ஐயா பொன்னீலன் அவர்களும் வண்டியை விட்டு இறங்க, நேரம் சரியாக நேர்கொண்டு கீர்த்தி செய்திருந்தது. ஓடிச்சென்று கையைப் பற்ற, புன்னகை தவழும் முகத்தில் கண்களில் ஒளி பாய்ச்சிய அந்தச் சிவப்பன் (அமிர்தம் சூர்யாவின் அழகு மொழி) கைகளைப் பற்றிக்கொண்டு.. அப்படி ஒரு அழுத்தம். அப்படி ஒரு திருத்தம். அப்படி ஒரு ஆசுவாசம். பேச்சு இல்லை. பார்வையும் புன்னகையும் அப்படியே விழுங்கியது. எழுது எழுது என்று சொல்வது அது. இலக்கியச் சூட்டை உணர்ந்தபோது இல்லாமல் போகலாம் எழுத்துக்காகவே என்று தோன்றியது. அநேகமாக அரங்கத்தில் அவர் பற்றிய முதல் கைகள் என்னுடையதுதான். அன்று நான் பற்றிய முதல் கைகளும் அவருடையதுதான். வாழ்நாள் சாதனையாளர் விருது அவருக்கு. அதை வாங்கும் அவரின் வாழ்நாள் கைகள் எனக்கு.

அவர் உள்ளே செல்ல... வாசலில் தோழர் ஜின்னா. பட்டுச் சட்டை பட்டு வேட்டியில் வேட்டை இனிதான் ஆரம்பம் என்பது போல. ஆனால் அதே ஆதுரப் புன்னகை. என்னைக் கண்டாலே அவர் ஒரு பிரமிப்பை அன்பாய் வெளிப்படுத்துவார். அது அப்போதும் நிகழ்ந்தது. கை கொண்டோம். கட்டிக்கொண்டோம். கவிஜி தோழர் வந்தாலே.. அது பெரிய கூட்டம்தான் என்று சொல்லிக்கொண்டே தம்பிகள் எல்லாருக்கும் வணக்கம்.. கைகுலுக்கல். வரவேற்பு.

உள்ளே நுழைந்ததுமே... பெயர்களைப் பதிவு செய்தோம். பேரன்பன் பிரபு சங்கர் அவர்களைப் பார்த்ததும் கட்டிக்கொண்டோம். போட்டோ எடுத்தோம். எடுக்கையில் சொன்னார்.

“மயிலோடு ஒரு போட்டோ...”

அப்போதே மயில் மனம் ஏறத் தொடங்கிவிட்டது.

குளிரூட்டப்பட்ட அரங்கம். குண்டு பல்புகள் எரிந்து அணைந்து விளையாட்டு காட்டும் டங்ஸ்டன் வௌவால்கள். அரங்கம் ஆங்காங்கே அன்பர்களைக் கட்டிக்கொள்ள ஆரம்பித்திருந்தது. சிறப்பு விருந்தினர்கள் மேடை ஏற விழா புத்தாடை அணியத் துவங்கியது.

பிரம்மாண்டமான விழா இது. இன்றைய கால கட்டத்துக்குத் தேவையான யுத்திகளை உள்ளடக்கிய பதாகைகள், வீடியோ போட்டோ லைட்டிங் செட் அப்கள் என்று அதகள அத்தியாயங்கள்தான் அடுத்தடுத்து.

முதலில் சொல்ல வேண்டியது... கவிஞர் சுசித்ரா மாரன் அவர்களின் தொகுப்புரையைப் பற்றித்தான். பறித்த பூக்களை மேட்டில் அமர்ந்து



மெல்லிய நீரோடையில் ஒவ்வொன்றாக விடுவது போல ஒவ்வொருவராக அறிமுகம் செய்து வைத்த பாங்கு... தமிழ் வாழ்வாங்கு.

அதே போல, தோழர் ரூஃபஸ் ஆண்டனி அவர்களின் குரல் வழியே நாம் கூடு விட்டுக் கூடு பாய்ந்தோம். தோழர் செல்வரத்தினகுமார் அவர்களின் குரல் வழியே நாம் தேகம் நிறைந்த மொழியானோம். பேசிக்கொண்டே இருங்கள்.. தோழர்களே. கேட்டுக்கொண்டே இருப்பது சிலிர்ப்பு.

மேடையில் முதல் நிகழ்வாக சலங்கை அதிர... கால்களில் றெக்கை முளைக்க... ஆதி இசை பறையில் அதகளம் செய்ய... வேறென்ன ஆட்டம்தான். என் அருகே அமர்ந்து அதிரி புதிரி செய்துகொண்டிருந்த எங்கள் வெற்றிமாறனுக்குக் கொண்டாட்டமோ கொண்டாட்டம். எனக்கும் கால்கள் நிற்கவில்லை. மேடையில் ஆடி எத்தனை காலம் ஆகிவிட்டது என்ற சுய கருணை விம்ம... தலைக்குள் பறையிசை வா வா என்று அடித்திழுத்தது. அடி நெஞ்சம் நிறைய நானே ஆடியது போல மூச்சு வாங்கினேன்.

அடுத்து அவர்களே செய்த ஒயிலாட்டம்... ஒய்யார ஆட்டம். அதில் செய்த பாட்டு சம்பவம் காலத் தேவை.

இனி நூல் வெளியிடும் நேரம். ஒவ்வொரு நூலாக வெளியிட ஆரம்பித்தார்கள். ஒவ்வொரு நூலும் ஒவ்வொரு ரகம். தரம். அட்டைப்படமும் எழுதியவர்கள் பற்றிய குறிப்பும் ஐஸ்கிரீம் உச்சியில் இருக்கும் செர்ரியாக மினுமினுத்தன.

நண்பர்கள் நூல் கிட்டத்தட்ட 15 வெளியிடப்பட்டுவிட்டன. நேரம் கூடக்கூட கூட்டமும் கூடிவிட்டது. அரங்கம் முழுக்க தமிழும் அதன் தவமும் என்றுதான் சொல்ல வேண்டும். ஒவ்வொரு கண்களிலும்.. வாழ்தலின் நியாயம். ஒவ்வொரு கைகளுமே எழுதுகோலின் பிள்ளைகள் அல்லவா.

தேநீர் இடைவேளை. ம்ஹூம்.. அது தேனடை இடைவேளை. நிறைய நண்பர்களைச் சந்தித்தோம்.

பெயர் தெரியாத ஆனால் முகங்கள் தெரிந்த... முகங்கள் தெரியாத ஆனால்

பெயர் தெரிந்த சில நண்பர்கள் வந்து பேசினார்கள். வாழ்த்தினார்கள். கைக்குலுக்கல். கவன குலுக்கல். நன்றாக இருந்தது. நமது தொடர்ச் செயலுக்கு ஊக்கம் தரும் சொற்களுக்குச் சொந்தக்காரர்களை வாரி அணைத்துக்கொள்ளத்தானே வேண்டும். வார்த்தைகளில் அணைத்துக்கொண்டேன்.

இடைவேளைக்குப் பிறகு ஆனைமலைக் காடுகளில் சுள்ளி பொறுக்கும் நேரம். அது வரை இருந்த இயல்பு அப்போது எகிறத் தொடங்கியது. எத்தனை மேடை ஏறினாலும்... ஒவ்வொரு மேடையும் முதல் சில நொடிகளுக்கு மூச்சை வாங்கிவிடும். உணர்வால் நெருக்கமான தலைப்பு. உள்ளத்தில் பொங்கும் அதிர்வைக் காட்டவும் கூடாது. காட்டாமலும் இதயம் தாங்காது.

காணொளியில் நம்மைப் பற்றிய சிறு தகவல்கள். நூலைப் பற்றிய குறு வருடல்கள் ஓட... நான் மனம் உதிர அமர்ந்திருந்தேன். மேடையின் ஓரத்தில் இருந்து தோழர் சகா "வாங்க..." என்று ஜாடை செய்தார். படைப்பின் முதுகெலும்பு "சகா"வின் உழைப்பு அசாத்தியமானது. அதிர்ந்து பேசவே தெரியாத அவரின் முகத்தில் எப்போதும் மிளிரும் சாந்தம் வெண்மை கொண்ட வேதாந்தம் போலவே உணரப்படுவோம். படபடவென எழுந்து இருள் பாதி ஒளி பாதியாக இலவம் பஞ்சில் இஞ்சிமரப்பா பாறையைச் சுமந்துகொண்டு சென்றேன். காணொளி முடிய முடிய வழக்கம் போலப் பாட்டி நினைப்பு. நெஞ்சில் சுரந்த நினைவலைகளைப் பெருமூச்சு விட்டு அமைதிப்படுத்தி... மேடைக்குள் சென்றேன்.

"ஆனைமலைக் காடுகளில் சுள்ளி பொறுக்குகிறேன்" எனது ஒன்பதாவது நூல்.

ஆனாலும் முதல் நூல் போன்ற படபடப்புதான். முகம் முழுக்க இனம் புரியாத தவிப்பு. மேடை மலையென நிற்க... அருவி மேல் நோக்கிக் கொட்டுவது போலச் சிதறினேன். ஒவ்வொரு ஆளுமையும்... அதிர்வுதான். வரிசையில் முதலாவதாக மலையாள எழுத்தாளர் ஷாஃபி அவர்கள் நின்றிருந்தார்கள். வல்லிய கைக்குலுக்கல் அது. அடுத்து கவிஞர் மு.முருகேஷ் அவர்கள். முகம் முழுக்கச் சிரிப்பு பூத்து பெரிய அண்ணன்



போன்ற அன்னியோன்யம். அடுத்து எழுத்தாளர் சு.தமிழ்ச்செல்வி அவர்களின் புன்னகையும் வரவேற்பும் தாய்மை பூத்தது. அடுத்து ஐயா இந்திரன் அவர்கள். கண்ணாடி தாண்டும் கண்ணாடிக் கண்கள் மிளிர புன்னகையும் மலர்ச்சியுமாகக் கைகளைப் பற்றிக்கொண்டு நலம் விசாரித்தார். அன்னைக்கு போன்ல பேசினதை நினைவூட்டினார். எல்லாமே பட் பட் நொடி சமாச்சாரங்கள். அடுத்தடுத்து மேடையில் எழுத்தாளர் கரிகாலன் அவர்கள், திரைக்கலைஞர் ஐயா ராமசாமி அவர்கள், எழுத்தாளர்/இயக்குனர் பிருந்தாசாரதி அவர்கள், எழுத்தாளர் நா.வே அருள் அவர்கள், அடுத்து நம்ம அண்ணன் அமிர்தம் சூர்யா அவர்கள். (இந்த முறை இவரைக் கட்டிக்கொள்ள முடியவில்லை. இடம் வாய்க்கவில்லை. வெளியேயும் பார்க்க இயலவில்லை.)

அனைவரையும் வணங்கிவிட்டு நூலுக்குக் காத்திருக்க... நூல் படபடவென ஒவ்வொருவர் கையிலும் பச்சையம் பூத்துப் படி படி என்றது.




தோழர் ஜின்னா உற்சாகத்தோடு பேரன்போடு பெருமிதத்தோடு சால்வையைப் போர்த்திவிட்டுக் கட்டிக்கொண்டார். கட்டுக்கரும்பின் சுவை அந்தச் சிரிப்பில். ஒரே வயதுக்காரர்கள் என்றாலும்... அவரிடம் சிறுவனாகிப் பத்திரமாகும் தருணம் அது.

நூல் வெளியிடப்பட்டது. எனது ஒவ்வொரு நூலுமே ஒவ்வொரு நான். இல்லையா. ஒவ்வொரு நானையும் கட்டிக் காப்பாத்தி இந்தப் பூமிக்கு விட்டுச் செல்வதுதானே கடமை. என்னென்னவோ ஓட்டம். இசைபட வெளியிட்ட பிறகு நன்றி கூறி மேடையை விட்டு இறங்கினேன். சிறகு முளைத்த சிறு நிமிடம் மூளைக்குள் சில்மிஷம்.

இறங்கிய அடுத்த கணமே எங்கள் அமரின் "மாயா வனம்" நூல் வெளியீட்டுக்கான காணொளி. அப்படியே எழுந்து ஓடி வந்து மேடை அருகே நின்றுகொண்டேன். கூட என் தம்பிகள் அனைவரும். ஒரு நண்பனுக்காக இத்தனை பேர் சென்று நூலை வெளியிட்டு மரியாதையைப் பகிர்ந்துகொள்வது ஏன் என்ற ஆச்சரியம் மேடையில் மற்றும் அரங்கத்தில் இருந்தது. அமரின் நிழல்கள் நாங்கள் என்று சொல்லி அந்தத் தருணத்தைப் பெருமையோடு பகிர்ந்துகொண்டோம்.

அடுத்து கோபி சேகுவேராவின் "வாய்தாவிலிருக்கும் பதினைந்து லட்சம்" நூல் வெளியீடு. அதே போலக் காணொளி. கண்களில் சிவப்பு பாய்ச்ச.. சிவப்பு மனிதன் மேடை ஏறினான். இரண்டாவது நூல் அவனுக்கு. இது அவன் அரசியல் களத்தின் அச்சாரம் என்றால் தகும். அவன் அரசியலை அவன் பேச, நூல் ஆகி இருக்கும் அத்தனை கவிதைகளுமே முக்கியமானவை. மேடை அவனை அள்ளி அலங்கரித்தது. அவனும் அன்பில் திளைத்து ஆசுவாசம் அடைந்தான். கோபி சேகுவேராவின் தலைப்பு தீ கொண்டிருப்பதை உணர்ந்தோர் அவசரமாய் உள்ளே நுழைந்து கவிதையை அணைப்பர்.

அடுத்து அன்பன் விவெவின் "வானவிலுக்கு ஒன்பது நிறம்" நூல் வெளியீடு. முதல் நூல். முதல் காதல் போலப் படபடப்பில்





இருந்தான். மனைவியையும் மகனையும் மேடை ஏற்றி அழகு செய்தான். மூவரும் மேடையில் நிற்க... நூல் வெளியிடப்பட்டது. கவிதைக் காட்டில் முதல் ஒற்றையடி. அடுத்தடுத்து வழி கண்டடையும் விவெவின் கவிதைக் காலம்.

நான்கு நூல்களையும் வெளியிட்ட திருப்தி. இறங்கினோம். மலை இறங்கிய திருப்தி. மனம் மட்டும் அடங்கிய பாடாக இல்லை.

அடுத்து உணவு இடைவேளை. மதிய உணவு கேசரியோடு பிரியாணி சகிதம் ஒட்டுமொத்தமாக வயிறு நிறைந்தது.

ஷாஃபி அவர்களின் சிற்றுரை மலையாள வாசத்தோடு தமிழை மணந்துகொண்டது போல இருந்தது.

எழுத்தாளர் சு. தமிழ்ச்செல்வி அவர்களின் பேச்சு மேட்டாங்காட்டில் அமர்ந்து மதிய நேர இடைவெளியில் மயக்கும் காற்றுக்கு மறு பேச்சென இருந்தது. அவரைப் படைப்பு சார்பாக ஒருமுறை நேர்காணல் செய்திருக்கிறேன். நினைவில் நின்றாடியபோது நானும்கூட "கிடை"யில் அவர் மேய்த்த ஓர் ஆடென ஆனேன்.

ஐயா இந்திரன் அவர்களின் பேச்சு நின்று நிதானமாக ஆடும் எழுதுகோலின் ஆட்டம். எழுத்தின் வழியே வாசிப்பின் வழியே நிகழக்கூடிய வண்ணங்களைப் பூசிவிட்டு அழகு பார்க்கும் நேரம். பார்த்தோம்.

அடுத்துப் பேசினார்... ஹைக்கூவின் சிரிப்பு ஹைக்கூவின் சித்திரம் கவிஞர் மு.முருகேஷ் அவர்கள். இவரெல்லாம் நம்மோடு பேசவே மாட்டார் என்று நான் நினைத்ததுண்டு. ஆனால் மேடை ஏறிய மறு வினாடி பிரபு சங்கர், கவிஜி, வ.ரகுநாத் என்று இன்னும் சில கவிஞர்களின் பேரைச் சொல்லி அவர்களைத் தொடர்ந்து கவனிப்பதாக வாசிப்பதாகச் சொன்னார். அந்த நொடித் துள்ளலைச் சொல்ல புது வாக்கியம் தேடுகிறேன். சாப்பிடும் இடத்தில் எனக்குப் பின் நின்று "கவி இருக்கற இடத்தில சீக்கிரம் கிடைச்சிரும்" என்று வம்பும் செய்தார். ரசனையான மனிதர்.





அடுத்து அண்ணன் அமிர்தம் சூர்யா பேச்சு. பேச்சா அது. பேரிச்சம்பழம். அவர் மைக் முன் நின்றாலே நமக்கு மூச்சு இனிக்கும். பேசப் பேசவே இடையில் சென்னை மொழியில் பேசுவார். பார்க்கணுமே. விசில் அடித்துத் தெறிக்க விடத் தோணும். எழுத்தையும் படைப்பையும் பற்றிப் பேசிய அண்ணன் அமிர்தம் சூர்யா, மலேசியாவில் ஐயா நாஞ்சில் நாடன் சொன்னார் என்று கவிஜியின் நாவலைப் பற்றிப் பேசியபோது... "எதிர் காற்"றின் வீச்சை உணர்ந்தேன். அண்ணன் அமிர்தம் சூர்யா அவர்களுக்கு அப்போதே கைகூப்பி நன்றி சொன்னேன். நாஞ்சில் ஐயாவுக்கு மானசீகமாக மனத்தை அசைத்தேன்.

ஐயா பொன்னீலன் அவர்களை அண்ணன் அமிர்தம் சூர்யா சிவப்பா என்றுதான் அழைப்பேன் என்றும் அதுதொட்டு அலைபேசியில் நடந்த சம்பவங்களைத் தொகுத்துச் சொன்னதும்.. சொக்க வைக்கும் பாடுபொருள்.

டிஜிபி அவர்களின் பேச்சு... கம்பிகள் தாண்டிய தென்றலுக்கு வழிவிட்டது. சிறை நூலகமாக மாறுகையில்... கைதிகள் வாசகர்களாவார்கள். குற்றங்களின் வழியே உலகத்தைப் புரிந்தவர்களுக்கு... கற்றலின் வழியே உலகத்தைத் திருப்புவதை உணர்வுபூர்வமாக உணர்ந்தோம்.

தோழர் ஈரோடு மகேஷ்- ன் பேச்சு... பவளப் பாறையில் சறுக்கிய பரவசம். மனுஷன் சிரித்துக்கொண்டே சிக்ஸர் விளாசுகிறார். அவர் பேசியதில் எப்போதும் எப்போதோ நமக்கு உடன்பாடான ஒரு விஷயம்.. உங்களை நீங்களே பெருமைப்படுத்துங்கள் என்பது. ஆம். நம்ம நாமே ரசிக்கலனா நம்மை நாமே விரும்பலனா நம்ம நாமே கொண்டாடலனா வேற யார் அதைச் செய்வா? தற்பெருமைதான் கூடாது. தான் உழைத்துச் செய்து கண்ட பெருமைக்கான இடத்தை வெளிப்படுத்தலாம். நான் மட்டும்தான் பண்ண முடியும் என்பது வேண்டாம். நானும் பண்ணியிருக்கேன்.. பாருங்க என்பது வேறு. அதைத்தான் அவர் அழகாய் அவர் மொழியில் சொன்னார்.

நல்லவைகளுக்குத் தட்டும் எங்கள் கைகள் ஓயச் சற்று நேரம் பிடித்தது.

இயக்குனர் சீனு ராமசாமி உட்பட மிச்சம் இருக்கும் ஆளுமைகள் அவரவர் பேச்சுக்கு அவரவர் உயரம் காட்டினார்கள். எல்லாமே நூலுக்குச் சிறப்பு சேர்ப்பவை. எல்லாமே படைப்புக்குப் பலம் சேர்ப்பவை. எழுதிய கைகளுக்குக் கிரீடம். எழுதப் போகிற கைகளுக்கு உற்சாகம்.

தோழர் மஹா பர்வீன் சார்பாக மற்றும் அவரின் மகள் சார்பாக... இருவரின் விருதுகளையும் பெற்று வந்தேன். அத்தனை மகிழ்வு. ஏன் பாப்பா வரலயா என்று தமிழ்ச்செல்வி அம்மா கேட்கையில்... சிரித்துக்கொண்டே ஆமாங்கமா என்றேன். அப்பாவாக உணர்ந்த தருணத்தைத் தோழர் மஹா பர்வீனுக்குச் சமர்ப்பிக்கிறேன்.

தொடர் பங்களிப்பாளர் விருதின் வடிவமைப்பு அட்டகாசமாக இருந்தது. சிவப்பில் இருக்கும் மாயம் சிந்தனையின் வடிவமாக உணர்ந்தேன். படைப்புக்குத்







தொடர்ந்து பங்களிப்போம் என்று நினைத்துக்கொண்டேன்.

தோழர் பிரபு சங்கர் அவர்களின் “பப்புவும் பட்டுக்குட்டியும்” நூலைப் பப்புவோடும் பட்டுக்குட்டியோடும் வந்து வெளியிட்டார். பார்க்கப் பேரழகு. “படைப்பு”க்கு ஒரு தூண் இவர். நிகழ்வுக்காகச் சுழன்றுகொண்டே இருந்தவர்... அவர் நேரம் வந்ததும் தனக்குள் இருக்கும் கவிஞன் சூழ வந்து நின்றபோது மேடை மெருகேறியது.

நாற்பது நூல்களில்... கவிஞர் கலையரசியின் “நீ காதல் நான் கஸல்” தலைப்பு சட்டென வசியம் செய்தது. எழுத்தாளர் பிருந்தாசாரதி மேடையில் “நீ கா...தல் நா..ன் கஸல்” என்று பாடுவதற்கு முன்பே நான் பாடிக் காட்டிவிட்டேன், “நீ கா...ற்று நா...ன் மரம்...”

வழக்கம் போலக் கனத்த குரலில் இலக்கியம் பேசிய இயக்குனரை ரசித்தோம். வெண் தாடிக்குள்ளும் கவிதை முளைக்கும் இவருக்கு.



“ஜெய்” பார்த்ததும் கட்டிக்கொண்டு முத்தமிட்டான். அவன் ஆளே சீனி மூட்டைதான். எந்தப் பக்கம் தொட்டாலும் இனிக்கிறவன். அவனுக்கு இருக்கும் அன்றைய பிரச்சனையிலும் நூல் வெளியீட்டுக்கு வந்து நூல் வெளியிட்டவுடன் கிளம்பிவிட்டான். ஆனாலும் அன்றெல்லாம் இனித்துக் கிடந்தது அந்த முத்தம். கூட தோழர் மகேஷ் சிபி. அவருமே சோர்ந்துதான் இருந்தார். கூட தோழர் சாமி கிரிஷ். அவருக்கும் அதே பிரச்சனைதான். ஆசிரியர்கள் உண்ணாவிரதப் போராட்டம் போய்க்கொண்டிருக்கிறது. எல்லாம் சரியாகி அவர்கள் சாப்பிட வேண்டும் என்பதுதான் நமது வேண்டுதல்.

“மதிபாலா” சார் பின்னால் இருந்து முதுகைத் தொட்டுக் கவனம் திருப்பினார். திரும்பின நொடி நெஞ்சில் நிறையும் அவர் புன்னகை. நல விசாரிப்பு, நாட்கள் விசாரிப்பு என்று பேசப் பேசவே இந்தப் பக்கம் வேறொரு நண்பர் வந்துவிட... ஒருநாள் போதுமா... ஒவ்வொரு நாளையும் பகிர்ந்துகொள்ள. கவிஞர் வலங்கைமான் நூர்தீன் அவர்களைப் பார்த்தது... பேசியது. அண்ணன் ஆண்டன் பெனி அவர்களைக் கட்டிக்கொண்டு நலம் விசாரித்தது. அழ.ரஜினிகாந்தன் தோழரிடம் பேசியது. புதிய நண்பர்கள் பாஸ்கர் அவர்கள், பியானோ கட்டைகளின் வழியே இசையாய் வந்த ப்ரணா அவர்கள் என்று திரும்பும் பக்கமெல்லாம் புத்துயிர்த்த கண்கள். சில நண்பர்கள் தூரத்தில் இருக்க அருகே செல்லச் செல்லக் கூட்டத்தில் காணாமல் போனதும் நடந்தது. குறை இல்லை. ஒரே நேரத்தில் எல்லா முகங்களும் முன் வருகையில்.. வரும் தடுமாற்றம் அது.

யாரோ திரும்பித் திரும்பிப் பார்ப்பது தெரிய.. அட நம்ம பப்பிம்மா என்று பரவசம் ஊடுபாவியது.

“வாய் ஓயுதான்னு பாரு” என்று செல்லமாகக் கையில் அடித்துவிட்டுச் சிறுமி போலச் சிரித்த பப்பிம்மாவிடம் கூட முழுதாகப் பேச முடியவில்லை. அடுத்தடுத்து நகர்ந்துகொண்டே இருக்க... தெரிந்தவர்களைக் கூட விட்டுவிடவும் நேர்ந்தது. எழுத்தாளர் முத்து விஜயன் அவர்களின் உற்சாகம் நம்மைத் தொற்றிக்கொள்ளும். பார்த்ததும்



வந்து கை கொடுக்கும் அவருக்கு எப்போதும் புன்னகைதான். எப்போதும் சந்தோஷ உடல்மொழிதான். அவரின் உடை மொழியே பேரழகு. சிகை மொழியும் ஓரழகு.

இறுதியாக டியர் பாரதி வந்து சேர்ந்தான். உயர்ந்த உள்ளத்துக்காரன். உணர்வு பொங்க அணைத்துக்கொண்டோம். எழுத்தாளர் அண்டனூர் சுராவைச் சந்தித்தேன். குல்லாவை ரசித்தார். குல்லா நல்லா இருக்கு என்று சொன்ன ஆட்களின் எண்ணிக்கை இந்த முறையும் கூடியது. கவிஞர் லக்ஷ்மி அவர்கள் புன்னகை பூரித்த முகத்தோடு நிறைந்த சிரிப்பைத் தந்து பாராட்டினார். “சிவப்பு குல்லா.. முதல்லயே பாத்திட்டேன்” என்று மச்சம் விரியச் சிரித்தார். சிரித்துக்கொண்டேன். கவிஞர் சிவநேசன் அவர்களைக் கண்டதும் பேசியதும் அழகு. இடையில் ஒரு திடீர் வெளிச்சமென இபு தோழரைப் பார்த்தேன். பேசினோம்.

இத்தனை பெரிய விழாவைத் திட்டமிட்டு... திட்டமிட்டபடி நடத்தி முடித்த படைப்பு குழுமத்துக்கும் தோழர் ஜின்னா அவர்களுக்கும் அவரின் குழுவுக்கும் சகா தோழர்க்கும் பாராட்டுக்கள். வாழ்த்துக்கள். தொடர்ந்து இது நடக்க வேண்டும். புதிய புதிய எழுதுகோல்களைக் கண்டடையும் காலத் தேவை இது. நாங்களேதான் முன்னால இருப்போம் என்ற இறுமாப்பு எழுத்துலகத்தை உடைத்துப் போட இந்த எளிய கோல்களின் வழியே எழுத்து தலை நிமிர்ந்து சிரிக்கட்டும்.


படைப்பாளர்கள் சிரிக்கவே கூடாது என்று இல்லவே இல்லை. நன்றாகச் சிரித்து நன்றாகச் சிலிர்க்கலாம். உணர்வுகளை உள்ளடக்கி ஒன்றுமே ஆகப் போவதில்லை. ஒளியாக்கிப் பாய்ச்சுவதில் உறவுகள் பலப்படும். யாரையாவது விட்டிருந்தால்... மறதிதான் காரணமே தவிர மற்ற ஒன்றும் இல்லை. இது திறந்த மனது. யாரையும் விசனப்படுத்தாது.

நேரம் கூடக் கூட ரயில் காத்திருப்பது நினைவுக்கு வர... அறைக்குக் கிளம்பினோம். தயாரானோம். ஆட்டோ பிடித்து சென்ட்ரல் அடைந்து ரயிலேறி அமர்கையில் பேச்சு குறைந்திருந்தது. உடலும் மனமும் சோர்ந்திருந்தன. திருவிழா முடிந்த சாமி போல. நினைவலைகள் மட்டும்தான். வண்டி கிளம்ப... அவரவர் படுத்துக்கொள்ள... நமக்கு வழக்கம் போலத் தூக்கம் இல்லை. ஆனாலும் கண்கள் மூடி இருந்தன. மூடிய கண்களில்தான் எத்தனை காட்சிகள். விடியலைத் தேடி ரயிலின் முகப்பு வெளிச்சம் டார்ச் அடித்துக்கொண்டே பயணிக்க... விடியப் பறந்துவிடும் பறவை ஒன்று ரயிலில் ஊஞ்சல் ஆடிக்கொண்டிருந்தது. ■

தொடர் - 2

அமிர்தம் சூர்யா

# சுஜாதாவின் கிண்டலும் கிளாஸிஸமும்



இந்த அறிதல் இருந்தால் போதும்... என்று சென்ற தொடரில் முடித்திருப்பேன். ஆமா அறிதல் என்றால் என்ன?

ஒரு விஷயத்தை நாம் எப்படியெல்லாம் அறிந்துகொள்கிறோம்?

1- நம் புலன்களால் அறிதல். அதாவது கண்ணால் பார்த்து, காதால் கேட்டு, முகர்ந்து பார்த்து, சுவைத்துப் பார்த்து, தொடுதல் மூலம் உணர்ந்து பார்த்து அறிகிறோம்.

2- நம் அறிவைக் கொண்டு தர்க்கம் செய்து ஒரு விஷயத்தை அறிகிறோம்.

3- மூதாதையர் மூலமாக நமக்கு மரபியல் மூலம் கடத்தப்பட்டதன் வழியாக அறிகிறோம்.

4- தன்னைத் தனக்குள் தியானத்தின் வழியாக அறிகிறோம்.

இப்படியாகத்தான் அறிதல் வழியாக நாம் அறிகிறோம். அறிவதே அறிவாகிறது.

நான் என்று நாம் சொல்லிக்கொள்கிறோமே.. அந்த நான் என்பதும் ஒற்றை நான் அல்ல. அழகியல் நான், அரசியல் நான், உளவியல் நான், கலாச்சார நான், அதிகார நான், ஆணாதிக்க நான், ஆய்வு நான்.. இப்படி பல நான்களால்தான் நான் கட்டமைக்கப்பட்டுள்ளது.

உலகமும் ஒற்றை உலகம் அல்ல. அறிந்த உலகம், அறியாத உலகம், பிச்சைக்காரர் உலகம், நோய்மையின் உலகம், மூதாதையர் உலகம், மூழ்கிக்கொண்டிருக்கும் உலகம், ஆவிகளின் உலகம்.. இப்படி பல உலகங்களால் ஆனது இந்த உலகம்.

ஆக ஒரு நான், ஏதோ ஒரு அறிதல் முறையில் ஒரு உலகிலிருந்து இன்னொரு உலகிற்குப் பயணமாகும்போது அவதானிப்பு நிகழ்கிறது. அந்த அவதானிப்பில் ஒரு உண்மை அல்லது சிந்தனை அல்லது தரிசனம் புலனாகிறது. அதை ஒரு ஓவியன் சித்திரமாகவும் ஒரு சிற்பி சிற்பமாகவும் ஒரு கவிஞன் / எழுத்தாளன் படைப்பாகவும் முன்மொழிகிறான். இப்படித்தான் ஒரு படைப்பு தோன்றுகிறது. கொஞ்சம் இன்னும் ஈஸியா சொல்லணும்னா..

காலம் காலமாக நம் அறிவுக்குத் தெரியும், ஆப்பிள் பழுத்தால் கீழே விழும். இந்தக் காட்சி காலகாலமாகப் பார்த்த காட்சிதான். சர் ஐசக் நியூட்டன் எப்போதும் போல்தான் ஆப்பிள் கீழே விழுவதைப் பார்க்கிறார். அவரின் ஆய்வு நான் அவருக்குள் ஒரு தர்க்கத்தை உருவாக்குகிறது. (தர்க்கம் என்ற அறிதல் முறையில்) அறிந்த உலகிலிருந்து அறியாத உலகிற்குப் பயணமாகிறார். ஏன் ஆப்பிள் மேல் நோக்கிப் போகாமல் தரை நோக்கிக் கீழே விழுகிறது? அது எடைமிக்க பொருள் என்பதால் விழவில்லை. பூமிதான் எல்லாப் பொருள்களையும் ஈர்த்து வைத்துக்கொள்கிறது. அதற்கு ஒரு விசை இருக்கிறது என்று ஒரு தரிசனம் உண்மை தோன்றுகிறது. அதை ஆய்வு செய்துதான் புவியீர்ப்பு விசையை நிரூபிக்கிறார்.

இப்படித்தான் புத்தனுக்கு வாழ்வில் ஒரு தரிசனம்.. ஆசையே துயருக்குக் காரணம் என்ற தரிசனம் கிடைக்கிறது. இப்போது இது ஒரு மொக்கை தத்துவமாக ஏற்க முடியாத உண்மையாக நீங்கள் மறுதலிக்கலாம். ஆனால் அதுதான் அன்று கோலோச்சியது, ஆட்சி அதிகாரம் வரை ஆட்சி செய்தது.

பாரதிக்குக் கற்பனையில் ஒரு தரிசனம் தோன்றுகிறது. அதைத்தான், 'காசி நகர்ப் புலவர் பேசும் உரைதான் காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்' என்று எழுதுகிறார். பின்னர் அது நடந்ததுதானே.

அவ்விதமே வாழ்வில் பார்க்கும் கேட்கும் உணரும் (அல்லது கற்பனையில் அகப்படும்) சம்பவங்களில் காட்சிகளில் புதுசா ஒரு உண்மை, தரிசனம் நமக்குப் பளிச்சிடும்போது அது ஓவியமாக சிற்பமாக எழுத்தாக மாறுகிறது.

சரிங்க நமக்கு ஒரு அறிதல் முறையில் ஒரு விஷயம் அகப்படுது, அதை எழுதுறோம். எதுக்குங்க இந்த இஸம்? இஸம் இல்லாமத்தானே எழுதி வந்தோம்? இதை எவன் உருவாக்குறான்? அதனால் வாட் யூஸ்?

அதைச் சொல்லும் முன் என்னைப்பற்றி ஒரு சுய குறிப்பு - நான் அன்றும் இன்றும் ஒரு சயன்ஸ் ஸ்டூடன்ட்தான். இன்றும் ரோட்டில் போகும்போது அம்மான் பச்சரிசி, வெட்டுக்காயப் பூண்டு, பூனைகாலி, வெள்ளை கரிசலாங்கண்ணி, குப்பை மேனி, திருநீற்றுப் பச்சிலை, முடக்கத்தான் உள்ளிட்ட பல தாவரங்களை இனங்காண கண்கள் தேடியபடியே இருக்கும்.. நான் பிஎஸ்சி கெமிஸ்டரி படிக்கச் சேர்ந்து இரண்டாம் ஆண்டு பாதியில் படிப்பை நிறுத்தியவன். பின் இலக்கியப் பிரவேசம். 2000இல் ஒரு ஆசை உதித்தது. தபாலில் தமிழ் இலக்கியம் பட்டப்படிப்பு படிக்கணும்னு. ஆவலோடுதான் சேர்ந்தேன். அதாவது நவீன இலக்கியம் மேற்கத்திய மொழிபெயர்ப்பு இலக்கியம் எல்லாம் அந்தப் பாடத்திட்டத்தில் வரும், படிக்கலாம்னு நெனச்சேன். ஆனால் எனக்குத் தபாலில் வந்த பாடத்திட்டங்களைப் பார்த்தபோது நொந்துபோனேன்.

பாரதிதாசனின் அழகியல், புதுக்கவிதையில் வல்லிக்கண்ணன் பங்கு போன்றவை மனப்பாடப்பகுதி. பெருமைக்குச் சொல்லவில்லை. 2000இல் பிரம்மராஜன் சகவாசத்தில் அவரின் இலக்கிய சேவையால்

உலகக் கவிதைகளை எல்லாம் வாசிக்கத் தொடங்கிவிட்டேன். நவீனக் கவிஞர் ஞானக்கூத்தன் கவிதையோடு ஐரோப்பிய சர் ரியலிசக் கவிஞர் வாஸ்கோபோப்பாவின் கவிதையை ஒப்பிட்டுக் கட்டுரை எழுதிக்கொண்டிருந்த நேரம். அந்த நேரத்தில் பாரதிதாசனின் அழகியலை மனப்பாடம் செய்யச்சொன்னால் என்ன செய்வது? பாரதிதாசனைக் குறைத்து மதிப்பிடல. அதைத் தாண்டி முன் நகர்ந்து வேறு தமிழ்க் கவிதை வெளிக்குப் பயணமாயிட்டேன்னு சொல்ல வர்ரேன். மலையேறிக்கொண்டிருந்தவனை இழுத்துத் தரைக்குப் போட்டதுபோல் உணர்ந்தேன். டிகிரியும் முனைவர் பட்டமும் வாங்கிட்டா தமிழ் இலக்கிய உலகம் மதிக்கும்னு தப்பா நெனச்சிட்டேன். பள்ளிப் படிப்பை மட்டுமே முடித்தவன் சிறுகதை உலகத்தைக் கலக்கிக்கொண்டிருக்கும் காலம் இது. அப்போ அந்த உண்மை தெரியல. மீண்டும் படிப்பை நிறுத்தினேன். வீட்டில் மனைவி பயங்கரத் திட்டு. காரணம் அவள் கம்மலை அடகு வைத்துத்தான் எனக்குப் படிக்கப் பணம் தந்தாள். அதைக் கடைசி வரை மீட்க முடியாமலேயே மூழ்கியது. நல்லவேளை நான் மூழ்காமல் கரை சேர்ந்தேன்.

ஆக இஸங்கள் பற்றிய புரிதல் உண்டு. ஒரு இஸத்துக்காகக் கவிதை எழுத முடியாது. எனக்குக் கவிதை எழுத முதல்ல ஒரு வித்தியாசமான அல்லது என்னை உசுப்பேத்தும் ஒரு திறப்பைத் தரும் ஒரு சொல் வேண்டும். அந்தச் சொல் கிடைச்சாப் போதும். அதான் எனக்கு விதை. அந்த விதை மீது என் வருத்தம், மகிழ்ச்சி, கோபம், சூழல் எல்லாவற்றையும் ஊற்றுவேன். அது வளரத் தொடங்கும் பல வரிகளாக.. ஒரு கட்டத்தில் அது அறுவடைக்குத் தயாராகும். அப்போது அது நவீன கவிதை என்று பெயர் பெற்றிருக்கும். அந்தக் கவிதையை அறுத்து எந்த இடத்துக்கு அனுப்புவது என்று யோசனை ஓடும்.

நான் எழுதிய கவிதை தன்னிலை சார்ந்து இருக்கிறதா.. அதை நவீன விருட்சத்துக்கு அனுப்பு. கலைத்துவமா இருக்கா.. கணையாழிக்கு அனுப்பு. பிரச்சார நெடி அதுல இருக்கா.. கவிதாசரணுக்கு அனுப்பு. நாடகக் கூறு இருக்கா.. கோடு இதழுக்கு அனுப்பு. பரிசோதனை முயற்சியா.. சுகனுக்கு அனுப்பு. (என்னுடைய தமிழிலிருந்து தமிழாக்கம் கவிதைகள் சுகன்தான் பிரசுரித்தது.) நுண் அரசியல் இருக்கா.. கோடாங்கி இதழுக்கு அனுப்பு என்று வகைப்பாடு மனசுக்குள் தோன்றி அந்தக் கவிதையைப் போஸ்ட் செய்யும். ஆக இஸம் சார்ந்து என் கவிதை இயக்கம் இல்லாவிட்டாலும் இதழ்களின் இயக்கம், அதன் அரசியல், இதழ்களின் தேவை சார்ந்து இயங்கினேன். அதனாலேயே நான் சிறுபத்திரிகை மரபைச் சார்ந்தவன் என்று சொல்லிக்கொள்கிறேன்.

சரி... இஸம் என்றால் என்ன? இஸம் என்றால் இயம் என்று பொருள். அதாவது இயம்புதல்.. சொல்லுதல். ஒரு மாசத்துக்கான எல்லாப் புரவிஷனல் ஸ்டோர் பொருள் முழுக்க வாங்கி வந்தாச்சி, ஹாலில் குவிச்சாச்சி. அடுத்து.. இதை வீட்டம்மா என்ன பண்ணுவாங்க. கடலை, துவரம், சிறு பருப்பு, உளுந்து, மூக்கடலை இதெல்லாம் ஒரே இடத்துல அடுக்குவாங்க. ஏலக்காய், பட்டை, கிராம்பு, இலவங்கம் இதெல்லாம் ஒரு இடத்துல. பச்சரிசி, புழுங்கல் அரிசி, பிரியாணி அரிசி, நொய்அரிசி இதெல்லாம் ஒரு பக்கம். இப்படியே எல்லாப் பொருளும் அதனதன் தன்மையோடு அதனதன் இடத்துல அடுக்குவாங்க. அப்போதான் சமைக்கும்போது சரியான இடத்திலிருந்து எடுக்க முடியும். அவங்களை நாம கேட்போமா.. ஏன் எல்லாமே ஒரே இடத்துல இருந்தா என்னன்னு?

அதேபோல் படைப்புகளைத் தனித்தனி வகைப்பாட்டில் பிரித்து வைத்துக்கொள்ள வாசகனுக்கும் விமர்சகனுக்கும் இஸம் தேவைப்படுகிறது. குறிப்பாக படைப்பாளியும் ஒற்றைத் தன்மையில் ஒரே நிலைப்பாட்டில் கெட்டித்தட்டிப் போய்விடாதபடி தன்னை மீட்டெடுக்க புதுப்பித்துக்கொள்ள இஸங்கள் அவசியப்படுகின்றன.

ஹைபிஸ்கஸ் ரோசா சைனன்ஸிஸ். லின் தெரியுமா உங்களுக்கு? உங்க வீட்டுடன் உங்க வாழ்க்கையுடன் உங்களுடன் அதற்கு மிகுந்த தொடர்பு உண்டு. ஆனா இப்படி கேட்டா நீங்க தெரியாதது போல் முழிப்பீர்கள். ஹைபிஸ்கஸ் என்பது ஒரு பெரிய இனம். அதுல ஒரு பிரிவு சிற்றினம்தான் ரோசா

சைனன்ஸிஸ். அந்த லின் என்னங்க. அட பேரு வெச்சிக் கண்டுபிடித்த விஞ்ஞானி பெயர்தான் லின்னேயஸ். அதன் சுருக்கம்தான் லின். இஸங்கள் இப்படியாகத்தான் பிரிக்கப்பட்டு வகைப்படுத்தப்படுகின்றன. சரிப்பா, ஹைபிஸ்கஸ் ரோசா சைனன்ஸிஸ். லின் என்றால் என்ன? அட நம்ம செம்பரத்தைப் பூவுக்கான தாவரவியல் பெயர்தான் அது.

மரபான தமிழ் இலக்கிய உலகு செய்யுளால் ஆனது. செய்யுளில்தான் இங்கு பல நூல்கள் உருவாகி நின்று நிலைபெற்றன. அட திருடுவது எப்படின்னு செய்யுளால் எழுதப்பட்ட பழமையான நூல்கூட நம்மிடம் உண்டு. ஆக செய்யப்படுவதால் அது செய்யுள். ஆனால் அந்தச் செய்யுள் கூட ஏன் ஒரே வகைப்பாட்டில் இல்லை? ஏன் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா எனச் செய்யுளில் இத்தனை வடிவங்கள்? கிட்டத்தட்ட இதுவும் இஸம் போல வகைப்படுத்தல்தான்.

விநாயகர் சதுர்த்தி விழாக் காலத்தில் விநாயகர் அச்சில் எண்ணெய் தடவிக் களிமண்ணை அப்பி நூற்றுக்கணக்கான அச்சு விநாயகரைச் செய்து அடுக்குவது கலையாகுமா? அது சிறப்பாகக் கொண்டாடப்படுமா? ஒரே விநாயகர் உருவம் சலிப்பைத் தரவே புல்லட்டில் போகும் விநாயகர், மிருதங்கம் வாசிக்கும் விநாயகர் எல்லாம் வடிவம் பெறுகின்றன. அட நான் பணியாற்றிய கல்கிக் குழுமத்தின் லோகோ என்ன தெரியுமா.. புத்தகம் படித்தபடியே நடந்து போகும் விநாயகர்தான். சாணியைப் பிடிச்சி வெச்சா விநாயகர்தானே.. போதாதா என்றால் போதாது. நீ பின் தங்கிட்டன்னு அர்த்தம்.

ஒரு கட்டத்தில் செய்யுள் உலகம் கெட்டித்தட்டிப் போய்விட்டது. இலக்கணத்தைத் தெரிந்துகொண்டு எழுதுவது எல்லாம் செய்யுளாக இருக்கலாம். ஆனால் அது சுவையானதாக பயனுள்ளதாக அடுத்தகட்ட நகர்வை நோக்கி நகராமல் தேங்கிப்போனால் என்ன செய்வது?

எழுத்தாளர் சுஜாதாவுக்கு மரபும் தெரியும் நவீனமும் தெரியும். அவர் எழுதிய வெண்பா இரண்டு இங்கு. அவர் இலக்கணவாசிகளை செய்யுள்வாதிகளைக் கிண்டலடிக்கவே எழுதினாரா தெரியாது. இதோ அந்த வெண்பா..

> பத்துபவுன் தங்கம் பளிச்சென்று கல்வளையல்
> முத்திலே சின்னதாய் மூக்குத்தி – மத்தபடி
> பாண்டுவைத்து ஊர்கோலம் பாட்டு இவைதவிர
> வேண்டாம் வரதட் சணை.

அடுத்து இன்னொரு வெண்பா..

> வள்ளுவர் வீட்டில் இருக்கையில் வாசுகியார்
> மெள்ள நடக்கிறார் ஏனென்றால் – உள்ளே
> திருக்குறட் பாவெழுதிக் கொண்டிருக்கும் போது
> குறுக்கிட்டால் கோபம் வரும்.

இப்போ இந்த வெண்பாவில் எந்த இலக்கணக் குறை இருக்கு? ஆனா இந்த வெண்பாவால் என்ன பயன்? இதனால்தான் பாரதி இலக்கணத்தை மீறி அல்லது உடைத்துப் புதுக்கவிதைக்கு வருகிறான். பின் புதுக்கவிதையிலிருந்து நவீனகவிதை.. பிறகு பல இஸங்களில் கவிதை எனக் கவிதை மரம் கிளைகளாகப் பிரிந்து விருட்சமாக வியாபித்தது.

காலங்காலமா ஆதி காலம் தொட்டு வேப்பிலை தமிழ்ச் சமூகத்தில் பயன்பாட்டில் இருந்தது. தூர தேசத்துக்காரன் வேப்பிலையை எப்படி எந்தக் காலத்திலிருந்து எங்க முன்னோர்கள் பயன்படுத்தினார்கள், அதன் மருத்துவக் குணம் என்ன, அதற்காகச் செய்த ஆய்வு என்ன, எங்க இலக்கியத்தில் வேப்பிலை எங்கெல்லாம் வருதுன்னு வகைப்பாடு எழுதி வேப்பிலைக்கான காப்பிரைட் வாங்கிவிட்டால் அன்றிலிருந்து வேப்பிலை அவர்களுக்குச் சொந்தமாகிவிடும். அது போல நாம் படைப்புக்களை வகைப்படுத்தாமல் இஸத்துக்கு வரையறை தராமல் ஆவணப்படுத்தாமல் இருந்தோம். தூர தேசத்துக்காரன் அதை ஒரு இஸம் என்ற சட்டகத்துக்குள் வைத்தான்.

அப்படியாக இஸம் என்றால் என்ன? ஏன் இஸம் தேவை? இஸம் என்று சொல்லாமலேயே நாம் எப்படி வகைப்படுத்தி வைத்திருந்தோம்? ஒரு கட்டத்தில் அதில் தேக்கம் வந்து அடுத்த கட்ட நகர்வு வந்தது எப்படி? அதுக்கு வாசகன் விமர்சகன் மட்டுமல்ல.. படைப்பாளிக்கும் கமல் பாடுவது போல் பத்தலை பத்தலை என்பதுதான், அதாவது போதாமைதான் இஸங்கள் உருவாகக் காரணம்... என்னங்க இதைச் சொல்ல உதாரணத்துக்கு வேற பாட்டா

இல்ல. கும்மாங்குத்துப் பாட்டைப் போய் என்று நக்கலா நீங்க நகர முடியாது. அந்தப் பாட்டின் நடுவில்..

ஒன்றியத்தின் தப்பாலே
ஒண்ணியும் இல்ல இப்பாலே
சாவி இப்போ திருடன் கையில
தில்லாலங்கடி தில்லாலே
குளம் இருந்தும் வலதளத்தில
ஜாதி பேசும் மீமு –

என்பதெல்லாம் ஒரு கலகக்குரல். ஒன்றிய அரசையெல்லாம் இப்படி சினிமா பாட்டில் விமர்சிக்க முடியுமா. முடியுதுல்ல. அப்போ அது கும்மாங்குத்து பாட்டல்ல. கலகப்பாட்டு.

கலகக்குரல்தான் பல இஸங்கள் தோன்றக் காரணம். கலை இலக்கிய உலகில் முதலில் இருந்தது கிளாஸிஸம்தான்.

பண்டைய நூல்களில் ஒரு செவ்வியல் தன்மை இருக்கும். அதாவது சரியான வடிவம், கலப்பின்மை, ஆணைப் பிரதானப்படுத்தியிருத்தல், நீதி போதனை, வீரப் புகழ்ச்சி இப்படியான பண்புகள். இதுதான் அக்காலக் கட்டத்தில் தரமானது என்று மொழியப்பட்டது. கிளாஸ் என்றால் தரமான என்று பொருள். தரமான தன்மை கிளாஸிக் ஆகும். அந்த அடிப்படையில் உருவாகியிருந்த ஓவியம், சிற்பம், எழுத்து எல்லாம் கிளாஸிஸம் என்று அழைக்கப்பட்டது. அதாவது செவ்வியல் ஆக்கம். இதை வளர்த்தெடுக்க எழுதியவர்களால் ஒரு இதிகாசச் சுழற்சி உருவானது.

டாவின்ஸி வரைந்த இயேசுவின் கடைசி விருந்து ஓவியம் கிளாஸிஸம். அதில் இயேசு என்பவர்தான் ஹீரோ நடுநாயகம். இதை அழுத்தி ஏன் சொல்கிறேன் என்றால் இதற்குப் பின் வந்த இயேசுவின் கடைசி விருந்து பற்றிய ஓவியம் வேறு இஸத்தில் வந்தது. அதைப் பிறகு பார்ப்போம்.

சிற்பத்தில் மைக்கேலேஞ்சலோவின் பியட்டா சிலை கிளாஸிஸம் வகைக்கு உதாரணம். *Pieta* என்னும் சொல்லுக்கு இத்தாலிய மொழியில் இரக்கம் என்பது பொருள் ஆகும். அன்னை மேரியின் மடியில் இயேசு படுத்திருக்கும் காட்சிதான் அந்தச் சிலை.

ஆக, இந்தக் கிளாஸிஸம் கிரேக்கம், இத்தாலி, இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா எனப் பல நாடுகளில் கோலோச்சியது. இப்படியான கிளாஸிஸம் கொண்ட படைப்புகள் நம் மண்ணிலும் உண்டு. நாம் அதைக் கிளாஸிஸம் என்ற வகைப்பாட்டில் வைக்கவில்லை. அது அவசியமும் இல்லை.

கம்பராமாயணம், நம்மாழ்வார் பாடல்கள் செவ்வியல் ஆக்கம்தான். கிளாஸிஸம் வகைப்பாட்டில்தான் வரும். ஆனால் அப்படி உறுதியாய்ச் சொல்ல முடியாது. வரும் ஆனா வராது. ஏனெனில் கம்பராமாயணம், நம்மாழ்வார் பாடல்களைக் கிளாஸிஸத்தில் மட்டுமல்ல, ரொமாண்டிஸிசம் என்ற இஸம் வகைப்பாட்டிலும் வைக்க முடியும். அது பின்னர் பார்ப்போம்..

ஓவியத்தில் தம்பிரான் தோழர் எனும் சுந்தரமூர்த்தியை மையப்படுத்திச் சேக்கிழார் திருத்தொண்டர் மாக்கதை எழுதினார். அந்தக் காப்பியம் அப்படியே தஞ்சை பெருங்கோவில் மேற்புறச் சுவரில் ஓவியமாகத் தீட்டப்பட்டது. இதுவும் கிளாஸிஸம் வகைப்பாட்டில் வரும் ஓவியம்தான்.

சரி விஷயத்துக்கு வருவோம். வெளிநாட்டில் இருந்த கிளாஸிஸம் – செவ்வியல் ஆக்கங்கள் - ஒரு கட்டத்தில் அலுத்துப் போயின. புதிய தேவை வந்தது, விதியை மீறும் மனப்போக்கும் வந்தது.

கறுப்பு டீ, அப்புறம் பால் ஊத்திய டீ, அப்புறம் மசாலா டீ, அப்புறம் கிரீன் டீ, லெமன் டீ, ஹனி டீ போலத்தான் இஸங்களின் தோற்றம்.

கிளாஸிஸம் என்ற இஸம் முரண்பாடுகளையும் அவநம்பிக்கையையும் ஒரு விரக்தி மனநிலையையும் தேக்க நிலையையும் சந்திக்கத் தொடங்கியது. அதனால் கிளாஸிஸம் இரு புதிய கிளைகள் (இஸங்கள்) விட்டது.

ஒன்று மேனரிஸம். மற்றொன்று பரோக் இஸம். இந்த இரண்டு இஸங்கள் பற்றி அடுத்த தொடரில் பார்ப்போம்..

- பாம்பு அடுத்த சட்டையை உரிக்கும்

அம்மையார் ஹைறநூன்பீவி நினைவு
'சிறுகதைப் பரிசுப்போட்டி'

சிறப்புப் பரிசு பெற்ற சிறுகதை

சத்தியராஜ் குப்புசாமி

# குப்பன்ன பாத்துக்குவான்



ஓவியங்கள் : அழ.ரஜினிகாந்தன்

"கார்த்தி.. எழுந்திரி சாமி" என்று அப்பா தொட்டபோதுதான் அவனுக்கு விழிப்பு வந்தது.

"மணி 11 ஆச்சு தங்கோ, இன்னும் என்ன தூக்கம், மெட்ராசில இருந்து தூங்கவா வந்த?"

"நீ ஏ இன்னும் கல்யாண மண்டபத்துக்கு வரலன்னு ராசு மாமா கேட்டாரு, எந்திரிச்சு படக்குனு குளிச்சிட்டு வேட்டிய கட்டிட்டுக் கெளம்பு" என்று அப்பா அவனிடம் அதட்டினார்.

இரவு முழுவதும் ரயில் பயணத்தால் உடல் மிகவும் சோர்வாக இருந்தது. இன்னும் சிறிதுநேரம் தூங்கலாம் என்று அவனுக்குப் பட்டது.

ஊருக்கு வருவது ஒரு சடங்கு மட்டுமே. பள்ளி, கல்லூரி, பேராசிரியர் வேலை என 18 ஆண்டுகளாக விடுதியில் வாழ்ந்துவிட்டான். ஊர் குறித்தான பிணைப்பைக் குறைத்துவிட்டதோடு, நீண்ட விடுதி வாழ்க்கை அவனுக்குள் வெற்றிடத்தையும் உருவாக்கி இருந்தது. அந்த முடிவில்லாத வெற்றிடத்தில் காலூன்ற உதவியது புத்தகம் மட்டுமே.

வெகுநாட்களுக்குப் பிறகு கார்த்தி இன்றுதான்

ஊருக்கு வந்திருக்கிறான். மாமன் மகள் திருமணம். இதுபோன்று ஏதாவது நல்லது, கெட்டதுகளுக்கு மட்டுமே வருவான். அந்த இடைவெளி அவனுக்குக் கொஞ்சம் ஆறுதலாக இருந்தது. இடைவிடாது எந்த நேரமும் நம்மை மதிப்பிடும், ஆயிரம் கண்களுடன் விழித்துக்கிடக்கும் பெரும் பூதம்தான் சொந்த ஊர். அதன் பார்வையில் இரக்கம் கொஞ்சம் குறைவு.

படுக்கையில் இருந்து எழுந்து பாத்ரூம் போகலாம் என்று வெளியே வந்தபோது, மிக மென்மையான ஈரப்பதம் தூவிக்கொண்டிருந்தது; சூரியனே இல்லை. மிதமான குளிர்காற்று. இதுபோன்ற இதமான பகல் குளிர் காங்கேயத்தில் அதிசயம். பகல் குளிர் உடம்பைக் கூசியது. ஆனால், உடம்பிற்குள் ஒருவிதமான வெதுவெதுப்பு பரவியிருந்தது. சில நேரங்களில் தூங்கி எழுந்தவுடன் மனம் ஒருவிதமான மௌனம் நிரம்பி எந்தவிதச் சிந்தனையுமற்றுச் சமநிலையில் இருக்கும். ஏன் இப்படி இருக்கிறது என்று நினைத்த அந்த நொடியில் அது விலகிப்போய்விடும். அந்த ஆழ்ந்த அமைதி நிலையை அப்பாவின் குரல் கலைத்தது.

“ஒரு எட்டு கடைக்குப் போய் சேவிங் பண்ணிட்டு வந்து குளி” என்று வீட்டுக்கு உள்ளே இருந்தவாறே அப்பா கத்தினார்.

“சேவிங் பண்ணாம மூஞ்சியப் பாரு எப்படி இருக்குன்னு? சேவிங் பண்றதுக்குக் கூட நேரம் இல்லாம, அப்படி மெட்ராசுல என்னடா பண்ற?”

“இல்லப்பா.. ” என்று வாயைத் திறந்தான் கார்த்தி.

உடனே “என்ன இல்லப்பா நொல்லப்பா, போடா போய் சேவிங் பண்ணிட்டு வா”, என்று அதட்டினார்.

ரோட்டுக் கடைக்குப் போய் சேவிங் செய்து பின்பு, குளித்து முடித்து வீட்டுக்குள் வந்தான். கட்டுவதற்கு இரண்டு வேட்டிகளை அப்பா எடுத்துவைத்திருந்தார். ஒன்றை எடுத்துக் கட்டிக்கொண்டு வண்டியை எடுக்கலாம் என்று வெளியே வந்தபோது,

“தலையை ஒழுங்காச் சீவு, ஒருநாளும் இந்தத் தலைக்கு எண்ணெய் வெக்கிறது கிடையாது, அந்தப் பழக்கம் எப்பவுமே வராதா?” என்று கத்தினார்.

இடதுகையில் தேங்காய் எண்ணையை எடுத்து ஊத்தி, இரண்டு கைகளையும் ஒன்றாகச் சேர்த்து பிசைந்து கார்த்தியின் தலையில் அழுத்தமாகத் தேய்த்தார். சிறுவயதில் அவர் எண்ணெய் தேய்த்துவிடும்போது எப்படி வலிக்குமோ; அதே போன்று அவனுக்கு இருந்தது. 65 வயதாகிற அப்பாவின் கைக்கு வலு இன்னும் அப்படியே இருக்கிறதே என்று ஆச்சரியப்பட்டான்.

எல்லாச் செயல்களிலும் சரியாக இருப்பது அவரது இயல்பு. அதிகக் குற்ற உணர்வு கொள்ளக்கூடியவர். நியாயமற்ற தன்மையின் பக்கம் ஒருபோதும் நின்றுவிடக்கூடாது என்ற கவனம் கொண்டவர். எழுதப் படிக்கத் தெரியாத விவசாயி. நல்ல நாணயஸ்தர். நாணயஸ்தர்களால் நல்ல அப்பாவாக இருப்பது கொஞ்சம் கடினம்தான்.

ஊருக்கு வந்துவிட்டு சென்னை புறப்படும்போது, அம்மாவுக்குத் தெரியாமல் பணம் கொடுப்பார். அது பல ஆண்டுகள் நடக்கும் சடங்கு. இன்னும் ஓயவில்லை. கார்த்தியின் திருமணத்திற்குக் குடும்பத்தில் பெரிய எதிர்ப்பு இருந்தபோதும் “எம்பயனுக்கு எது இஸ்ட்டமோ அத நா செய்வன்” என்று மிக உறுதியாக நின்றவர். கல்யாணமாகி ஆறு ஆண்டுகள் கடந்துவிட்டாலும், எத்தனை அவமதிப்புகள்.

எங்கிருந்தோ அப்பாவின் உரக்க இருமல் சத்தம் வரும்போது அவனுக்குத் திடுக்கிடும். அப்பாவின் வழியாகத் தாத்தா இருமல் செய்வார்.

தலைக்கவசம் அணிந்து கார்த்தி வண்டி ஓட்டும்போது எதார்த்தமாக வரும் இருமல் சத்தம் பலமுறை அவனுக்கு அப்பாவை நியாபகப்படுத்தும். கார்த்தியின் மகனுக்கு 4 வயது வந்தபோதுதான் அவனுக்குப் புரிந்தது. தனது மகனின் இயல்பும் பெரும்பாலும் தன்னைப் போலவே உள்ளது என்று. அதற்குப் பிறகு மகன் மீது காட்டப்படும் அக்கறையை ஒருவகையில் தன்மீது, தானே காட்டுவதுபோல் உணர்ந்தான்.

மனிதர்களின் ஆன்மா வாரிசுகளினூடாக வாழ்ந்துகொண்டே இருக்கிறது. பாம்பு சட்டையை உரிப்பதுபோல் உடலை மட்டும் உதறிக்கொள்கிறார்கள்.

பீரோவின் மேல இருந்து ஒரு காகிதத்தை எடுத்து வந்து, "இந்தா" என்று கார்த்தியிடம் நீட்டினார்.

"இது என்னுங்கப்பா?"

"அட, பையன LKG சேத்தரதுக்கு, PEM ஸ்கூல் அப்ளிகேசன்," என்றார்.

"அட.. நம்ம இளங்கோ மச்சான் புள்ள அங்கதான் டீச்சரா போரா, அவகிட்ட சொல்லி நா போனவாரமே வாங்கிட்டன். அருமையான ஸ்கூலு. வீட்டுக்குப் பக்கத்துலையே வேன் வருது, ஏத்திவிட்டா அவம்பாட்டுக்குப் போய்ட்டு வருவான்."

"இந்த அப்ளிகேசன புல்லப்பன்னி நாளக்கு நீயும் ரேவதியும் போய் ஸ்கூல்ல குடுத்திட்டு, எல்லாத்தையும் விபரமா விசாரிச்சிட்டு வாங்க," என்றார்.

கார்த்திக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை, திருதிருவென்று முழித்தான். கையில் விபூதியுடன் வந்த அப்பா "எதுக்குப் பேந்தப் பேந்த முழிக்கிற? குப்பன்ன பாத்துக்குவான், நம்மல கைவிட்ர மாட்டான், எல்லா கரைக்டா நடக்கும்" என்று நெத்தியில் திருநீறு வைத்துவிட்டார்.

6 ஆண்டுகளுக்கு முன்பு "மெட்ராசில் ஒரு பெண்ண காதலிக்கிறேன், அவுங்க நம்மாளுக கிடையாது, அவுங்க வீட்டுல பேசிட்டன், நீங்க வந்து பொண்ணு கேளுங்க" என்று சொன்னவுடன்,

"ஐயோ எங்குடிய கெடுக்க பொறந்துட்டானே.. அசலூர் காரிய கட்டிகரனு வந்து நிக்கிரானே, இந்த ஊர்ல என்னால தலநிமித்து வாழமுடியுமா? ஊருக்கே புத்திமதி சொல்ற எனக்கு இப்படி ஒன்னு பொறந்திருக்கே" என்று கார்த்தியின் அம்மா கத்தி அழுததால் இரண்டு நாள் வீடே மயானமாகக் கிடந்தது. அவனது அப்பா எதுவும் பேசாமல் அமைதியாகவே இருந்ததுதான் அவனுக்குப் பெரும் கலக்கமாக இருந்தது.

இரண்டு நாட்கள் கழித்துச் சென்னைக்குப் புறப்படும்போது கட்டிலில் உட்கார்ந்து இருந்த அப்பாவிடம் சென்று "எனக்கு அந்தப் பொண்ணக் கட்டிவைங்கப்பா, கல்யாணத்துக்குப் பிறகு இங்க வந்து உங்கள கஸ்ட்டப்படுத்தமாட்டன், நான் சென்னையிலையே இருந்துக்கிறேன்" என்று கண்கலங்கி நின்றான் கார்த்தி.

எதுவும் பேசாமல் கட்டிலில் இருந்து எழுந்து அமைதியாக வீட்டுக்குள் சென்றார். தேதி காகிதத்தில் கொஞ்சம் திருநீறை மடித்து எடுத்துவந்து, அவன் பாக்கட்டில் வைத்தார். கூடவே இரண்டாயிரம் ரூபாய் பணத்தையும் வைத்தார். "தைரியமா போ சாமி, எல்லாம் குப்பன்ன பாத்துக்குவான்" என்று கூறி நெத்தியில் திருநீறு பூசிவிட்டார்.

அம்மா என்று வாயைத் திறந்தான். "அவ கெடக்குரா கூறுகெட்டவ, அவுளுக்கு என்ன தெரியும், நீ போ, நல்ல நாளாப் பாத்து கந்தாப்பாளையத்து மாமன கூட்டிட்டு நாங்க மெட்ராஸ்சுக்கு வரோம்" என்று சொல்லி வழி அனுப்பி வைத்தார். அந்தக் கனத்த நாள் அவனுக்கு நினைவுக்கு வந்துபோனது.

வண்டியை எடுத்துக்கொண்டு பெருமாள் மலைக்குப் பின்புறம் உள்ள கல்யாண மண்டபத்துக்குப் புறப்பட்டான். இன்று முகூர்த்தநாள் என்பதால் சாலைகளில் வண்டிவாகனங்கள் வேகமாகச் சென்றன. பட்டுப்புடவையும், வேட்டியுமாகக் குடும்பங்கள் உற்சாகமாகப் பறந்தனர்.

நூற்றுக்கணக்கான கார்கள் கல்யாண மண்டபத்தைச் சூழ்ந்து நின்றன. மண்டபத்தின் முகப்பில் கூடாரம் போலக் கலர்கலரான விளக்குகளால் வளைவு செய்யப்பட்டிருந்தது. சினிமா விருது வாங்கும் நிகழ்ச்சிகளுக்குப் பிரபலங்கள் வருவதுபோல் ஒரு வரவேற்பு. அங்கு நின்ற சில பெண்கள் கைப்பேசியில் புகைப்படம் எடுத்துக்கொண்டு இருந்தார்கள். சடங்கிற்காக நிறுத்தப்பட்டு இருந்த வாழைமரங்கள் வண்ணத் திரைச்சீலைகளால் மூடப்பட்டிருந்தது. மண்டபத்திற்குள் நுழைந்த உடன் மாமா, இரண்டு கைகளையும் கூப்பி "வாங்க மாப்ள" என்று வரவேற்றார்.



“அம்மா சொன்னாங்க, நீங்க காலையில 5 மணிக்கே வந்துட்டிங்கன்னு” என்று மாமா இழுத்தார்.

“நைட்டு முழுக்க வண்டியில் வந்த சலுப்பு, அதான் கொஞ்சநேரம் படுத்துட்டனுங்க” என்று கூறினான்.

“பரவா இல்ல மாப்ள, போய்ப் பொண்ணு மாப்ளையப் பாத்துட்டுச் சாப்டுங்க” என்று புன்னகைத்தார். “ரேவதி உள்ளாதான் இருக்கா” என்றார்.

மண்டபத்தில் மதிய விருந்திற்கு அதிகமான கூட்டம் நிரம்பி வழிந்தது. இதுபோன்ற கூட்டங்கள் கார்த்திக்கு ஒரு ஒவ்வாமை. மேடையில் புதுமணத் தம்பதியினரைக் காணவில்லை. தெரிந்தவர்களுக்கு வணக்கம் வைத்துவிட்டுத் தேடிப் பார்த்தான். ரேவதி அங்கிருந்து கைகாட்டினாள்.

“ஏங்க 12மணி வரைக்குமா தூங்குவீங்க? உங்களோடதா நானு வந்தேன். ஆனா நா மண்டபத்துக்கு 8 மணிக்கு வந்துட்டேன். நீங்க ஏந்தா இப்படி இருக்கிங்க” என்று கடிந்து கொண்டாள்.

“என்ன இங்க உக்காரவச்சிட்டு உங்கம்மா எங்கையோ போய்டாங்க. காலையில இருந்து இங்க சீர் நடந்துக்கிட்டு இருக்கு, அடுத்தடுத்து நிறைய சடங்கு செய்றாங்க. எனக்கு எதுவும் புரியல. நம்ம கல்யாணத்துக்குப் பிறகு இப்பத்தான் முதல்முறையா உங்க ஊருல நடக்குற கல்யாணத்துக்குக் கூட்டிட்டு வந்திரிக்கீங்க. எனக்கு யாரையும் இங்க தெரியல, தெரிஞ்சவங்க ஒரு சிரிப்பு மட்டும்தான். யாரும் பேசுரது இல்ல. அதனாலதான் சொன்னேன், நீங்களும் காலையில எங்கூடவே மண்டபத்துக்கு வாங்கன்னு” என்று ரேவதி கோபித்துக்கொண்டாள்.

“பொண்ணு மாப்பிள்ளை மேடையில் காணோம், எங்க போனாங்க?” என்று பேச்சை மாத்தினான் கார்த்தி.

“அத ஏ கேக்குரீங்க, காலையில் இருந்து, இந்தச் சீரு, அந்தச் சீருன்னு எதையாவது பண்ணிட்டே இருக்காங்க. இப்ப வரைக்கும் இரண்டு முறை தலைக்குத் தண்ணி ஊத்திட்டாங்க. பாவம் அந்தப் பொண்ணுபுள்ள ஈரத்தலையோட இருக்கு” என்று சிரித்தாள் ரேவதி.

“இதுக்கு முன்னாடி இப்படி எதுவும் பெருசா செய்யமாட்டாங்க, சீர் செய்ய நிறைய பணம் செலவாகும். எதுக்கு வீண் செலவுன்னு விட்ருவாங்க, இப்பத்தான் எல்லார்கிட்டையும் பணம் வந்திருச்சே” என்றான் கார்த்தி.

ரேவதிக்கும் அவனுக்கும் கல்யாணம் ஆகி ஏறத்தாழ 6 ஆண்டுகள் கடந்துவிட்டன. காதல் திருமணம். ரேவதி சென்னையைப் பூர்வீகமாகக் கொண்டவள். பழைய வண்ணாரப்பேட்டை பொண்ணு. ராயபுரத்தைத் தாண்டி எங்கும் அவ போனது கிடையாது. ஆர்.எஸ்.ஆர்.எம். மருத்துவமனை, காசிமேடு மீன், பாண்டியாஸ் பிரியாணி என வட சென்னை அவளுக்கு ஒரு கொண்டாட்டமான தீவு.

இப்படியான பெண்ணைக் காங்கேயத்துக்கு எப்படி கட்டிக் கொடுப்பது என்று ரேவதியின் பெற்றோர்கள் யோசித்தபோது, “நான் சென்னையில்தான் வாழப்போகிறன்” என்று கார்த்தி வாக்குறுதி கொடுத்திருந்தான். ஆனால் இப்போது அப்பா அவனை எப்படியாவது ஊருக்குக் கூட்டிட்டு வந்துவிடணும் என்று உறுதியாக இருக்கிறார்.

சொந்த ஊருக்கு வருவதற்குக் கார்த்திக்கு விருப்பம் இல்லை.

“ஊரிலேயே நல்லாப் படிச்ச பையன். காலேஜில வாத்தியாரு. பீடி சிகரெட் குடிக்கமாட்டான்; ஆனா இப்படி பண்ணிட்டானே” என்று பலமுறை அவன் முன்னே பல பேர் பேசி இருக்கிறார்கள். அதை ஒரு பொருட்டாக எப்போதும் எடுத்துக்கொள்ள மாட்டான். ஆனால், இப்போது தனது நான்கு வயது மகனிடம் யாரும் இயல்பாக இருப்பதில்லை என்பது அவனுக்கு அதீத தொந்தரவாக இருந்தது. ஊரில் செட்டில் ஆகினால் தனது மகனுக்கு என்ன நடக்கும் என்ற குழப்பத்துடன் இருந்தான்.

சென்னையை விட்டு வருவதற்கும் அவனுக்கு விருப்பம் இல்லை. கோடி கண்கள் கொண்ட சென்னை எந்தப் பார்வையையும் பிறரை மதிப்பிட அதிக நேரம் செலவு செய்யாது. நம்மைப் பற்றி எந்த மதிப்பீடும் செய்யாமல் நம்முடன் உரையாட தினம் தினம் புதிய மனிதர்கள் முளைத்துக்கொண்டே இருக்கும் பெருநிலம்.

கல்யாண மண்டபத்தின் மூன்றாவது வரிசையில் உட்கார்ந்திருந்த கந்தாபாளையத்து மாமா எழுந்து வணக்கம் வைத்து “வாங்க மாப்ள, எப்ப வந்தீங்க?” என்றார்.

கார்த்தி வணக்கம் வைத்துவிட்டு “இன்னைக்குக் காலையிலதான் வந்தேன்” என்று அவருக்குப் பக்கத்தில் இருந்த இருக்கையில் உட்கார்ந்தான்.

மாமா அவனது கையை இறுக்கமாகப் பிடித்துக்கொண்டிருந்தார். அது அவருடைய பழக்கம். அவர் அவனது தந்தையின் தாய்மாமனுடைய மகன். கார்த்தியின் குடும்பத்தில் எல்லா நல்லது கெட்டதுகளிலும் அவரே மிகமுக்கியமானவர். மாமாவுக்குப் பக்கத்து இருக்கையில் பச்சைத்துண்டு போட்டு உட்காந்திருந்தவரை எப்போவோ பார்த்தது போல இருந்தது.

பக்கத்தில் இருந்தவர் “ஆள் யாருன்னு தெரிளிங்கலே?” என்று மாமாவிடம் கேட்டார். “எங்க குப்புசாமி மாமானுடைய இரண்டாவது ஆளு, மெட்ராசுல காலேஜ் புரோப்போசரா இருக்கான்” என்று சொன்னார்.

“அட அப்டிங்களா. ஆளே அடையாளம் தெரியல, சின்ன வயசுல பாத்தது” என்று சிரித்தார்.

“பெரியவன எனக்கு நல்லாத் தெரியும், நம்ம ரைஸ் மில்லுக்கு அடிக்கடி வருவாரு. அவன் கல்யாணத்துக்குக் கூட நா வந்திருந்தேன்.”

ரேவதியைக் காண்பித்து “இதுதான் இவன் சம்சாரம்” என்று மாமா அறிமுகப்படுத்தினார்.

உடனே அவர், “அட கல்யாணம் ஆயிருச்சா? ஏன் கல்யாணத்துக்கு என்னைக் கூப்பிடல?” என்று கார்த்தியைக் கேட்டார்.

மாமா இடைமறித்து “கல்யாணத்த நாங்க சிம்பிளா பண்ணிட்டோம்” என்று கூறிவிட்டு, மெதுவான குரலில், “கல்யாணம் கொஞ்சம் கோனையா போயிருச்சு, அதான் பெருசா யாரையும் கூப்பிடுள” என்றார்.

உடனே பக்கத்தில் இருந்தவர் முகம் மாறியது. ஒரு பெரிய வியப்புடன் கார்த்தியைப் பார்த்தார். அதற்குப் பிறகு அவர் அவனிடம் இயல்பாக இருக்கவில்லை. ஒரு கணத்தில் அந்த மனிதர் இப்படி மாறியது அவனுக்கு ஒன்றும் வியப்பாக இல்லை. இது போன்று பல முகமாற்றங்களைப் பார்த்துப் பழகிவிட்டான்.

கார்த்தி எழுந்து வணக்கம் வைத்துவிட்டு, “காலையில சாப்பிடல, பசிக்குது, நான் சாப்பிடப் போறேன்” என்று கூறிவிட்டு ரேவதியுடன் சாப்பிடச் சென்றான்.

எதிரில் சாப்பிட்டு முடித்துவிட்டுக் கைகழுவிக்கொண்டிருந்த பரமசிவன் கார்த்தியைப் பார்த்து “வணக்கம் பங்காளி, சென்னையில் இருந்து எப்ப வந்திங்க?” என்று கேட்டான். “இன்னைக்குத்தான்” என்று சொல்லிவிட்டு நகரலாம் என்று நினைத்தபோது பரமசிவன் பேச்சைத் தொடர்ந்தான்.

“போன சித்திரை அமாவாசைக்கு இராமேஸ்வரத்தில திலாஹோமம் நடத்தினோம். நம்ம குலத்துக்காரங்க நிறைய பேர் வந்தாங்க. ஆனா நீங்க வரலை, ஏதோ முக்கியமான வேலைன்னு சொன்னிங்க. அடுத்தது வர ஜுன் மாசம் 28, 29ஆம் தேதில, நம்ம மூத்தூர் குப்பன்சாமி கோயில்ல நவசண்டி மஹாயாஹம் நடத்தப்போறோம். இது முக்கியமானது. கண்டிசனா நீங்க கலந்துக்கணும்” என்று பரமசிவன் அழுத்திக் கூறினான்.

திருமணத்திற்குப் பிறகு இரண்டு ஆண்டுகள் கார்த்தியுடன் பேசாமல் இருந்தான். இப்பத்தான் திரும்பவும் பேச ஆரம்பித்துள்ளான். குலதெய்வக் கோயிலுக்கு ஒரு டிரஸ்ட்டு உருவாக்கி அதன் தலைவராகச் செயல்பட்டு வருகிறான். அவன் பக்கத்தில் நெத்தியில் செந்தூரம் வைத்திருந்த அந்த ஒல்லியான இளைஞன், கழுத்தில் இருந்த காவித் துண்டில் தனது கைகளைத் துடைத்தவாறு கார்த்திக்கு வணக்கம் வைத்தான்.

“இவரும் நம்ம குலம்தான், வெல்லகோயில்காரரு. பேரு பழனிசாமி. பள்ளிக்கூடத்துள வாத்தியாரா இருக்கிறாரு, குலதெய்வத்த பத்தி ஒரு புக்கு வந்துச்சுள்ள, அதை இவருதான் எழுதினாரு. உனக்குக் கூட மெட்ராசுக்குக் கொரியர்ல அனுப்பினனே” என்று பரமசிவன் அவனை அறிமுகப்படுத்தினான்.

தோளில் இருந்த காவித்துண்டைச் சரி செய்துகொண்டு பழனிசாமி மார்பில் கைவைத்து “வணக்கம் ஜி” என்றான்.

கார்த்தி வணக்கம் வைத்துவிட்டு, “நீங்கதான் அந்தப் பழனிசாமியா” என்று புன்னகைத்தான். “உங்க புக்குள ஒரு எடத்துளகூட நம்ம குலதெய்வம் மாதாரியார் சமூகத்த சார்ந்தவருன்னு மென்சன் பண்ணவே இல்லையே, ஏன்?” என்றான்.

பழனிசாமிக்கு முகம் சட்டென்று மாறியது.

“அத நீங்க அப்படி பாக்கக்கூடாது; அது தேவையில்லாத விசயம்..” என்று ஏதோ சொல்ல பழனிசாமி தொடர்ந்து பேசியபோது, பரமசிவன் குறுக்கிட்டு “இந்த ஹோமம் நடத்த நல்ல அனுபவமுள்ள 9 வேதியர்கள காசில இருந்து பங்காளிதான் கூட்டிட்டு வர்றாரு. அவங்களுக்கு டிக்கெட்டல்லாம் இவருதான் போட்டாரு. இந்த யாகத்த நடத்த ஒவ்வொரு குடும்பமும் மாங்கல்ய வரியாகக் குறைஞ்சது ஆயிரத்து ஐநூறு வசூல் பண்றோம். நீங்களும் அத இந்த மாசம் gpayல அனுப்பிடுங்க” என்று கூறிவிட்டு, பழனிசாமியின் கையை இழுத்து “வா போகலாம்” என்று நகர்ந்தான் பரமசிவன்.

கார்த்திக்கும் ரேவதியைச் சாப்பிட அழைத்துப் போனான்.

“யார் இவுங்க? அவங்களுக்கு எதுக்குக் காசு கொடுக்குறேன்னு சொல்றீங்க?” என்று சந்தேகமாகக் கேட்டாள் ரேவதி.

“இவன் ஒரு பைத்தியக்காரன், கோயம்புத்தூர்ல பெரிய கம்பெனியில் மேனேஜரா வேலை செய்றான். MBA படிச்சவன்.

இப்ப காவித்துண்ட போட்டுக்கிட்டுக் குலதெய்வக் கோயிலுக்கு வருகிற எல்லார்கிட்டையும் போன் நம்பர வாங்கி, வாட்சப்ல குழு உருவாக்கி அவங்ககிட்ட பணம் வசூல் பண்ணிட்டு இருக்கான். கோயில்ல உக்காந்துக்கிட்டு அவன் கட்சிக்கு ஆள் சேத்திட்டு இருக்கான்.''

"இந்த ஊர்ல இருக்கிற ஒவ்வொரு குலதெய்வக் கோவில்லையும் இதுமாதிரி ஆட்களை இறக்கிவிட்ருக்கானுக. இவனுகளுக்கு வேலையே குலதெய்வத்த வச்சு, குலரீதியாப் பிரிச்சு ஆள்சேப்பது. அப்பறம் ஒரு டிரஸ்ட்ட உருவாக்கிப் பணத்த வசூல் செஞ்சு எதாவது யாகம் நடத்துறது. இல்லன்னா; ஊருக்குள்ள அனுமார் சிலை வைக்கிறது. இங்க இருக்கிறவங்கள ஒண்ணாச் சேர்த்துக்கிட்டு ராமர் கோயில பாக்க டூர் கூட்டிட்டுப் போறானுக. இத ஒரு பிராஜெட்டாவே செய்றானுக.''

"ஓ.. அந்தக் குலதெய்வக் காலண்டர இவங்கதான் சென்னைக்குக் கொரியர் பண்ணதா?'' என்று ஏதோ மர்ம ரகசியத்தைக் கண்டுபிடித்ததைப் போல ரேவதி இடைமறித்தாள்.

"ஆமா. வீடு வீடாய்ப் போய்ச் சாதி காலண்டர் கொடுக்கிறதுக்கு இவன் எல்லாம் எதுக்கு MBA படிச்சான்னு தெரியல. அவுங்கப்பா செம்பளியாடு மேச்சுக் கஸ்ட்டப்பட்டுப் படிக்க வெச்சாரு. ஆனா இவன் இப்படி உருப்படாமச் சுத்துறான்.''

சாப்பிட்டு முடித்துவிட்டு உணவுக்கூடத்தில் இருந்து வலதுபுறமாக இருக்கும் கேட்டின் வழியாக நேரடியாக மண்டபத்தை விட்டு வெளியே வந்தனர். வெளியே ஐஸ்கிரீம், டீ, காபி மற்றும் பாப்கார்ன் கொடுத்துக்கொண்டிருந்தனர். ரேவதி ஐஸ்கிரீம் சாப்பிட்டாள். கார்த்தி ஒரு காப்பியை வாங்கிக்கொண்டு மெதுவாக முன்புறம் சென்றான்.

மண்டபத்தின் நுழைவாயில் வெளியே நான்கு பேர் பறை அடித்துக்கொண்டிருந்தார்கள். உள்ளே மத்தளம், நாதசுரம் சத்தத்தில் சரியாகக் கேட்கவில்லை. அந்த நான்கு பேரில் ஒருவர் சிகப்புச் சட்டை அணிந்திருந்தார். கார்த்திக்கு மிகவும் பரிச்சயமான முகம்.

ஆம், அது செந்தில்.

செந்திலும் கார்த்தியும் ஐந்தாம் வகுப்புவரை படியூர் அரசு ஆரம்பப் பள்ளியில்



ஒன்றாகப் படித்தவர்கள். வகுப்பறையில் இருவரும் நெருக்கமான நண்பர்கள். பாடம் நடத்தும்போது செய்த சேட்டைகளுக்கு சரோஜா டீச்சரிடம் அடியும் வாங்கி இருக்கிறார்கள்.

ஆசிரியர் பாடம் நடத்தும்போது எம். ஜி.ஆர் படங்களின் கதைகளை அவனிடம் சொல்லுவது கார்த்தியின் வழக்கம். அதை ம், ம் என்று கேட்டுக்கொண்டு ஆசிரியர் நடத்தும் பாடத்தில்தான் மிகக் கவனமாக இருப்பான் செந்தில். மிக நன்றாகப் படிக்கக் கூடியவன். வகுப்பில் முதல் மதிப்பெண் வாங்குபவன். வகுப்பே அவனுடைய கையெழுத்தைப் பார்த்து வியக்கும். அவனுடைய நோட்டை வாங்கித்தான் விட்டுப்போன பாடங்களை எல்லோரும் எழுதுவார்கள். அறிவியல் பாடத்தில் வரக்கூடிய தாவரங்களின் படங்களை மிக நேர்த்தியாக வரையக்கூடியவன். அவன் விரல்கள் ஓவியம் வரைவதற்காகவே தனித்தன்மையுடன் படைக்கப்பட்டவை போல.

வாழ்க்கையில் ஒரு சில கைவிரல்கள் மட்டும்தான் நம் மனதில் பதியும். செந்திலின் விரல்கள் கார்த்தியின் மனதை விட்டு எப்போதும் மறைந்தது கிடையாது. பல வருடங்களுக்குப் பிறகு இப்போதுதான் செந்திலைப் பார்த்தான். மிகவும் மெலிந்து விட்டான். எப்போதும் நேர்த்தியாக இருப்பவன். அவனது ஒவ்வொரு அசைவுகளிலும் நேர்த்தி இருக்கும். ஆனால், இப்போது மொத்தமாகக் கலைந்துபோன மனிதனாகக் காட்சியளித்தான்.

கார்த்தி காபி குடித்துக்கொண்டிருந்த பேப்பர் கப்பைத் தூக்கி எறிந்துவிட்டு ரேவதியைத் தேடினான். ஏதோ எண்ணத்தில் இருந்தபோது ரேவதி அவனது தோளைத் தொட்டாள்.

"வாங்க, போய் பொண்ணு மாப்ள கூட ஒரு போட்டா எடுக்கலாம்" என்று கூப்பிட்டாள். "சரி போகலாம்" என்று கார்த்திக் முன் நகர்ந்தான். பறை அடித்துக்கொண்டிருந்த நால்வரும் உணவு உண்பதற்கு எதிரே நடந்து வந்தனர்.

செந்தில் கார்த்திக்கைப் பார்த்துச் சிரித்தான்.

"எப்படி இருக்கிங்க" என்று செந்தில் கேட்க, "நல்லா இருக்கன்" என்று கார்த்திக் பதில் சொன்னான்.

"மெட்ராசிலையா இருக்கீங்க?"

"ஆமா செந்தில்."

"என்ன பண்றிங்க?"

"காலேஜ்ல ஆசிரியராக இருக்கன்," என்று கூறினான் கார்த்திக். ஆனால் திருப்பி, நீ எப்படி இருக்கிறாய் என்ன செய்கிறாய் என்று கேட்கும் தைரியம் கார்த்திக்கு வரவில்லை.

"ஏன் இளைத்துப் போய்விட்டாய்?" என்று மட்டும் கார்த்திக் கேட்டான்.

"வேலை அதிகம், அதனாலதான்."

"கல்யாணம் பண்ணிட்டயா?"

"கல்யாணம் ஆகி இரண்டு பசங்க" என்று செந்தில் புன்னகைத்தான்.

கார்த்தியின் கவனம் முழுவதும் செந்தில் விரல்கள் மீதுதான் படிந்திருந்தது. அந்த விரல் பறை குச்சியை இறுக்கமாகப் பிடித்திருந்தது. அந்த விரல்களில் நேர்த்தி கலையவில்லை. அந்த விரல்களுடன் உரையாடுவதுபோல் கார்த்திக் உணர்ந்தான்.

செந்தில் இரு கரங்களையும் கூப்பி வணக்கம் வைத்துவிட்டு அங்கிருந்து நகர்ந்தான்.

கார்த்திக் அசைவற்று ஒரு கணம் அந்த இடத்தில் சோர்வாக நின்றுகொண்டிருந்தான்.

"உங்கப்பா பையனுக்கு ஸ்கூல் அப்பிளிகேசன் வாங்கிட்டு வந்திருக்கிறாரு பாத்திங்களா?" என்று ரேவதி கேட்டாள். அப்போது சுயநினைவிற்குத் திரும்பிய கார்த்தி "ஆமா பார்த்தேன்" என்று தலையசைத்தான்.

"என்ன முடிவு பண்ணப் போறீங்க?" என்றாள் ரேவதி.


"என்ன பண்றது. இந்த வருஷம் இங்க வந்துருவோம், அவன PEM ஸ்கூல்லையே சேத்திடுவோம்," என்றான் கார்த்திக்.

"பாத்து யோசிச்சு முடிவெடுங்க, இது பையன் வாழ்க்கை," என்றாள் ரேவதி.

"எல்லாம் குப்பன்ன பாத்துக்குவான்," என்று கூறிவிட்டு, கார்த்தி ரேவதியை அழைத்துக்கொண்டு பொண்ணு மாப்பிள்ளையைப் பார்க்கச் சென்றான். ■

வலங்கைமான் நூர்தீன்

# வானமே வியந்து வானவில்லில் புன்னகைக்கிறது




தலையோ பூவோ விழுந்த மைதானத்தில் அஹிம்சை பூவொன்று பூக்கிறது. கம்பீரமாய் ஒலிக்கும் தேசியப் பண், சரீரமெங்கும் சிலிர்த்து நிற்கும் ரோமக்கால்கள் தளர்வதற்கும் நான் இந்தக் கவிதையிலிருந்து வெளியேறுவதற்கும் தாமதமாகலாம். வேகப்பந்துகளாய் வந்து விழும் வார்த்தைகள் வாசிப்பவர்களை வசியம் செய்து தடுத்தாடக்கூடும். சின்னஞ்சிறு பிஞ்சுவிரல்களாய் மனதை வருடும் வரிகள், இதயத்திற்கு வெளியேயும் பறக்கின்றன சிக்ஸர்கள்.

நீண்ட நெடிய இரவை எழுதும் கண்களுக்குத் தனிமை ஒரு போதை என்கிறார் திருமா. தள்ளாடாத கவிதைகளால் நிரூபிக்கும் கவிஞர், வாசிக்கும் பசிக்கு உணவாக நிலவைக் கொடுத்து நம் பால்யத்தைப் பால்வெளிக்குக் கடத்துகிறார். இலையுதிர்காலத்துப் பாடலொன்று முடிவடையும் நேரத்தில் அவரோடு நாம் அனைவரும் சங்கமிக்கிறோம். அன்பின் மழையில் அவர் நனைக்க, மண்ணுக்குக் குடை பிடிக்கும் காளான்கள் மனதிற்குள் பூக்கின்றன.

'பயணத்தின் இடையில் பார்க்கத் தூண்டும் இதயமாகி, மில்லி மீட்டர் மில்லி மீட்டராகத் தவிக்கும் துடிப்பில், டிரெயின் ஒன்று தன் மீது ஏறித்தான் போகிறது' என்று தொடரியின் வேகத்தில் தடதடத்துக் கடக்கிறார். அளவிடமுடியாத ரிக்டர் அளவுகளில் பூகம்பம் நம்மைப் பிளந்தாலும், வானம் கொஞ்சம் கீழிறங்கி உச்சி முகந்து முத்தம் தந்துவிடுவதில் சுனாமியிலும் 'மழையின் ஸ்பரிசம் பூமியை அடைகையில் அவளின் வெட்கம் போலச் சில்லென்றாகிறோம்'.

இப்புத்தகத் தோட்டமெங்கும் கவிதைகள் தனித்தனியே தனித்துவமாகப் பூத்துக் கமழ்ந்தாலும் ஒரு கவிதைக்கும் மறு கவிதைக்கும் தொடர்ச்சி என்பது நம்மை அறியாமல் நம்மை இணைத்து நமக்குள் இணக்கமாகிவிடுவதை உணர்வுப்பூர்வமாக உள்வாங்க முடியும்.

'கடந்து செல்லும் காட்சிகள், வானவில் வண்ணமாய் மறையும், வண்ணங்கள் சிதறிப்போவதில்லை காட்சி. வான் தன் சுயமியை வானவில்லிலிருந்து பெற்றிருக்கலாம். வானவில்லின் அழகு பிரபஞ்சத்தையே பேரின்பமாக்குகிறது.'

'வெளியே யாரடித்து அழுகிறது மழை.' மழை அழுதுவிட்டுப் போகட்டும். முந்தைய கவிதையில் சிரித்துக்கொண்டிருக்கிறார் புத்தர். வானம் அழுதுதான் நிறைய பார்த்திருக்கிறோம்; இங்கே மழையே அழுவதில், வானமே வியந்து வானவில்லில் புன்னகைக்கிறது.

**அதிர்ந்த காட்டில்**
**மரண நரம்பறுத்த**
**மனித வாசத்தை**
**ஓலமிட்டு எழுதியது**
**வெளியே தொங்கிய துதிக்கை.**

பெரும் காடே பேதலித்துப் போனதாகக் குமுறும் கவிஞர், வனம் சிதைந்தது போல் நம்மையும் நசிப்பிக்கிறார். மண்டையைப் பிடித்துக்கொண்டு ஓ வென்று காடதிரக் கதற வேண்டும் போலிருக்கிறது. சதி பின்னிய கவிதையில் வலி மரணத்தை விட கொடூரமாக இருக்கிறது.

**ஆணிகள் சுவரில்**
**காலத்தைப் பதியம் செய்கிறது**
**காலத்தை அழித்துவிட்டு**
**ஆணியை அப்புறப்படுத்த முடியாது.**
**ஆணிகள் வரலாற்றைத் தாங்கும்**
**வரம் பெற்றவை.**

வரம் பெற்ற ஆணிகள்தான் சிலுவையில் அறையப்பட்டு சாபமும் பெறுகின்றன. காலத்தைத் தாங்கும் ஆணிகள் செல்லரிக்கப்பட்டு இத்துப்போகும்போது தாங்கிப்பிடிக்கும் விரல்களுக்கு எஃகின் வலிமை. இக்கவிதை நிறைய பேசுகிறது. நாம்தான் திருமாவின் புத்தனைப் போல அமைதியாக இருக்கிறோம். காலம் ஆந்தையாய்த் தலையை உருட்டிக்கொண்டிருக்கிறது.

நடுநிசியில் விழிக்கும் சொப்பனங்களில் மரித்தவர்களைக் காண்பது அதிர்வுகளை அடுக்குகிறது. அதுவும் முதல் நாள் இறந்தவர்கள் மறுநாள் கனவில் என்ன கூறும்.. பிசாசுகளின் கூடுகளென அந்தரத்தில் ஆடும் உயிர்களுக்கு உத்தரவாதம் வீரசோழன்தான். ஆனால் கரிசல்காடுகள் வெப்பத்தில் உயிர் சுமக்கிறது என்று நழுவுகிறார். அவரின் அந்தரப் புன்னகையில் ஒய்யாரமாகப் பூக்கிறது பருத்திப்பூ.

**மழை பொழிந்தது, புயலடித்தது.**
**இயற்கை இருமியது.**
**பத்திரமாகத் தரை இறங்கியது பறவை.**
**பாதுகாப்பாய் வந்தவன்**
**அதைக் கூண்டுக்குள் அடைத்தான்.**

சுதந்திரத்தையும் சிறையில் அடைத்துப் பாதுகாப்பது இந்நூற்றாண்டின் கொடூரம். கார்ப்பரேட்களின் மாபெரும் மனித சுரண்டல்களையும், வியாபார அரசியல் அநீதிகளையும் பதிவு செய்யும் கவிதை தீநுண்மி நாட்களை நமக்குள் கடத்துகிறது. கூண்டுகள் திறக்கப்பட்டுவிட்டன. முறிந்த சிறகுகளைத்தான் என்ன செய்வதென்று தெரியவில்லை.

‘வேண்டாத தெய்வங்கள் இல்லை. பூஜை அறையோடு வீடுகளெங்கும் சுவாமிகள் அருள் பாலிக்கும் புகைப்படங்கள். ஒரு வழியாக முடக்குவாதத்தை வேரறுத்தது பிரார்த்தனைகள். முதியோர் இல்லங்களின் பிரார்த்தனைகள் கண்ணீரால் எழுதப்படுகின்றன. அதன் ஈரத்தில் பற்றி எரியும் நெருப்பு, அவர்களின் சிதைகளிலும் படர்கிறது. அந்த வெப்பத்தின் உக்கிரத்தில் தான் ‘ஒரு காகம் புத்தன் தலையில் எச்சமிட்டுச் செல்கிறது.’ உலகத்தின் ஏதோ ஒரு வீதியில் அவனின் ஓலம் யாருக்காவது கேட்கிறதா...?

பெருங்காட்டு தேசத்து எச்சங்கள் கிளையின் கூடுகளில் ஒட்டுவதுமில்லை, வெட்டப்பட்ட மரங்களில் எச்சங்கள் பூப்பதுமில்லை என்ற வாழ்வின் யதார்த்த தத்துவத்தை வானத்தின் மீது சத்தியம் செய்து பெரும் காட்டினில் ஒளிரும் பறவைகள், நமக்குள் பெரும் வெளிச்சத்தைப் பரப்புகின்றன. காடுகளைப் பாடுவதிலும் அவை நமக்குத் தரும் பிராணத்தையும், உயிராய் நேசிக்கும் புலவர் வெயிலோடு திரிந்து கண்மாய் நீர் குடித்த காலங்களையும், வெயில் வேடிக்கை பார்த்து சைக்கிளின் காற்றுப்பையில் மெதுவாய் ஆக்சிஜன் ஏற்றிக்கொண்டிருந்ததையும் கூறி நம் பால்யத்தை நோக்கி மிதிவண்டியை மிதிக்கவிடுகிறார்.

மரணப் புதிர்களில் மரத்தை விதையாக விட்டவனுக்கு ஆக்சிஜன் இல்லாமல் போனதும், மனித வாழ்வைச் சொன்னவனுக்கு சுவாசமே பிரச்சனையாவதும்.. வேப்பம் பழமொன்று மரத்திலிருந்து விழுந்து மரணத்தை எழுதும்போது வெப்பம் சூழ்கிறது. விதை துளிர்த்து விருட்சமாகும் வரை காத்திருக்கணும் இக்கவிதையின் சூடு தணிக்க. நல்ல வேளை இன்னும் மிச்சமிருக்கிறது,

எச்சத்தைத் துடைத்துத் தாயமிடுபவர்கள் விளையாடுவதற்காக ஊரின் ஒற்றை ஆல்.

'ஊருக்கே ஒப்பாரி செய்பவள் இறந்துபோக ஊரே தள்ளி நின்றது.' மயானம் வருவதற்கு முன்பான என் வானத்தை, பலூன் பேசும் சுதந்திரக் காதையில் இப்படி வெடிக்கிறார். 'உன்னோடு விளையாடிக்கொண்டிருந்த என் காற்று தனியே விசும்பிக்கொண்டிருக்கிறது.' அழுவதற்கு காற்றாவது மிச்சமிருக்கிறது என்பது ஆகத்துயரமான ஆறுதல்.

காக்கை குருவிகளுக்காக வசந்தகாலக் கதையொன்று சொல்ல ஆரம்பித்த தாத்தாவிற்கு.. பின்னொரு மழைநாளில், தாத்தா நடனமாடிய அதே படித்துறையில் பேரன் திதி கொடுத்து திரும்பும்போது.. சுட்டெரிக்கும் கோடை. சொக்கட்டானாய்ப் புன்னகைத்திருக்க கண்ணாத்தா இருக்கிறாள்.

வாழ்வைச் சொல்லித்தருவது கண்மாயின் கால் தடங்கள் மட்டுமா... மத்தாப்புகளாய்ச் சிரிக்கும் சிவகாசி குழந்தைகளும்தான். மனிதன் மாறிவிட்டானில் வாழ்வின் ரகசியங்களை வாள் வீச்சுகளால் கிழித்தெறிகிறார் நம் கவிஞர்.

'பச்சை வயல்வெளிகளும் தோப்புகளும் மனிதர்களைக் காண ஏங்கியது. மனிதன் பிளாஸ்டிக் அரிசிக்குள்ளும் மாத்திரைக்குள்ளும் நுழைந்திருந்தான்.'

அரசியலும் மருத்துவக் கொள்ளையும் எளியவர்களின் வயிற்றில்தான் அடிக்கின்றன. மூர்ச்சையற்ற நம் நிலங்களில்தான் அவர்களுக்கான சிம்மாசனங்களைக் கட்டிக்கொள்கிறார்கள்.

அவர்கள் வருவார்கள் போவார்கள். ஆனால் மனிதர்களைப் போலில்லை பறவைகள். அவை தானியங்களில் அரசியல் செய்வதில்லை. சத்தங்களால் வாழ்வை இசைத்துப் பறக்கின்றன. ஒவ்வொரு பூத்தலிலும் நமக்காகவே எச்சமிடுகின்றன. வனம் பரப்பி நமக்கான வாழ்வைப் பறவைகளே எழுதுகின்றன.

'வறண்ட பூமியெங்கும் விளம்பரப் பதாகைகள், விளைச்சலில்லாப் பூமியில் விலைபோகிறது நிலம்.' பறவைகள் நமக்காக எச்சமிட்டாலும் காலத்தின் எச்சத்தில்



நாம் வெற்றுக் கூடுகளையே மிச்சம் வைக்கப்போகிறோம்.

பெரும் வனாந்திரமொன்று யானையைத் தேடிக்கொண்டிருக்கிறது. திருமாவின் பெயர் தெரியாப் பறவைகளே... மனிதர்கள் வணங்குமிடங்களில் ஆசிர்வதிக்கும் யானையைக் கண்டால் காட்டிற்குத் தகவல் தந்துவிடாதீர்கள். மனிதர்கள் அதற்குள்ளும் நுழைந்துவிடுவார்கள்.

*24 x 7* அன்புமயம், *360* டிகிரி நட்புமயம் என்னும் மானா பாஸ்கரன் சாரின் வாழ்த்துரையும், புத்த ஆந்தை, புத்தக ஆந்தை ப. திருமாவேலன் அண்ணனின் அணிந்துரையும் இந்நூலுக்கு அணிகலன்கள். அகல் நிலா வெளியீட்டகத்தின் செம்பதிப்பான இந்நூல் நாம் வாசிப்பதற்கும், வசிப்பதற்குமான கூடு. இதில் நாம் வாழ்ந்துபார்க்கலாம். வாழ்த்துக்கள் வீரசோழன் க.சோ. திருமாவளவன். கவுதமன், சித்தார்த்தன், புத்தனுக்குப் புனைபெயர் வைத்த பெருமை உங்களை மட்டுமே சேரும். புத்தன் மரத்தடியில் அமர்ந்திருக்கிறான். அதன் கிளைகளில் தியானிக்கும் ஆந்தைகளை நமக்கு வரமளித்திருக்கிறார் திருமா.

நீண்ட தொடரிபோல் நம்மில் தடதடக்கும் இந்நூலின் முன் பெட்டியில் நாமும் கடைசிப் பெட்டியில் திருமாவும் பயணிக்கிறோம். இறங்குமிடம் ஒன்றுதான். இதயங்கள் சந்தித்துக்கொள்ளக் காத்திருக்கும் அவரின் புன்னகையில் சாட்சாத் புத்தரின் சாயல்.

■

**ஆ**ற்று மணலைச் சுரண்டி
வளர்ந்த
முள்ளுச் செடிகள்தான்
எங்கள் அடுப்புக்கு உணவு..

ஊரோர மலையில்
வெடிவைத்துச் சிதறியதில்
கிடைத்த கற்கள்தான்
வீட்டு வெளிப்பக்கச் சுவர்..

வருடத்திற்கு ஒருமுறை
சிலநொடிகள் மட்டும்
தெருவின்
ஓட்டு வீடுகளைக் கடந்து
மாடி வீடுகளுக்கு
காட்சி தரும் சாமிக்காக
அரிகண்டம்
கொடுத்துக்கொண்ட மரங்கள்..

ஊர்
தன்னை அழித்துக்கொண்டு
என்னை வளர்த்த கதையைச்
சொன்னபோது
ஒன்ஸ்மோர் கேட்கிறான்
மகன்..

❀ **மூசா**

"**கா**விரி பற்றி
சிறுகுறிப்பு வரைக"
எனும் கேள்விக்கு,
சாக்கடைக்குள்
சிக்கிக்கொண்ட
ஜீவநதி
என எழுத நினைத்துப் பின்
"எனக்கு அரசியல் பற்றித்
தெரியாது!" என எழுதிக்கொடுத்தது
குழந்தை!

❀ **கோவை நா.கி.பிரசாத்**

**வ**ட்டத்திற்குள் பறக்கிறது
நொடிகளின் பறவை
பெருமர இலைகளாக
உதிர்கிறது இரவும் பகலும்

❀ **க.ராஜகுமாரன்**

**பா**ழடைந்த வீட்டுக்குள்
வந்து போகும்
பறவையொன்று
உடைத்துப்போகிறது...
நெடுநாளின் வெறுமையை!

❀ **மு.முபாரக்**

ஏரியில் மீன்களைப் பிடிப்பவன்
முதலில் மேகங்களுக்கே வலை வீசுகிறான்

❀ **மகேஷ் சிபி**

••

மகளை உறங்க வைக்கக்கூறும்
கதைகளின்போது
அவளிடமும் உள்ள கதைகளை
கூறத் தொடங்குவாள்.
உறங்குவதுபோல்
பாவனை செய்த பொழுதுகளில்
நிஜமாக உறங்கித் தொலைத்த
நாட்களும் உண்டு.
மறுநாள் அவரவர் வேலையில்
மூழ்கிக் கடந்தும் மறந்தும்
ஓடித் தொலைந்தாலும்
அவள் பேசவிருந்த கதைகள்
என் உறக்கம் கண்டு
எவ்வளவு கண்ணீர் வடித்திருக்கும்...?

❀ **யாழ் தண்விகா**

••

கிழக்கும் மேற்குமாய்
நீண்டு கொதிக்கிற தெருவில்
தோலை இழுத்துக் கட்டிய
உருமி -
அம்மை அசைக்கிற
வளைகுச்சி உராய்கையில்
உர்ரும் உர்ரருமென
உறுமுகிறது.

ஆளுயரச் சவுக்கைச் சுழற்றுகிற தகப்பன்
வறுமையின் வெம்மையை
சொடீர் சொடீரெனத் தன்
முதுகின்மீதே இசைக்கிறான்.

கணுக்காலில் சதங்கை கட்டிய
பிள்ளைக் கூத்தாடி
ஏந்திய கைகளுடன்
செருப்பற்ற பாதங்களால்
அபிநயித்தபடி சத்தமெழுப்புகிறான்.

ஒட்டி உலர்ந்து குழிந்திருக்கும்
வயிற்றுக்குள்

கூத்தாடும் பசியே,

வயிற்றின் கடவுளே,

உன்காது திறக்கத்தானே
உயிருருக
வாசிக்கிறாள் அம்மா..

❀ **ஜெயாபுதீன், கோவை.**

ஆண்டன்பெனி



# சிறுகோட்டுப் பெரும்பழம்

மெரினாவில் நுழையும்போதே இருட்டியிருந்தது. பக்கத்தில் இருக்கும் ஆட்களைக்கூட இன்னாரென்று அடையாளப்படுத்த முடியவில்லை. பனிக்காலத்தின் தொடக்கம் என்பதால் முன்பனியும் பெரியளவில் இல்லை. பட்டாணி, கடலை விற்கும் சிறுவர்கள் வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்தார்கள். குதிரைக்காரர்கள் முன்னமே புறப்பட்டிருந்தார்கள். பீச் சாலையினை ஒட்டிய கடைகளின் வெளிச்சம் இன்னும் சற்று நேரத்தில் குறையத் தொடங்கிவிடும்.

ஏழு மணிக்கெல்லாம் வருவதாகச் சொல்லியிருந்த காயத்திரி இன்னமும் வரவில்லை. வழக்கமாக மாதம் இருமுறை சென்னைக்கு வருகிறவள், ஆறு மாசத்துக்குப் பிறகு வருகிறாள். இடையில் ஒருநாள் பேசியபோது, குடும்பச் சூழல் காரணமாக, எதையும் சட்டென விட்டுவிட்டு வரமுடியவில்லை என்றாள். நானும் காயத்திரியும் ஆறு வருட நண்பர்கள். ஒரு ரயில் பயணத்தில் நண்பர்களானோம். ‘மாம்பலம் ஸ்டேசன் வந்தா சொல்றீங்களா?’ குரலுக்குத் திரும்பியபோது, கையில் குழந்தையுடன் இருந்த காயத்திரியைப் பார்த்தேன். ‘மாம்பலம் ஸ்டேசன் வந்தா சொல்றீங்களா?’ என் கவனத்தைக் கலைத்தாள். ‘சரி’ என்றேன். அதன்பிறகு யதேச்சையாக இரண்டுமுறை பார்த்துக்கொள்ளும்படியானது. குழந்தை அருகில் வரத் தூக்கிக்கொண்டேன். குழந்தையிடம் பெயர் கேட்டபோது அவளே சொன்னாள். ரயில் செங்கல்பட்டு வரும்வரை எல்லாம் நார்மலாக இருந்தது. ஒரு தலைவரின் இறப்பும் அது தொடர்பான கடையடைப்பும் வாகனப் போக்குவரத்து நிறுத்தமும் என, வண்டி தாம்பரம் வரும்போது

ஓவியங்கள் : அழ ரஜினிகாந்தன்

பிரதானச் சாலைகள் வெறிச்சோடியிருப்பதைக் காணமுடிந்தது.

காயத்திரி பயந்தாள். கைக்குழந்தையுடன் உறவினர் வீட்டுக்கு எப்படிச் செல்வதென்று தடுமாறினாள். அவளை ஆறுதல்படுத்தினேன். அவளுக்காக நானும் மாம்பலத்தில் இறங்க வேண்டுமென்றும், போக வேண்டிய இடத்துக்குக் கொண்டுபோய் விடுவதாகச் சொன்னதும் ஆறுதலானாள். அப்படியே செய்தேன். அதில் ஏற்பட்ட நட்பு, தொடர்ந்த காலங்களில் தொலைபேசி வழியாக அதிகமாகி, இருவரின் சுகதுக்கங்களும் பொதுவாயின. காயத்திரிக்கு ஒரேயொரு மகள். எனக்கும் அப்படியே. சென்னைக்கு எப்போது வந்தாலும் பார்க்க வந்துவிடுவாள். ஒருமுறை என்னைப் பார்ப்பதற்கென்றே வலிய சென்னைப் பயணத்தை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறாள். இந்த முறையும் அப்படிக்கூட இருக்கலாம்..

எந்தச் சூழ்நிலையில் வந்தாலும் அதிகபட்சம் ஒரு மணி நேரம் பேசக் கிடைக்கும். போனிலும் பெரிதாகப் பேசிக்கொள்ள முடியாது. கிடைக்கும் அந்த ஒரு மணி நேரத்தினை வீணாக்க விரும்பாமல், ஏதாவது கேட்டால், அதில் நேரம் போய்விடுமே என்று, அவளுக்குப் பிடித்த மக்காச்சோளக் கருதை வாங்கி வைத்திருக்கிறேன். கொஞ்சம் தாமதமானாலும் ரயில் பிடிக்கும் அவசரத்தில் அதுமாதிரியே ஹாரன் அடித்தபடியிருப்பாள். இடையிடையே 'நேரமாச்சி நேரமாச்சி' கெஞ்சல் வேறு இருக்கும்.

ஆரம்பக் காலத்தில் 'இன்னும் கொஞ்சநேரம் இருந்துட்டுப் போகலாமில்ல' என்று கேட்டபோது,

'இருக்கலாமே.. வெளியில போடின்னு புருசன் துரத்திட்டா நீ வச்சி வாழ்வியா? அதுவும் புள்ளையோட வந்துருவேன். பிள்ளை இந்த மாமா யாருன்னு கேட்டா என்ன பதில் சொல்றது?' என்றாள்.

இப்படித்தான் ரோட்டுல புளியம்பழம் உலுக்குற மாதிரி இடைவிடாம தோண்றதையெல்லாம் பேசி முடித்துவிடுவாள். அதிலும் அவள் உணர்ச்சி மேலிடப் பேசும்போதெல்லாம் எதுவும் பேசமாட்டேன். அவளுக்கு நிறைய பேச ஆசையிருந்தும், அதைக் கேட்க ஆளில்லை என்பதும், நான் பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருப்பேன் என்பதுமே எங்களுக்குள் இருக்கும் பந்தம்.

'முடியாதில்ல? அப்ப கம்முனு இரு.' அதற்குச் 'சரி என்கூட வந்துரு'ன்னு சொல்லியிருந்தால், 'போடா லூஷு. என் புருசன் தங்கம்டா.. நண்பன்கூட வாழமுடியாது...' என்று சுருக்கமாக முடித்திருப்பாள்.

இந்த நட்பின் எல்லையெதுவென்று அவளுக்குத் தெரியும். யாராவது கொஞ்சம் அதட்டிக்கேட்டாலே 'இவள் யாருன்னே எனக்குத் தெரியாது'ன்னு நழுவும் ரகம்தான் நானென்றும் அவளுக்குத் தெரியும். ஆனாலும் எனது தோழமை பிடித்திருக்கிறது. அதட்டாத, பாதுகாப்பான ஆண்கள் மீது இன்னமும் பெண்களுக்கு நம்பிக்கை இருக்கிறது போலும். என்னிடம் எதைப்பற்றி வேண்டுமானாலும் பேசலாம், எந்தச் சூழ்நிலையிலும் எல்லை மீறமாட்டேனென்று நம்பினாள். அந்த நம்பிக்கையிலேயே ஆறு ஆண்டுகள் ஓடியிருக்கிறது.

கடற்கரைக் காற்று வழக்கத்தைவிட இதமாக இருந்தது. நிலா வெளிச்சமும் இல்லை. நிலா வெளிச்சத்தில் அலைகளைப் பார்க்கக் காயத்திரிக்குப் பிடிக்கும். அதிலும் தலைக்குப் பின்னால் வட்ட நிலாவை வைத்தபடி சுட்டுவைத்த மக்காச் சோளம் சாப்பிடும் அவள் அழகை வெகுவாக ரசிப்பேன். இன்று நிலா இல்லை. பாவம், ஐஸ், சமோசா கடைகளின் போதாத வெளிச்சத்தில், ஏமாற்றத்துடனே அலைகளை ரசிக்கப்போகிறாள்.

மக்காச்சோளம் சுடச்சுட இருந்தால்தான் அவளுக்கும் பிடிக்கும். நெருப்பில் சுடும்போது தெறிக்கும் கங்குகளை அழகாகப் புகைப்படம் எடுத்தேன். வழக்கத்தைவிட புகைப்படம் அழகாக வந்திருந்தது. தோகையில் வைத்துக் கொடுத்தாலும் 'சூடு தாங்க முடியவில்லை' என இந்தச் சூட்டில் முன்பொருமுறை அவள் சொன்ன வார்த்தைகள் நினைவுக்கு வந்தன.

"எனக்கு என்னென்ன பிடிக்கும்னு ஞாபகம் வச்சி வாங்கித் தர்றியே, உன் பொண்டாட்டிக்கு என்ன பிடிக்கும்னு தெரியுமா

உனக்கு? இப்படி ஞாபகம் வச்சி எப்பவாவது வாங்கித் தந்துருக்கியா?"

"தந்துருக்கேன். ஆனா உன்ன மாதிரி சந்தோசமா வாங்கிக்கிட்டதில்ல. அவ்வளவு ஏன் ஒரு நன்றி கூட சொன்னதில்ல தெரியுமா?"

"புருஷங்களெல்லாம் முட்டாள்ங்கடா. சொன்னாத்தான் புரியுமா? அவரு அப்படி வாங்கித் தந்தப்போ, நானும் நீ எதிர்பார்க்கிற மாதிரி நன்றி சொன்னதில்ல. ஆனா அதை வச்சிக்கிட்டு சந்தோசத்துல கிச்சன்லேயும் பொறவாசல்லேயும் அழுதிருக்கேன் தெரியுமா? அப்படி அழுறத தேடிவந்து பார்க்க மாட்டீங்கள்ல? ஆம்பள புத்திக்கு, வீடுன்னா ஹாலும் கட்டிலும்தானே?"

இப்படியான அவளின் பேச்சில் ஆரம்ப நாட்களில் குழப்பத்தில் இருந்திருக்கிறேன். இவ்வளவு தெளிவானவளுக்கு நான் எப்படி தோழமையாக இருக்கமுடியும்? அவள் புறப்பட்டுப் போன பிறகான வெற்றிட மனதில் அவளைப் பற்றிய இப்படியான நினைவுகளில் குழம்பியிருக்கிறேன். ஆனாலும் காயத்திரியின் நட்பு பிடித்திருந்தது. அவளின் அக்கறையைப் பெரிதும் விரும்பினேன். அவளின் விருப்பத்திற்கு ஏற்றதுபோல் என்னை மாற்றிக்கொள்வதை விரும்பினேன். அவளின் தோழமையை மனைவிக்குத் தெரியாமல் பார்த்துக்கொண்டது பற்றி ஒரு சந்திப்பில் கேட்டாள்.

"அவளுக்கு இதெல்லாம் பிடிக்காது. புரிஞ்சிக்கவும் மாட்டா," என்றேன்.

"புரிஞ்சிக்கிற மாதிரி சொல்லு."

"வேண்டாம். வீணான பிரச்சனையில சிக்க விரும்பல."

"ஆனா, என் புருசன்கிட்ட உன்னைச் சொல்லிட்டேன்."

"அய்யய்யோ என்னன்னு சொன்ன?"

"சென்னை வந்தப்போ உன்னைச் சந்திச்சதையும், நீ செய்த உதவிகளையும்."

நான் பதட்டமானதை வெகுவாக ரசித்தாள்.

"ஏன் இப்படி நடுங்குற?"

"அவரு ஏதும் தப்பா நினைச்சிட்டா?"

"நான் ஒண்ணும் தப்பு பண்ணலியே?"

"அப்படி நெனச்சிட்டா?"

"ஒனக்கு அப்படி ஏதும் நெனப்பு இருக்குதாடா?"

"அய்யயோ. சத்தியமா இல்ல."

"அப்ப கம்முனு இரு. அவருக்கு என்னைப் பத்தி நல்லாவே தெரியும். இன்னொருத்தன் விரல் எம்மேல பட்டாலே கையை வெட்டிருவேன்னு. ஒரு கை இல்லனா உனக்கு ரொம்ப கஷ்டமா இருக்குமில்ல?"

"ஏய். வெட்டுறதுன்னே முடிவு பண்ணிட்டியா?"

"அது உன் கையிலதான் இருக்கு."

அனிச்சையாக என் கையைத் தடவிப் பார்த்தபோது அது ஹோட்டல் என்பதையும் அறியாமல் சிரித்தாள். சூழ்நிலை புரிந்ததும் ரொம்பவும் வெட்கப்பட்டாள்.

அவளின் அந்தச் சிரிப்பும் வெட்கமும் ரொம்பவும் பிடிக்கும். பலமுறை இதை அவளிடம் சொல்லியிருக்கிறேன். எழுந்திருக்கும்போது மணலைத் தட்டிவிடுவதுபோல் வார்த்தைகளையும் தட்டியபடி போய்விடுவாள்.

எதையும் வெளிப்படையாகப் பேசுவாள். வெளிப்படையாக இருப்பாள். இப்படித்தான் ஒருமுறை மகளின் பிறந்த நாளுக்கு பீனிக்ஸ்மாலில் டிரெஸ் எடுக்க வந்திருந்தபோது, எது நல்லது எது கெட்டது என்ற பேச்சின் நடுவே இப்படிச் சொன்னாள்..

"நீ நல்லவன்தான்ப்பா. ஆனா நல்லவனா இருக்க ரொம்பவும் கஷ்டப்படுற ஆளு. இன்னும் வெளிப்படையா சொல்றதுனா, ஒரு சந்தர்ப்பத்துக்காகக் காத்திருக்கிற நல்லவன். எந்தப் பிரச்சனையும் இல்லைன்னு உறுதியா தெரிஞ்சாலே, அந்த வாய்ப்பை நீ பயன்படுத்திக்குவெ."

"அப்படியெல்லாம் இல்ல. இத்தனை நாள்ல நீ என்னைச் சரியாப் புரிஞ்சிக்கலெ பாரு" என்றேன் கொஞ்சம் பதட்டமாகவே.

"புரிஞ்சதுனாலதான் சொல்றேன். சந்தர்ப்பம் அமையாத வரை உன்னப்போல



நல்லவனுமில்ல. சந்தர்ப்பம் அமைஞ்சிருச்சின்னா உன்னப்போலக் கெட்டவனுமில்ல.”

“ச்சே.. என்ன நீ இப்படி பேசுற?”

“இல்லப்பா. என்னைப்பத்தி உன் பொண்டாட்டிக்கிட்ட சொல்லாம இருக்கிறதே அப்படியான ஒரு சந்தர்ப்பத்துக்குத்தான்.”

என்ன சொல்வதென்று தெரியவில்லை. அமைதியாக இருந்தேன்.

காயத்திரி சொல்வதையும் மறுப்பதற்கில்லை. ஆரம்ப நாட்களில் அந்தத் தடுமாற்றம் இருந்ததும் உண்மைதான், இப்போதும் அந்தத் தடுமாற்றம் இல்லையென்றும் சொல்லிவிட முடியாது. மனசு அல்லாடியது. காயத்திரியின் முகத்தைத் தவிர்த்தேன்.

“ஆமா, இல்லேன்னு இப்ப எதுவும் சொல்ல வேண்டாம். ஆனா அதுதான் உண்மை. பிரச்சனைக்கு ஒடுற மாதிரியே, உண்மைக்கும் பயந்து ஓடுற ஆளு நீ. ஆனாலும் உன்னைப் பிடிக்கும், அதான் ஏன்னு தெரியல. ஏதோ ஒரு உறவு மாதிரி இருக்கு, ஆனா பெயர் சொல்லத் தெரியல. மனசுல இருக்குறதப் பேசணும்னு நினைக்கும்போது புருசன் காது அடைபட்டுக்கிடந்தா, யாருகிட்ட சொல்லமுடியும்? நீதான் குறுக்க பேசாம ‘ம்ம்’ன்னு கேட்டுக்குவ. எவ்ளோ திட்டினாலும் வாங்கிக்குவ. கல்யாணம்கிறது மனச அறுத்துப் போடுற விசயமில்லையே. புருசன் வயசுல ஒருத்தன ‘வாடா, போடா’ன்னு கூப்பிடுறது மனசுக்கு எவ்ளோ ஆறுதலா இருக்கு தெரியுமா?”

அப்படியே என் விரல்களைப் பற்றிக்கொண்டாள். அந்த நிமிடத்தை எதிர்கொள்ளமுடியாமல் தவித்தேன். இயல்பாக இருக்கும் பெண்களைக் காமத்தாலோ காதலாலோ அசைத்துவிடமுடியாது என்பதை உணர்ந்தேன். இது அந்த இரண்டுக்கும் அப்பாற்பட்ட ஒரு பற்றுதல் என்பதை எளிதாக அறிய முடிந்தது.

இன்னும் கொஞ்சம் பேசினால் அழுதுவிடுவாள், அதனாலே நானும் எதுவும் பேசவில்லை. சற்று நேரத்தில் நிதானத்திற்கு வந்தவளாகத் தொடர்ந்தாள்.

“என் புருசன் நல்லவன்தான். கேட்டதைச் செய்து தருவான். ஆனாலும் என்னோட உள்மனசுல இருக்கிற சிறுசிறு அலைகளைக் கேட்கவோ பார்க்கவோ நினைக்காதவன். இன்னும் சொல்லப்போனால் என் மனசு அப்படி

அடிச்சிக்குதுன்னே தெரியாது. மனைவிக்கு அப்படி எதுவும் இருக்கக் கூடாதுன்னு நினைக்கிற புருசனுக்கான பொதுப்புத்தி அவனுக்கும் இருக்கு. அதைத் தப்பு சொல்ல முடியாது. எந்தச் சூழ்நிலையிலும் இப்படி அவனோட விரல்களைப் பிடிச்சிக்கிட்டு என்னால அழ முடியாது. ‘இப்ப என்ன கொறை வச்சேன்னு கண்ணைக் கசக்குற’ன்னு ஒற்றை வரியில் கடந்து போயிடுவான். ஆனா நீ அப்படி இல்ல. எப்ப விரல்களை விடணும்னு தோணுதோ அதுவரை பிடிச்சிக்கோன்னு அப்படியே இருப்ப.”

அவளின் அந்த நம்பிக்கை ஆறுதலாக இருந்தது. கடைசிக் காலம் வரைக்கும் அவளோடு பயணிக்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டேன்.

“ஆனாலும் நான் தெளிவா இருக்கிற வரைக்கும் உன்னால எனக்கு எந்தப் பாதிப்பும் இல்ல. என்னோட தெளிவு கொஞ்சம் கலங்கினாக்கூட அத நீ பயன்படுத்திக்க நினைப்ப. அத்தோட சரி. எல்லா ஆம்பளைங்களுக்கும் பொதுவானது பொம்பளப் பசிதான்னு உன்னோட பேசுறதையும், பார்க்குறதையும் நிறுத்திடுவேன்,” என்றபோது அதிர்ந்தேன். இந்த வார்த்தைகளை எதிர்பார்க்கவில்லை. அதிலிருந்துதான் அவளுடனான தோழமையில் கவனமாக இருந்தேன்.

“இதுக்குமேல நான் பேசினா நீ தாங்கமாட்ட. ஆனாலும் நான் என்ன பேசினாலும் சலிக்காத மாதிரி கேட்டுக்கிட்டே இருப்ப. ஏன்னா பொண்டாட்டி தவிர மத்த பொண்ணுங்க எல்லாருக்கும் தெளிவா ஆறுதல் சொல்றவங்கதானடா நீங்கெல்லாம். சரி, இது போதும்னு நினைக்கிறேன், எனக்கு நேரமாச்சி நான் கிளம்புறேன்.”

இப்படித்தான் எதையாவது பேசி நிலைகுலையச் செய்துவிட்டுப் பதிலுக்குக் காத்திராமல் ஒவ்வொருமுறையும் புறப்பட்டுவிடுவாள். என்னுடைய ‘இன்னும் கொஞ்ச நேரம் இரேன்’ ‘உடனே போகணுமா’ போன்ற அழுகாச்சி வசனங்களைத் தவிர்ப்பதற்காகவே இப்படிச் செய்வாள்.

அதற்குப் பிறகு இப்போதுதான் சென்னை வந்திருக்கிறாள். சுட்ட மக்காச்சோளத்தின் சூடு குறையத் தொடங்கியிருந்தது. அவள் வந்தபிறகு வாங்கியிருக்கலாம். இந்நேரம் வந்திருக்க வேண்டும். டிராபிக்கில் மாட்டியிருப்பாள், வேறு காரணம்கூட இருக்கும்.

சிகெரெட்டை எடுத்துப் பத்தவைத்துப் பாதி கரைந்தபோது எதிரில் நின்றாள்.

“இத நீ விடமாட்டியா?”

“உன்னாலதான். சொன்ன நேரத்துக்கு வந்திருந்தா இது தேவைப்பட்டிருக்காது.”

“நல்ல சாக்குடா.”

“இந்தா, அப்பவே வாங்கிட்டேன். சூடு குறைஞ்சிருச்சி. பரவாயில்லையா. இல்ல வேற வாங்கிடவா?” மக்காச்சோளத்தை நீட்டினேன்.

“இட்ஸ் ஓகே. இன்னைக்கு விதிச்சது ஆறிப்போனது.. விடு.”

நேரமாகியே வந்திருந்ததால், நிறைய நேரம் பேசிக்கொண்டிருக்க முடியவில்லை. இந்த அரை மணி நேரத்தில்கூட ஒரு ஐந்து நிமிடம்தான் பேசியிருப்பேன். அவளே பேசினாள். பேசி ஓய்ந்ததும் புறப்படுவதாகச் சொன்னாள். மையமாகத் தலையை ஆட்டினேன்.

“என்ன? இன்னும் கொஞ்ச நேரம் இருந்துட்டுப் போகலாமில்ல. அதானே.”

“ஆமா.”

“உன்னப் பார்த்து ரொம்ப நாளாச்சி. நாளைக்கு உன் பெர்த்டே வேற. போனமுறை உன்னய ஏதேதோ பேசிட்டேன். அதுக்கப்புறம் ரெண்டொருமுறை போன்லயும் இயல்பாவே என்கிட்ட நீ பேசல, அதான் ஒரு சாரி சொல்லிட்டு, ஒரு கிப்ட் கொடுத்துட்டுப் போகலாம்னு வந்தேன்.”

“சீக்கிரமா வந்திருக்கலாமில்ல.”

“நாத்தனார் புள்ளைங்க விடல. ஊர்லேருந்து நேரா உன்கிட்ட வரமுடியாதே. அவங்கள சாக்குவச்சித்தானே உன்னய பார்க்கமுடியும்? அதுங்கள சமாளிச்சி, கடைக்கு ஓடி அவசர அவசரமா இந்தச் சட்டைய

வாங்கிட்டு வந்தேன்.''

“சரி... நானும் ரயில்வே ஸ்டேசனுக்கு வர்றேன்.''

“ஏய்... இந்த ஆறு மாசத்துல நீ சதை போட்டுட்டடா... வழக்கம்போல 36''சைஸ் வாங்கிருக்கேன். சரியா இருக்காதே.''

“ஆமா. பழைய சட்டைகளைப் போடமுடியல. ஆனாலும் நாளைக்கு இந்த சர்ட்தான் போட்டுக்கப் போறேன்.''

“லூசாடா நீ. பொண்டாட்டி ஆசையா வாங்கி வச்சிருப்பா, அதப் போட்டுக்க. பொண்டாட்டி உணர்வுகளை மதிங்கடா. அது இல்லாமத்தானே அவ்ளோ தூரத்துலேருந்து வந்து, உன் கையப் புடிச்சிக்கிட்டு இருக்கேன். நான் வாங்கினதைத்தான் போட்டுக்கணும்னு எதிர்பார்க்க மாட்டேன்.''

எழுந்தவாறே..

“சரி வர்றேன். அட்வான்ஸ் ஹேப்பி பர்த்டே பேபி. பை பை.''

“ரயில்வே ஸ்டேசனுக்கு நானும் வர்றேன்னு சொன்னேன்.''

“ஒண்ணும் தேவையில்ல. அங்க வந்து பீலிங்ஸ்ல நிப்ப... ஆறு மாசம் கழிச்சிப் பார்த்திருக்கேன்னு அழுவ. ‘ஆடுறா ராமா ஆடுறா ராமா’ன்னு தலையில குண்டானை வச்சிக்கிட்டுக் குட்டிக்கர்ணம் போடுவ. ரயில் வண்டி பிளாட்பார்ம் தாண்டுற வரைக்கும் ஓடிவருவ. வேண்டாம் சாமி. எனக்கு உன்னோட ஞாபகம் தெளிவா இருக்கு. எப்பவாவது உன்னய மறந்துட்டா, அப்ப வந்து இந்த சீனெல்லாம் போடு. இப்ப ஒழுங்கா வீடு போய்ச் சேரு. எனக்கு இந்த அரை மணி நேரம் போதும்.''

மக்காச்சோளச் சக்கையைக் கையில் கொடுத்துவிட்டு, அவசரத்தில் ஆட்டோவை மறித்து ஏறிக்கொண்டாள். கொஞ்ச தூரம் போய்த் தலையை நீட்டிப் பார்த்தாள், இன்னும் சற்றுத் தொலைவு சென்றதும் கையசைத்தாள்.

தந்துவிட்டுப்போன பார்சலைப் பிரித்தேன். அவள் சொன்னதுபோல அது 36'' சைஸ் இல்லை. 38''சைஸ், விளையாடியிருக்கிறாள். ஆனாலும் இந்த ஆறு மாதத்தில் ஏற்பட்ட என் உடல்மாற்றத்தைச் சரியாகத் தெரிந்திருக்கிறாள். நினைக்க நினைக்க அவள் எல்லாமுமாக மாறிக்கொண்டிருப்பதை உணரமுடிந்தது. வழக்கமாகப் பேசுகிற அளவிற்குக்கூடப் பேசமுடியவில்லை. மக்காச்சோளச் சக்கையை எறிய மனசு வரவில்லை, பார்சலுக்குள் வைத்துவிட்டேன்.

இந்த உணர்வே அவளை மறுபடியும் கூட்டிவரும் என்ற நம்பிக்கையுடனே வீட்டிற்குச் சென்றேன். வாசலில் நின்றிருந்த மனைவி கையிலிருந்த துணிக் கவரைப் பார்த்ததும் கேட்டாள்.

“இதென்ன? டிரெஸ் மாதிரி இருக்கு.''

சட்டெனப் பொய் வந்தது. “பிறந்த நாளுக்கு வாங்கினேன்.''

பிரித்துப் பார்த்தவள்..

“என்ன கலரு இது. டிசைன்கூட சரியில்ல. இது உங்களுக்கு நல்லாவே இருக்காது. பில்லைக் குடுங்க. நாளைக்குப் போயி மாத்திடலாம்,'' என்றாள். அவள் பேச்சில், வழக்கம் போலவே எல்லாவற்றிலும் தன்னை முன்னிலைப்படுத்திக்கொள்ளும் ஆர்வம் தெரிந்தது.

“இல்ல எனக்குப் பிடிச்சிருக்கு.''

“உங்களுக்கு எது நல்லாருக்கும், நல்லாருக்காதுன்னு எனக்குத் தெரியும். இது வேண்டாம் மாத்திடலாம்.'' பைக்குள் சட்டைக்கான பில்லைத் தேடினாள்.

அது காயத்திரியுடன் ரயில் பயணத்தில் இருந்தது. நாளை அதனிடம் பிறந்த நாள் வாழ்த்துச் சொல்ல எடுத்துப் போயிருந்தாள். பில் தேடியவளின் கையில் மக்காச்சோளச் சக்கை சிக்கியது.

“தின்னா, அதத் தூக்கிப் போட்டுட்டு வரத்தெரியாதா?'' தூரத்தில் எறிந்தவாறே சொன்னாள்.

இதைக் காயத்திரியின் வீட்டில் சேர்க்கும்படியாக, இன்னும் தூரமாக எறியக் கேட்கலாம் போலிருந்தது எனக்கு. ■

அம்மையார் ஹைநூன்பீவி நினைவு
'சிறுகதைப் பரிசுப்போட்டி'

சிறப்புப் பரிசு பெற்ற சிறுகதை

நித்வி



# பொன்வண்டு காலம்

போன கோடை விடுமுறைக்கெல்லாம் இப்படி இல்லை....

வீடு, அணைப் பிள்ளையார் கோயில்

வீடு, அணைப் பிள்ளையார் கோயில்

வீடு, அணைப் பிள்ளையார் கோயில்

எனப் பகல் பொழுதை அணைப் பிள்ளையார் கோயிலுக்கும், இரவை வீட்டுக்கும் எனப் பங்கு பிரித்துக்கொள்வோம்...

பொழுது விடிய என் நட்பின் வீடுகளுக்கு நான் செல்வேன். இல்லையா என் நட்பில் ஒருவன் என்னைத் தேடி வந்துவிடுவான். விடிந்த சிறிதுக்குள் குழுவாய்ச் சேர்ந்துவிடுவோம். பிறகென்ன எங்களது கால்கள் தானாக அணைப் பிள்ளையார் கோயில் நோக்கி நகர ஆரம்பிக்கும்.

வீட்டுக்கும் கோவிலுக்கும் பக்கம்தான். ஒரே கிலோமீட்டர். எங்கள் ஏரியா ஊரின் கடைசி மூலை. அணைப் பிள்ளையார் கோயிலோ ஊரைத் தாண்டி நான் சொன்னேனே ஒரு கிலோ மீட்டர் தூரம் என்று. அங்கு இருக்கும். ரயில்வே ஸ்டேஷன், ரெட்டை வாய்க்கால் எல்லாம் தாண்டி மூணார் போகும் ரோட்டில்.

பிள்ளையார் கோயில். கோயிலை ஒட்டி கொட்டகுடி ஆறு கிளை கிளையாகப் பிரிந்து ஓடும். அதில் ஒரு கிளை இந்த ஆறு... கோயிலும் ஆறும் ஒருவரை ஒருவர் தொட்டு அடுத்தடுத்து இருப்பர். மேற்குத் தொடர்ச்சி மலையில் வானம் கொட்டினால் கொட்டகுடி பெருக்கெடுத்துவிடும். ஊரைச்

ஓவியங்கள் : அழ.ரஜினிகாந்தன்

சுற்றி ஓடும் கொட்டகுடியின் கிளைகள் தங்கு தடையின்றிக் குறுக்கே வரும். அனைத்தையும் அடித்து இழுத்துக்கொண்டு ஓடும். இதன் ஓட்டத்தைக் கட்டுக்குள் கொண்டு வரவே கொட்டகுடி ஓடு பாதையில் ஆங்காங்கே தடுப்புகள் அமைக்கப்பட்டன அரசாங்கத்தால். அப்படித்தான் இங்கும் தடுப்பு ஒன்று அமைக்கப்பட்டது. சரியாகக் கோயிலை ஒட்டியேதான் அந்தத் தடுப்பும் அமைந்தது.. ஒரு சின்ன அணை போல.

அணையும், ஆறும், பிள்ளையாரும் தங்களுக்கென ஒரு தனித்த பெயரை வைத்துக்கொண்டனர் (அ) ஊரில் வைத்தனர் “அணைப் பிள்ளையார்” என்று...

அங்கே வரும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நோக்கம் உண்டு. கார்த்திகை மாதம் ஆனால் ஐயப்ப சாமிக்கு மாலை போட்டவர்கள் சூரியனுக்கு முன்னேயே எழுந்து ஆற்றில் குளியலைப் போட்டுப் பிள்ளையாரைக் கும்பிட்டுவிட்டுச் செல்வர். ஊர்க்காரர்கள் குளிக்கவும் துவைக்கவுமாய் இருப்பர். என்னைப் போன்ற சில்வண்டுகள் குளிக்க, மீன்பிடிக்க, கருவேல மரமேறி “பொன்வண்டு” பிடிக்க வருவோம்...

லீவு விட்டாப் போதும், தெனைக்கும் இதே வேலைதான். பொன்வண்டைப் பிடித்து ரெடிமேட் சேலைக்குத் தரும் அட்டை பாக்ஸில் போட்டு வளர்த்து, தீப்பெட்டி அட்டைக்குள் வைத்து விற்போம். பொன்வண்டிற்கும் எங்களுக்கும் பிடித்தமான ஒன்று ஒரே மரத்திலே கிடைக்கும் “கொடிக்காய் மரம்.”

கொத்துக்கொத்தாய்க் கொடிக்காய் பிடுங்கித் தின்போம். பொன்வண்டுகளுக்கும் கொடிக்காய் இலைகளைத் திங்கத் தருவோம். அந்த இலைகளைப் பொன்வண்டின் கழுத்துக்கும் உடம்பிற்கும் இடையே இருக்கும் ஒரு குட்டி இடைவெளியில் வைத்து அது கழுத்தை முன்னும் பின்னும் உடலோடு சாய்க்க சாய்க்க இலைகள் அறுபடும். அங்கே கையை வைத்தால் ஒரே கிழியாய் கிழித்து ரத்தம் வந்துவிடும் என்று ஒரு கதை சொல்லப்பட்டு வந்தது. யார் சொன்னது என்று தெரியவில்லை. இதுவரை யாரும் அப்படி அறுபட்டதில்லை நான் பார்க்க. அது அந்த இலைகளை விரும்பித் திங்கும் என்றுதான் நம்பினோம். ஆனால் எங்களுக்கு அந்தக் கொடிக்காய் விருப்பமானது. வாயில் வைத்தால் துவர்ப்போ துவர்ப்பு. சப்பு கொட்டிக்கொண்டே சுவைப்போம்.

போகும்போது மட்டும்தான் நடந்து, திரும்பி வீடு வந்து சேர மாட்டுவண்டிப் பயணம்தான். அணைப் பிள்ளையார் வந்து வண்டி வண்டியாக மண் எடுத்துக்கொண்டு போவார்கள், வீடு கட்டுவதற்கு. அந்த வண்டியிலேயே நாங்களும் தொற்றிக்கொண்டு செல்வோம். நான் என் வீட்டுப் பக்கத்தில் இருக்கும் சங்கையா அண்ணன் வண்டியைப் பிடித்துக்கொள்வேன். அப்பப்போ அதட்டுவார், நான் சிரித்தே அவரை மழுப்பிவிடுவேன். இப்படித்தான் கழிந்தது ஒவ்வொரு நாளும் போன கோடை விடுமுறையில்.

ஆனால்.. இந்தக் கோடை விடுமுறையின் இறுதி நாளுக்கு வந்துவிட்டோம், இருந்தும் அது போன விடுமுறையின் பக்கம் கூட நிற்க முடியாது என்பதைப் போலத்தான் போகிறது.

தண்ணீர் வரத்து முன்பைப் போல இல்லை. ஆனாலும் அணைப் பிள்ளையார் நோக்கி நகரும் எங்கள் கூட்டம் குறையவில்லை. ஆனால் மாட்டுவண்டிகள் கூட்டம் குறைந்துவிட்டது. பொன்வண்டுகளைப் பிடித்துக்கொண்டு மட்ட மத்தியானத்தில் கால் சுட நடந்து போகிறோம். மாட்டுவண்டி இருந்தால் அதன் மீது ஏறி அமர்ந்துகொண்டு சொகுசாக வீடு சேர்வோம்.

எனக்கு மாட்டு வண்டியின் முளைக் குச்சியைப் பிடித்து சக்கரத்தில் ஒற்றைக் கால் வைத்து ஒரே முட்டில் தாவி வண்டியில் ஏற கொள்ளைப் பிரியம். வண்டி நிக்கயிலே மட்டும்தான் அப்படி ஏற முடியும். ஓடும் வண்டியில் ஏறினால் கால் ஒடிந்து படுக்கைக்கு இரையாக வேண்டியதுதான்.

பல மாதங்களாகவே சங்கையா அண்ணனின் மாட்டுவண்டி கிடப்பில்தான் இருந்தது. அதை எடுக்கவே இல்லை.

வெறுமனே அவர் வீட்டுக்கு வெளியே இருக்கும் கொட்டகையை ஒட்டி வண்டி நின்றிருக்கும். அந்த வண்டியில் மாடுகள் பூட்டி நான் பார்த்து பல நாட்கள் ஆகிற்று. ஒரு மாடு அடிக்கடி நோய் வாய்ப்பட்டுக்கொண்டே இருந்தது. அழகான வெள்ளைக் காளை சாம்பல் நிற பெரிய கொம்புகளோடு வளர்ந்து நெடுநெடுவென இருக்கும். அதன் திமிலைப் பார்த்தால் மேற்குத் தொடர்ச்சி மலை போல மேல ஏறி கீழே இறங்கி. அந்தத் திமிலில் முளைத்திருக்கும் மயிர்கள் எங்கள் வீட்டில் இருந்து மேற்குத் தொடர்ச்சி மலையைப் பார்த்தால் அதில் இருக்கும் மரங்களைப் போல் நட்டுக்கொண்டு இருக்கும். இப்படி மாடுகளைப் பூட்டாத அந்த வண்டிகளில் நாங்கள் தினமும் மேலேறிக் கீழே குதித்து மறுபடி மேலே ஏறிப் பின் கீழே குதித்து விளையாடுவோம். என்னதான் இருந்தாலும் ஓடும் வண்டியின் பின்னே ஏறி உட்கார்ந்து போவது ஒரு தனி ரகம்தான். அது ஆற்றில் மிதக்கும் ஒரு சுகத்தைக் கொடுக்கும்.

பையில் பொன்வண்டுகள், ஒரு கையில் கொடிக்காயிலை, வாயில் கொடிக்காய் எனத் துணிக்கடை அலமாரிகளைப் போல நிரம்பி இருந்தோம். துவர்ப்பைச் சுவைத்துக்கொண்டே வீடு வர சங்கையா அண்ணன் வீட்டின் முன் தெருவில் பாதிப்பேர் கூடியிருந்தனர். மீதி பேர் அவரின் கொட்டகை முன்பு இருந்தனர்...

இரண்டு மாசத்திற்கு முன்பு கூட இதே போலத்தான் இங்கு கூட்டம் இருந்தது. நான் சொன்னேன் அல்லவா.. அந்த வண்டிக் காளை, அதற்கு (காணம்) அம்மை போட்டிருந்தது. உடம்பெல்லாம் ஆங்காங்கே பொட்டு வைத்தாற்போலப் புண்கள். எனக்கு அம்மை போட்டபோது கூட இதே மாதிரிதான் இருந்தது. அதில் ஒரு பொட்டு வடுவாய் என் கையில் இன்னும் இருக்கிறது.

என் அம்மைக்கு என்னை வீட்டை விட்டு வெளியே விடாமல் வேப்பிலை மேலே வெள்ளைத் துணி விரித்து அதில் படுக்க வைத்து வேப்பிலை போட்ட தண்ணீர் ஊற்றி.. ஆனால், மாட்டிற்கு அவர்கள் செய்ததே வேறு.

சங்கையா அண்ணனின் மனைவி செல்லம்மாக்கா என்னிடம்தான் சொன்னார்கள். முக்கு வீட்டில் இருக்கும் ஜெயந்தியை அழைத்து வரச் சொல்லி. விர்ரென மோட்டார் வண்டிச் சத்தத்தை எழுப்பிக்கொண்டு எங்கும் நிற்காமல் முக்கு வீட்டில் போய்த்தான் நின்றேன். நானும் ஜெயந்தி அக்காவும் வருவதற்குள் தெருவில் இருக்கும் இன்னும் ரெண்டு ஜெயந்தி அங்கிருந்தனர். அதில் ஒரு ஜெயந்தி என் அம்மா...

`என்னக்கா ஆச்சு?`

செல்லம்மா அழுது வடிந்த கண்களுடன் தொண்டைக்கு உள்ளே இருந்த பேச்சை வெளியே இழுத்துக்கொண்டு வந்து பேசினார்.

`மாட்டுக்கு அம்ம போட்டுருக்குடி...`

`என்னக்கா சொல்ற, அதே இவ்வள கூட்டமா!`

`இவெ, வந்து கூப்புட்ட வேகத்துல என்னமோ ஏதோனு நெனச்சு ஓடியாந்தே. நான் நெனச்சது சரியாத்தேய்ம் போச்சு...`

சங்கையா அண்ணன் வீட்டிற்குள் இருந்து வெளியே கொட்டகைக்கு வந்தார். `செல்லம்மா ஆரம்பிச்சு வுடு...`

செல்லம்மாக்கா வீட்டுக்குள்ளிருந்து சொலகு ஒன்றை எடுத்து வந்தார். என் அம்மா, மளிகைக் கடைக்கார ஜெயந்தி அக்கா, முக்கு வீட்டு ஜெயந்தி அக்கா என அந்தச் சொலகை மூவருமே பிடித்திருந்தனர் சொலகின் பின்பக்கமாக. செல்லம்மாக்கா அந்த சொலகில் அடுப்பில் இருந்த விறகுச் சாம்பலைக் கொட்டினார். படுத்துக் கிடந்த மாட்டை எழுப்ப முயற்சி நடந்துகொண்டிருந்தது. அது எழவே மாட்டேன் என்றது.

`சரி, சரி, படுத்துருக்க வாக்குலயே செய்வோம்...`

இரண்டு ஜெயந்தி அக்காவும், என் ஜெயந்தி அம்மாவும் மாட்டின் தலையிலிருந்து அந்தச் சாம்பலைப் புடைத்துக்கொண்டு மாட்டு வால்வரை, மறுபடி மாட்டுத் தலை முதல் வால்



வரை, மறுபடி தலை முதல் வால் வரை என்று மூன்று வட்டம் சாம்பலைப் பொடைத்தனர். மூன்றாவது வட்டம் மொத்தச் சாம்பலையும் மாட்டின் வால் பகுதிக்கு அருகே கீழே கொட்டிவிட்டனர்.

என் அம்மா, அப்புறம் ரெண்டு ஜெயந்தி அக்காவும் செல்லம்மாக்காவின் அருகில் போய் நின்று...

`ஏன் கா அழுகுற? எல்லாஞ் சரியாப் போயிரும்கா... செய்ய வேண்டியத செஞ்சிட்டோம், நம்புவோம், நீ மனச விட்டுராத. அண்ணனுக்கு நீதே தைரியஞ் சொல்லணும். மாடு கூடவே பொலங்குன ஆளு கொஞ்சம் பாத்துக்க` என ஆளாளுக்குத் தைரியம் சொல்லிக் கிளம்பினர்.

நானும் என் கூட்டுச் சிறுசுகளும் மாட்டு வண்டி மீது ஏறி என்னடா இப்படி ஆகிருச்சு, இனிமே நம்ம வண்டில போக முடியாதா? என்றவாறு பேசிக்கொண்டோம்.

`ஒனக்கு அம்ம போட்டுச்சே, சரியாக எத்தன நாளாச்சு?` பத்து விரல்களையும் காட்டினான். மடக்கிவிட்டு மறுபடியும் பத்து விரல்களையும் காட்டினான். அதே மாதிரி மாட்டுக்கும் சரியாகிரும்ப்பி...

****************

இன்னைக்கும் அதுபோலவேதான் கூட்டம் கூடியிருந்தனர். அவர்கள் வீட்டைப் பார்த்து ஓடினோம். அன்னைக்கு மாதிரியே தெருவில் பாதிப்பேர் வீட்டு வாசலிலும், மீதி பேர் கொட்டகைப் பக்கமும்...

நான் அம்மா பக்கத்தில் போனேன். கைகளைப் பற்றினேன், கீழே குனிந்து என்னைப் பார்த்தார். என் தலையைத் தடவிக் கொடுத்தார்.

`மாட்டுக்கு மறுவுடியும் என்னம்மா ஆச்சு?`

`மாட்டுக்கு ஒடம்பு சரியில்லப்பா பாலு...`



நான் கொட்டகைக்குள் படுத்திருந்த மாட்டைப் பார்த்தேன். உடலில் எங்கேயும் பொட்டு போன்ற காயங்கள் ஒன்றும் இல்லை. அது தன் தலையைத் தரையில் ஒட்டி வைத்திருந்தது. கண்கள் எல்லாம் கண்ணீர் வடிந்து ஓடா ஆற்றுத் தடம் போல இருந்தது. மாட்டின் குண்டியில் சலம் போல ஏதோ ஒன்று ஒழுகியது...

`ஏய், வழிய விடுங்கப்பா டாக்டர் வராரு...`

மாட்டுக் கொட்டகையை நோக்கி டாக்டர் வந்தார். சங்கையா அண்ணன் ஓடிவந்து மாட்டை எழுப்பினார். மாடு முக்கி முனங்கி எழுந்து நின்றது.

டாக்டர் தன் கையில் வைத்திருந்தவற்றைக் கீழே ஓரமாய் வைத்தார். அவர் பையில் இருந்து ப்ளூ கலரில் ஒன்றை எடுத்தார். அது கையுறை. ஒவ்வொன்றாய்த் தன் கைகளில் மாட்டினார். அது மிக நீளமாக இருந்தது. அவரின் கைமுட்டி வரை நீண்டிருந்தது...

சங்கையா அண்ணன் மாட்டின் வாலைத் தூக்கிப் பிடிக்க டாக்டர் மாட்டின் குண்டிக்குள் கையை விட்டார். சில நொடிகள் அவரின் கை உள்ளேதான் இருந்தது. மாடு கொஞ்சம் கூட தன் உடம்பை நகர்த்தவில்லை. கட்டை போலவே அசைவற்று இருந்தது. டாக்டர் தன் கையை வெளியே எடுக்க குண்டியில் ஒட்டி இருந்த சலம் எல்லாம் கீழே ஒழுகியது. கையுறையெல்லாம் திட்டு திட்டாய் ரத்தம் ஒட்டிக் கிடந்தது...

டாக்டர் சங்கையா அண்ணனின் முகத்தைப் பார்த்தார்.

`ம்ஹிம்...` என்று தலையை ஆட்டினார்.

ஊசி ஒன்றைப் போட்டுவிட்டார். டிவியில் நான் பார்த்துப் பயப்படும் அதே மாட்டு ஊசி. திக்கென்று இருந்தது. பல அடிகள் என் கால் பின்னே போனது.

பையில் இருந்து காசை எடுத்து டாக்டரிடம் நீட்டினார்.

`அட உள்ள வையப்பா, ஏற்கனவே ரொம்ப செலவழிச்சிட்ட....`

இருந்தும் சங்கையா அண்ணன் அவர் கையில் காசைத் திணித்துவிட்டார்.

`சங்கையா இனி செலவழிக்கிறது எல்லாம் ஆத்துல போட்ட மாதிரி` என்று சொல்லி மறுபடியும் அவர் முகத்தைப் பார்த்தார்.

`புரிஞ்சிருக்கும்னு நினைக்கிறேன்.`

சொல்லிவிட்டு நடையைக் கட்டினார்.

செல்லம்மாக்கா மூக்கை உறிஞ்சிக்கொண்டே அழுதது. என் அம்மாவும் தெருவில் சிலரும் பக்கம் நின்று ஆறுதல் சொல்லினர்...

பக்கத்துத் தெருவில் இருக்கும் நடராசு அண்ணன் சங்கையா அண்ணன் கிட்டே போனார்...

`இனி ஆகாதுப்பா, டாக்டர் சொன்னத கேட்டேல்ல...`

`மண்ணுக்குப் போயி ரெண்டு மாசோ ஆகுது, வண்டி ஓட்டமே இல்ல...`

`இனி ஓட்டம் இருக்காதுய்யா... கவுர்மெண்ட்ல சொல்லிட்டாய்ங்க. இனி ஆத்துல மண்ணடிக்கக் கூடாதுன்னு. அதனாலதான இத்தன மாசமா வண்டிய எல்லாரும் கெடப்புல போட்ருந்தீங்க. பகல்ல போனா புடிச்சுக்கிருவாய்ங்கன்னு ராவுல போனீங்க. என்ன ஆச்சு பைன கட்டுனதுதே மிச்சம்... வெய்யக்காலம் உங் கொட்டகையைப் பாரு எல்லா பக்கமு ஓட்ட. அதுல கெடந்து கெடந்தே மாட்டுக்குச் சூடு பிடிச்சிருக்கும்... மொதல்ல கூரய மேயிற வழியப் பாரு...`

`என் நெலம தெரியதாண்ணே உனக்கு, தெரிஞ்சிட்டே சொல்றியே. வண்டி ஓட்டமில்ல, இந்த ரெண்டு பசு மாடு கறக்குற பால ஊத்தித்தேன் வயித்த கழுவுறதா இருக்கு. தீவனக் கடையில வேற கொள்ளக் கடெங் கெடக்கு... என்னய என்ன பண்ணச் சொல்ற?`

`பேசாம மாட்ட ஏத்தி விட்டுருவோம் சங்கையா...`

`வேணாம்ணே, வேணாம்ணே மனசுக்கு ஒப்பாதுணே அது. புள்ள கணகட்டா அங்குட்டும் இங்கிட்டுமா ஓடிக்கிட்டுத் திரிஞ்சது...`

`எலேய் சுத்திப் பாரு உங் கொட்டகைய நீயே, ஒத்தத குடுத்து மத்தத காப்பாத்திக்கன்னு சொல்றேன். இந்தக் கொட்டகையிலேயே மத்ததுகளும் கெடந்துச்சு இதோட நெலமதே அதுகளுக்கும்...`

`உசுரு இருக்கும்போதே ஏத்திவிட்டாத்தே, இல்லேன்னா அப்ப பொலம்பி ப்ரோசனமில்ல. எம் மனசுல பட்டத சொல்லிட்டே, இனி உம் முடிவுதே. வீட்டுல கலந்து பேசி ஆக வேண்டியது என்னான்னு பாரு, நா வாரேன்...`

கொஞ்சம் கொஞ்சமாக சங்கையா அண்ணன் வீடு கூட்டத்தை இழந்துகொண்டிருந்தது. முன்பைப் போலவே நானும் என்னைப் போன்ற மற்ற சின்னதுகளும் மாட்டு வண்டி மீதேறி என்னடா இப்படி ஆகிருச்சு என்று மறுபடி ஆரம்பித்தோம். நான் அப்போதும் முளைக்குச்சியை பிடித்துத்தான் வண்டி மீது ஏறினேன்.

மறுநாள் ஸ்கூலுக்குச் சென்றுவிட்டுச் சாயங்காலமாக வீடு வந்தேன்.

சங்கையா அண்ணனின் மாட்டுக் கொட்டகையைப் பிடுங்கிப் போட்டுக்கொண்டிருந்தனர். கட்டுக்கட்டாய்ப் புதுக் கூரைகள் இருந்தன அருகே. பக்கத்திலே பசுமாடுகள் மாத்திரம் இருந்தன. காளை மாடுகளைக் காணோம். கூடவே, வண்டியையும் தேடினேன்.

வண்டி இருந்த இடத்தில் ஒரே ஒரு முளைக்குச்சி கிடந்தது. எடுத்துக்கொண்டு ஒரே ஓட்டம் வீட்டிற்கு...

அதற்கப்புறம் அந்த வண்டி என் கண்களுக்கு அகப்படவேயில்லை. வெள்ளைக் காளைகளும்தான்...

■

• கவிஜி



# சொற்களால் நிகழும் கொலை

**திரைப்படம் : The Incident**

மானுடச் சிக்கல் இந்தக் கேலி கிண்டல் நையாண்டி இது கோட்டின் அளவில் இருக்கும் பட்சத்தில் புன்னகையோடு நகர்ந்துவிடும் மனம். கோடு தாண்டிவிட்டால் எதிர் வினை காட்டும். அங்கிருந்து ஒரு வினை உருவாகும். அதன் தாக்கம் ஈகோவில் வந்து நிற்கும். அதன் ஆக்கம் அடிதடி வரை கூட செல்லும். பிறகு அதையும் தாண்டும். அது கொலை வரை கூட செல்லும்.

ஒரு மனிதனைத் தொடாமலே கூட கொலை செய்துவிட முடியும். அவன் மீது தொடர்ந்து சொற்களை வீசினால் போதும். அதில் வசைச் சொற்கள் இல்லாமல் போனாலும் பரவாயில்லை. ஆனால் தொந்தரவு செய்தல் எனும் வழிமுறையில் அவனை நிலைகுலையச் செய்துவிட முடியும்.

இதுதான் இந்தப் படத்தின் கோடு. கிறுக்கப்பட்ட கோடுகளின் வழியே சேருமிடம் எப்படி கிடைக்கும்?

அது ஒரு ஞாயிறு இரவு.

நள்ளிரவில் பாரில் இருந்து வெளியேறும் இரு நண்பர்கள். இருவருமே வம்பர்கள். வம்பிழுத்து விளையாடுவதில் கில்லாடிகள். குடிப்பது கூட இரண்டாம் பட்சம்தான். ஊரில் தெருவில் பக்கத்து பிளாட்டில் என்று எப்போதும் இப்படி ரெண்டு சல்லைகள் இருப்பார்கள். கவனித்திருப்போம். நேரம் காலம் தெரியாமல் ஊர் சுற்றிக்கொண்டும் தொண்டை கிழியக் கத்திக்கொண்டும் அவர்களுக்குள்ளாகவே பேசிச் சண்டையிட்டு, கொஞ்சிக் குலாவி, கும்மாளமிட்டு... அப்படி இருவர்தான் இங்கே ஹீரோஸ். அவர்களிடம் இருந்துதான் கதை ஆரம்பிக்கிறது.

அவர்கள் எங்கு வேண்டுமானாலும் செல்வார்கள். என்ன வேண்டுமானாலும் செய்வார்கள். எது செய்தாலும் சிரிப்பார்கள். மாறி மாறிக் கருத்து சொல்லிக்கொள்வார்கள்.

இடையில் யாராவது சிக்கினால்.. சூழ்ந்துகொண்டு என்னென்னவோ பேசுவார்கள். எதிர் தரப்பின் வேகம் பொறுத்துக் கைகலப்பும் நடக்கும். அதன் நீட்சியாகத் திருட்டு கூட அரங்கேறும். அப்படித்தான்.. ஒருவர் நியூயார்க் வீதியில் சிக்குகிறார். இந்த நேரத்தில் உனக்கென்னடா இங்க வேலை என்பது போல என்னென்னவோ பேசி என்னென்னவோ செய்து வாட்சைப் பிடுங்கிக்கொண்டு முதுகில் சரமாரியாகக் குத்தி வீழ்த்திவிட்டு ஒரு வஞ்சகச் சிரிப்பை உதிர்க்கும்போது படம் கொஞ்சம் சீரியஸ்தான் என்று நமக்குப் பதறத் தொடங்குகிறது.

இங்கேயே பதறிவிட்டால் எப்படி என்று சினிமா அறிவு நம்மையும் அறியாமல் நம்மை எதற்கோ தயார்ப்படுத்துகிறது. அந்த எதற்கோதான் இனி இருக்கும் காட்சிக் கதறல்கள்.

மனிதன் இயல்பிலேயே தொந்தரவை ரசிக்கும் மிருகம். அவன் சூனியத்தில் வட்டமிட்டுக்கொண்டே இருக்கும் நாய்வால். திடும்மென எகிறிவிடும் வெறிக்குக் காத்திருக்கும் ஓநாய்கள் போலத்தான் அந்த வம்பன்களின் குணம். கோரம் நிறைந்த குரங்கன்கள்.

அதே நேரத்தில் வேறு வேறு இடங்களிலிருந்து சுரங்க ரயிலுக்கு வருகிறார்கள் சில மனிதர்கள். இவர்கள்தான் ஜெயகாந்தன் சொன்ன "சில நேரங்களில் சில மனிதர்கள்" என்று நமக்கு இறுதியில்தான் புரிகிறது. மனிதன் மகத்தான சல்லிப்பயல் என்று ஜி நாகராஜன் சொன்னது கூட நினைவுக்கு வருகிறது.

ஒரு வயதான தம்பதி, ஒரு நடுத்தர தம்பதி, கூட அவர்கள் பெண் பிள்ளை, லீவ் முடிந்து மிலிட்டரிக்குக் கிளம்பும் இருவர்.. அவர்களில் ஒருவனுக்கு ஒரு கை உடைந்து கட்டு போட்டிருக்கிறது, ஒரு கறுப்பின ஜோடி, ஒரு இளஞ்சோடி, ஒரே பாரில் இருந்து வெளியேறிய ஒரு முதியவர் ஒரு இளைஞர் என்று இவர்கள்தான் ரயிலேறிய பயணிகள். பலதரப்பட்ட சமூக நிலைகளில் இருந்து வரும் இவர்கள் சமூகத்தின் கண்ணாடிகள். அவரவர்க்கு அவரவர் பிரச்சனை. கோபம் தாபம் காதல் காமம் என்று எவர் பற்றியும் கவலைப்படாத மேலை நாட்டுக் கலாச்சாரம் அவரவர் வேலையைப் பார்க்க அனுமதிக்கிறது.

நள்ளிரவில் கருப்பு வெள்ளையில் ஜன்னல் ஒளி மட்டும் மறைந்து மறைந்து ஒளிர்ந்து நகரும் சத்தத்தோடு ரயிலைக் காணுகையில் நாம் ஒரு பலமான திரைக்கதைக்குள் அமர்ந்திருக்கிறோம் என்று நம்புகிறோம். அத்தனை இயல்பான காட்சிகளைத் தூரத்துக் கண்களில் நகர்த்திக் காட்டிய விதம்... கருப்பு வெள்ளையில் கலகம் செய்திருக்கிறார்கள் என்றுதான் பிரமிக்கச் செய்கிறது. ஒவ்வொரு ஸ்டேஷனில் இருந்தும் ஒவ்வொரு ஜோடி வந்து ஏறுகிறார்கள். ஏறிய இவர்கள் அனைவருக்கும் ஒரே கோச். முடிச்சுக்கு ஏங்கும் மயக்கம் நிகழ... பாத்திரங்களைப் படைத்தவன் செய்யும் திரைக்கதை மாயம்.

அந்தக் கோச்சில் ஏற்கனவே ஒரு பிச்சைக்காரன் படுத்திருக்கிறான்.. கால சாட்சி போல.

என்னடா இது... இப்படி பிட்டு பிட்டாக அடுத்தடுத்த காட்சிகளில் வேறு வேறு பாத்திரங்கள் நிறைகிறதே என்று யோசிக்கும்போதே... அந்த ரெண்டு ராத்திரி பிசாசுகள் வந்து சேர்கிறார்கள். என்னவோ நடக்கப் போகிறது என்று நாம் தயாராகிவிடும் தருணம் இது. வண்டிக்குள் ஏறி நின்று ஒவ்வொருவரையும் அவர்கள் பார்க்கும் தோரணையே இது ஞாயிறு இல்லை.. 'சனி' என்று யூகிக்க வைக்கிறது. வம்பு இழுப்பதை முதலில் ஆரம்பிப்பது அந்தப் பிச்சைக்காரனிடம்தான். அவனிடமும் எந்த எதிர்வினையும் இல்லை. மற்றவர்களிடமும் எந்த எதிர்வினையும் இல்லை. நாம் இன்னும் கவனமாகக் காட்சியை ஆராய ஆரம்பிக்கிறோம்.

எந்தக் கண்கள் இதைக் கூர்ந்து கவனிக்கிறதோ... எந்த வாய் இதற்கு எதிராக ஒரு வார்த்தை திறக்கிறதோ... அவர்கள் பக்கம் வேதாளம் திரும்பிவிட காத்திருக்கிறது.

வடிவேலு மாதிரிதான். வா வா வாடா... நீ வா நீ வா என்று வம்பிழுத்து முதலில் வாய்விட்ட அந்தத் தனியான இளைஞன் பக்கம் திரும்புகிறான் வம்பன் நம்பர் ஒன்.

வம்பன் நம்பர் 2... சரி நீ அவனைப் பாரு, நான் வேடிக்கை பார்க்கிறேன் என்பது போலச் சிரித்துக்கொண்டே சிலிர்த்துக்கொண்டே பார்த்துக்கொண்டிருக்கிறான். அணுஅணுவாய் ரசிக்கும் சாடிஸ்ட் உடல்மொழி. கிட்டத்தட்ட பத்து பேருக்கு மேலே இருக்கும் கூட்டத்தில் ஒருவனைப் போட்டு அந்த வாங்கு வாங்குகிறார்கள். திட்டுகிறார்கள். தள்ளிவிடுகிறார்கள். ஒரு கட்டத்தில் அடிக்கவே ஆரம்பித்துவிடுகிறார்கள். மாட்டிக்கொண்ட அவனுக்கு... ஏன்டா வாய் திறந்தோம் என்றிருக்கிறது. மன்னிப்பு கூட கேட்கிறான். சட்ட திட்டங்களை எல்லாம் கூட கோடிடுகிறான். ம்ஹூம். ஒரு மண்ணும் ஆவதில்லை. மயிரைப் பிடித்து ஆட்டி விளையாட்டு காட்டுகிறார்கள். இயலாமையும் அவமானமும் அவனைப் போட்டுக் குதறி எடுக்கிறது. கோச்சுக்குள் ஒரு பயல் வாய் திறப்பதில்லை. குரங்கு குட்டிக்கரணம் போட்டாலும் வேடிக்கை... கொலை நடந்தாலும் வேடிக்கை... உலகப் பொது விதி போல.

எங்க நம் பக்கம் திரும்பிவிடுவார்களோ என்றுதான் ஒவ்வொருவரும் அமைதியாக நடுக்கத்தோடு கண்டுகொள்ளாத மாதிரி சூனியம் வெறித்து அமர்ந்திருக்கிறார்கள். ஒவ்வொரு கண்ணிலும் சுய பயம். ஒவ்வொரு உடலிலும் தன்னைக் காத்துக்கொள்ளும் தவிப்பு. கொஞ்ச நேரந்தான். பொறுத்துக்கிட்டா வீடு போய்ச் சேர்ந்தரலாம். சல்லிப்பயலுகளிடம் நமக்கென்ன பேச்சு. யாரோ எப்படியோ போகட்டும். ஜீசஸ் என்ன காப்பாத்து என்ற உடல்பாவம் நம்மை உலுக்குகிறது.

ரயில் தன் வேலையில் கருப்பும் வெள்ளையுமாக இருளும் ஒளியுமாக கண்ணும் கருத்துமாக இருக்கிறது. சுரங்கத்துள் செல்லும் வேகம் தொடர்ந்து அந்தப் பயணத்தை ஒரு மர்மத்துள் நிகழ்த்திக்கொண்டே இருக்கிறது. இரும்புப் பெட்டிக்கு இதயங்கள் பற்றி எப்படி தெரியும். டிக்கட்டுகள்தான் ஒவ்வொரு மனிதனும்.

அடுத்து நடுத்தர ஜோடியின் பக்கம் வம்பனின் பார்வை செல்கிறது. ஏதேதோ பேசி வம்பிழுத்துவிட்டு அந்தக் கணவன் + கனவான் முன்பே அவன் மனைவியின் காதில் கன்னத்தில் முத்தமிடுகிறான். மனைவி அருவருப்பில் நெளிய... கணவன் தன் எதிர்ப்பைக் காட்டுவதே இல்லை. செயலற்றுச் சூனியம் பார்த்து அமர்ந்திருக்கிறான்.

நீயெல்லாம் புருஷனா என்று பொண்டாட்டி கணவன் கன்னத்தில் அறைய.. கணவன் வம்பன் மேல் காட்ட முடியாத கோபத்தைப் பொண்டாட்டி மீது காட்ட அங்கே குடும்பச் சண்டையில் சிரிக்கிறது ரயில் சத்தம். மானுடச் சோதனை போல வம்பனின் செயல்கள் இருந்தாலும் மகா எரிச்சலூட்டுகிறது. அதே போல இளஞ்சோடி பெண்ணைத் தொட்டு வம்பிழுக்கிறான். அவனும் ஒரு மானங்கெட்ட சூடு சுரணையற்ற மொக்க பயல்தான். நடுங்கித் தவிக்கிறான். முத்தத்துக்கு நீளும் நாக்கு காதலிக்காகப் பேசுவதற்கு நீள்வதில்லை. மற்றவர்கள் இயலாமையில் அவரவர் பார்வையில் இங்க ஒண்ணுமே நடக்கல என்பது போல அமர்ந்திருக்கிறார்கள். ரயில் இன்னும் கொஞ்சம் வேகமாய்ப் போய்த் தொலைந்தால் பரவாயில்லை என்று கூட திரைக்குத் தோன்றியிருக்கும். செயினை இழுக்கப் போன முதலாவது தனியனுக்கு இன்னுமே தண்டனை அவ்வப்போது சீண்டப்பட்டுக்கொண்டே இருக்கிறது.

பொறுமையைச் சோதிப்பது என்று ஒன்று இருக்கிறது அல்லவா... அதுதான் காட்சிகளாய் நம் கண்களில் ரத்தக் கொதிப்பை ஏற்றிக்கொண்டிருக்கிறது. திரையை விலக்கிக்கொண்டு உள்ளே சென்று குத்திப் போட்டு விடலாம் என்று கூடத் தோன்றுகிறது. அப்படி நக்கல் நையாண்டி, தொந்தரவு, கிண்டல் என்று தொடர்ந்து ஒவ்வொருவரையும் சீண்டிச் சிரித்து மிருகக் கிறுக்குகள் போல அவர்கள் நடந்துகொள்வது உண்மையில் துப்பாக்கிச் சூட்டுக்கும் கத்திக் குத்துக்கும் மேலே. தங்களைத் தாங்களே முட்டிக்கொண்டு செய்யும் கேலி பேரங்கள்... ஒருவரின் அமைதியைக் கெடுத்து அவர்களைக் குற்ற உணர்வுக்கு ஆளாக்கி அவர்களை ஒன்றுமில்லாமல் ஆக்கி சுயமற்ற ஜடமாக்க முடியும் என்று நம்ப வைக்கும் சுய ரூப அரூபங்களின் விளையாட்டு தொடர்கிறது. சக மனிதனுக்கு ஒன்று என்றால் ஒருவனும் எதுவும் கேட்காத... சுயமும் அற்ற பொதுவும் அற்ற வெற்று உடம்பு வடிவங்களை

நாம் காண்கிறோம். சொந்தப் பொண்டாட்டி, சொந்தக் காதலி, சொந்தப் பிள்ளை பிறரால் துன்புறுத்தப்படும்போதும் கூட எதிர்த்துக் கேள்வி கேட்கத் துணியாத மனித மனதில் வாழ்வும் சமூகமும் பற்றிய பிம்பம் என்னவாக இருக்கிறது என்ற கேள்வியை முன் வைக்கிறது திரைக்கதை.

கண்டெடுக்கப்பட்ட ஒரு ஆதி மனிதனின் தொடை எலும்பு முறிந்து சரியாகி இருக்கிறது என்று தெரிய வருகையில் அது சொல்லும் செய்தி என்ன என்று ஒரு பெரிய அறிவியலாளர் இப்படி விளக்குகிறார்.. தொடை எலும்பு முறிந்த மிருகத்தை மற்ற மிருகங்கள் கைவிட்டு விடுமாம். அந்த மிருகமே கூட தன் மரணத்தை மனம் வந்து ஏற்றுக்கொள்ளுமாம். அதேதான் ஆதி மனிதனுக்கும். ஆதி மனிதனின் தொடை எலும்பு முறிந்து சரியாகி இருக்கிறது என்றால்.... யாரோ எலும்பு முறிந்தவனுக்கு உதவி செய்திருக்கிறார்கள், வேட்டையாடி உணவளித்திருக்கிறார்கள், பாதுகாப்பு தந்திருக்கிறார்கள் என்றுதானே அர்த்தம். அது சொல்லும் குறிப்பு என்னவென்றால் ஆதி மனிதன் தீயைக் கண்டுபிடித்தபோது சக்கரத்தைக் கண்டுபிடித்தபோது மானுடக் கூட்டம் நாகரிகம் அடைந்ததாக வரலாறு சொல்கிறது. அதே நேரம் இன்னொரு புரிதல்... எப்போது அவன் மற்றவருக்காக யோசிக்க ஆரம்பித்தானோ உழைத்தானோ உதவி செய்தானோ அப்போது அது வீரியத்தோடு இந்தப் பூமியில் வேரூன்றியது. அதன்பிறகுதான் அவன் மிருகத்திடம் இருந்து வேறுபட்டிருக்க வேண்டும்.

ஆனால் இங்கே அது இல்லை. சக மனிதன் மானபங்கப்படுத்தப்படுகிறான். துன்புறுத்தப்படுகிறான். எரிச்சலூட்டப்படுகிறான். சுரண்டப்படுகிறான். அசிங்கப்படுத்தப்படுகிறான். மற்றவர் சுதந்திரத்தில் தலையிடப்படுகிறது. யாரும் யாருக்காகவும் குரல் கொடுப்பதில்லை. மற்றவர்களுக்காக நாம் கேட்கும்போதுதான் நமக்காக மற்றவர்களும் கேட்பார்கள்.. இல்லையா. ஆதி மனிதன் கண்டடைந்த அந்த நாகரிகம் நாக்கைப் பிடுங்கிக்கொண்டு நாண்டுகொண்டிருக்கிறது. மற்றவருக்கு என்ன நேர்ந்தாலும் கண்டுகொள்ளாமல் செல்போன் பார்த்துக்கொண்டிருக்கும் இன்றைய மனிதர்கள்தான் அந்தச் சூனியம் வெறித்த மனிதர்கள்... என்று முடிவுக்கு வர வேண்டியிருக்கிறது.

வம்பன்களின் கோபமும் அகங்காரமும் அத்து மீறுகிறது. இன்னும் இன்னும் பயங்கரமாகப் பங்கம் செய்ய ஆரம்பிக்கிறார்கள். ஐயோ அவனை யாராவது அடிங்கடா என்று நாம் இங்கே கத்துகிறோம். யார்தான் வந்து காப்பாற்றினார்கள்.. காப்பாற்ற யாரும் வந்தார்களா.. மனிதர்களின் ஒற்றுமைக்கு விலை என்ன.. மானுடச் சமூகம் என்பது எப்படி எல்லாக் காலத்திலும் இருந்திருக்கிறது..

வம்பன்கள் என்ன ஆனார்கள்.. கறுப்பின மனிதன் என்னவானான்.. அந்தப் பிச்சைக்காரன் யார்.. முதலில் மாட்டிய தனியன் என்ன ஆனான்.. மிலிட்டரிமேன்கள் என்ன ஆனார்கள்.. அந்த மனமற்ற மனிதர்கள் கூட்டம் என்னதான் முடிவெடுத்தது என்பதுதான் படத்தின் அவிழ்க்கப்படப் போகும் இறுதி முடிச்சுகள்.

வம்பன்களின் நடிப்பு... நடிப்பா அது. நடிப்பு வெடிப்பு. கையில் சரக்கு பாட்டிலோடு அந்த வம்பன்கள் செய்யும் அட்டூழியங்கள் மானுடக் குரூரத்தின் குறியீடுகள் (வம்பன்களில் ஒருவனின் பிந்தைய வெர்சன்தான் நம்ம புரியாத புதிர் ரகுவரன்). மற்றவர்களைத் துன்புறுத்தி இன்பம் காணும் அந்த உடல்மொழி... ராட்சஸம். காட்சிப்படுத்திய விதம் தேர்ந்த இயக்கம். திரையில் வரும் ஒவ்வொரு பாத்திரமும் வாழ்ந்திருக்கிறது.

மானுட முடிச்சுகள் மர்மம் நிறைந்தவை. அவிழ்க்கப்படாத வரை கை குலுக்கி ஒருவரையொருவர் வாழ்த்தி ஹெலோ ஹாய் என்று வாழ்ந்துவிடலாம். முடிச்சு அவிழும் நேரத்தில் வெறும் மாமிசப் பிண்டங்களை நேருக்கு நேராய்ச் சந்திக்க நேரிடும். அது அந்த இரவு போலக் கோடி இரவுகளைக் கொண்டிருப்பதை எதிர்கொள்ள இன்னும் இன்னும் இன்னும் நாகரிகம் வேண்டும்.


அந்த *"Where were you buddy?"* இன்னும் காதில் ஊசி கொண்டு குத்துகிறது.

**இயக்குநர் : Larry Peerce**

**மொழி : ஆங்கிலம்**

**ஆண்டு : 1967**

■


FILMING IN PROGRESS...
PADAIPPU
PRODUCTION
AISHWARYA DUTTA - SENDRAYAN
PRODUCTION NO:01
DIRECTED BY CHARLES RAYAPPAN
DOP MARUTHA NAYAGAM MUSIC DEV PRAKASH
EDITING TAMILARASAN CHOREOGRAPHER ABU & CHALS PRO NIKIL MURUKAN
CO PRODUCER SASIKUMAR NITHYANANTHAM
PRODUCED BY BALAJI NEDUNCHEZHIYAN
JINNA ASMI